# தமிழரசு

மலர் 4: 16-5-'74 :இதழ் 22


## போக்குவரத்தை ஒழுங்குபடுத்தப் புதிய முறை



போக்குவரத்தை ஒழுங்கு படுத்தத் தமிழகக் காவல்துறை ஒரு புதுமையைக் கையாண்டுள்ளது.

சாதாரணமாகச் சாலையின் குறுக்கே செல்லும் இடங்களில் இரு போலீசார் நின்று உதவி செய்து வருகின்றனரல்லவா? இப்போது முதன்முதலாகக் குதிரைப் படைப் போலீசார் இந்தப் பணிக்குப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றனர்.

சென்னை அண்ணாசாலையில் உள்ள அஞ்சல் அலுவலகம் முன்பு, சாலையின் குறுக்கே செல்லும் வழியில் இந்தக் குதிரைப்படைப் போலீசார் இருவர் இருபுறமும் நின்று, பாதையைக் கடந்து செல்வோருக்கு உதவி செய்து வருகின்றனர்.

குதிரையிலிருந்து போலீசார் சைகைகள் காட்டுவதை, சாலையைக் கடந்து செல்பவர்கள் நன்கு பார்க்க முடிவதால் தொல்லையின்றி மேலும் செல்வதற்கு இது வசதியாக இருக்கிறது.

நாள்தோறும் மாலை வேளைகளில் இந்தக் காட்சியை நாம் பார்க்கலாம். இது பற்றிச் சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் கூறியதாவது: "சென்னையில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்தால்; மேலும் பல இடங்களில் குதிரைப்படைப் போலீசார் பயன்படுத்தப்படுவார்கள்."

போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த இடத்தில் ஒலி பெருக்கி மூலம் சாலைப் பாதுகாப்பு விதிகளைக் கூறி வருவதையும் கேட்கலாம். சாலையில் நடந்து செல்பவர்கள், வண்டியோட்டிகள் முதலானோர் சாலை விதிகளைக் கடைப்பிடிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டால் சாலை விபத்துக்களே இல்லாத நிலையை உருவாக்கலாமல்லவா?

இந்த இதழுடன்

இலவச இணைப்பு

## 'மாநில சுயாட்சி'

முதல்வர் கலைஞரின் சட்டப் பேரவை, மேலவை உரை

# இரசாயன உர விற்பனையாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

1—4—1974 முதல் உரம் விற்பனை செய்வதற்குச் சான்றிதழ் பதிவு செய்தல், நகல் பெறுதல், புதுப்பித்தல் ஆகியவற்றைத் தமிழக அரசு கீழ்வரும் முறையில் மாற்றியுள்ளது :

1. 'பி' படிவம் சான்றிதழ் சில்லரை வியாபாரியாகப் பதிவு செய்வதற்கு அல்லது புதுப்பித்தலுக்கு ரூபாய் 50 ஒவ்வொரு ஆண்டுக்கும் செலுத்த வேண்டும்.

2. 'பி' படிவம் சான்றிதழ் பதிவு செய்தல் அல்லது இதை மொத்த வியாபாரிகள் புதுப்பிப்பதற்கு ரூபாய் 500 மட்டும் செலுத்த வேண்டும்.

3. 'ஈ' படிவம் சான்றிதழ் பதிவு செய்தல் அல்லது ஒவ்வொரு கலப்பு உரத்திற்கும் ரூபாய் 25 மட்டும்.

4. ''ஈ.ஈ'' படிவத்தில் ஒவ்வொரு தனி கலவை உரமும் ஒரே தடவையில் 25 டன்கள் வரை தயாரிக்க, சான்றிதழில் புதுப்பிக்க ரூ. 10 மட்டும் (இது குறிப்பிட்ட கால அளவில் புதுப்பிப்பதை பொறுத்தது).

5. இரண்டாம் நகல் பெறுதல் அல்லது 'ஈ' அல்லது ''ஈ-ஈ'' கூடுதல் படிவங்கள் பதிவு செய்ய ரூ. 10 மட்டும் செலுத்த வேண்டும். (இது மொத்த, சில்லரை வியாபாரிகள் இருவருக்கும்).

மாற்றப்பட்ட தொகை விவரங்கள் 30-3-74 தமிழ் நாடு அரசு இதழில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. 1974—75-ஆம் ஆண்டு உரிமம் புதுப்பிப்பவர்களோ அல்லது புதிதாக விற்பனை செய்ய விரும்புபவர்களோ, மேற்கூறிய அரசு ஆணைப் படி கட்டணங்கள் செலுத்த வேண்டும்.

1328/74
2

ஏற்கனவே பழைய விகிதத்தில் கட்டணங்கள் செலுத்தியிருப்பவர்கள், புதிய ஆணைக்கும், பழைய திற்கும் உள்ள வித்தியாசத் தொகையை உடனடியாகச் செலுத்திப் பதிவு செய்ய வேண்டும்.

1957 உரக் கட்டுப்பாட்டுச் சட்டப்படி உர வினியோக கணக்குகளை இரசாயன உர ஆய்வாளர், தலைமை இரசாயன ஆய்வாளர் ஆகியோருக்கு அனுப்ப 7-புதியபடிவங்களை தமிழ்நாடு வேளாண்மை இயக்குநர் தயாரித்துள்ளார். இப் புதியமுறை 1—4—74 முதல் நடை முறைக்கு வந்துள்ளது. இப் படிவங்கள் பற்றிய விளக்கங்கள் 26—3—74-ஆம் நாள் அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டுள்ளது. சான்றிதழ் பதிவு செய்யும் பொழுதோ, அல்லது புதுப்பிக்கும் பொழுதோ வியாபாரிகளுக்கு இப் படிவங்களின் பிரதிகள் அந்தந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகளிடம் கிடைக்கும். உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை சிறப்புற செயல்படுத்த 1—4—74 முதல் கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்களாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக மாவட்ட வேளாண்மை அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது. இந்தச் சிறப்பு அலுவலர்கள் புதிய சான்றிதழ்களை வழங்குவார்கள்.

நடப்பு ஆண்டிற்கு, பழைய உரிமங்களை புதுப்பித்தலுக்கு நடைமுறையில் இருந்தபடி அந்தந்த மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் கவனிப்பார்கள்.

ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திற்கும் அந்தந்தப் பகுதிகளுக்கு இரசாயன உர ஆய்வாளராகப் பணி புரிய ஒரு துணை வேளாண்மை அதிகாரியையும் அரசு நியமித்திருக்கிறது.

# இரு கரங்கள்



**முதல்வர் கலைஞர்**

இன்று திருச்சியில் நீங்கள் அனைவரும் ஒருங்கு கூடி, உங்களுக்குக் கிடைத்த வெற்றியைக் கொண்டாடுகின்ற வகையில் இந்த விழாவை ஏற்பாடு செய்திருப்பதாக முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நீங்கள் இந்த வெற்றியைப் பெற யாரோடு போராடினீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நீண்ட காலமாக நடைபெற்ற போராட்டம் என்று திரு நாகலிங்கம் குறிப்பிட்டார். நீண்ட காலத்திற்கு முன்பு போராட்டம் தொடங்கியது உண்மையாக இருக்கலாம். ஆனால் போராட்டத்தின் இயல்பு மாற்றப்பட்டு, நானும் நீங்களும் சேர்ந்துதான் போராடி இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும்போதும், திரு வெங்கடாசலம் பேசும்போதும் ஒன்றை உதாரணமாய்க் குறிப்பிட்டார்கள். பிரிந்து இருந்து பணியாற்றிய ஜோடி மாடுகளையும், வண்டிக் காரனையும், வண்டியையும் ஒருவர் குறிப்பிட்டார். இன்னொருவர் ஒன்றாக இருக்கிற எலியையும், தவளையையும் உதாரணமாகக் குறிப்பிட்டார்.

நான் இந்த இரண்டு உதாரணங்களையும் கடந்து, வருவாய்த் துறையையும், வளர்ச்சித் துறையையும் இரண்டு கரங்களுக்கு ஒப்பிட்டுத்தான் என்னைப் பொறுத்த வரையில் கருதுகிறேன். இரண்டு கரங்கள் தனித் தனியாகத் தமக்குரிய காரியங்களைச் செய்கின்றன என்றாலும் இரண்டும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. அந்த வகையில் இரண்டும் சேர்ந்து சில காரியங்கள் செய்ய வேண்டும் என்கின்ற நேரத்தில் இரண்டு பேரும் இந்த நாட்டு நலனுக்காக, மக்கள் மேன்மைக்காக, துறை வேறுபாடு கருதாமல்—மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாக வைத்துச் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகவே, இதைப் போராட்டம், வெற்றி என்று எல்லாம் வர்ணிக்க வேண்டாம். இது அரசாங்கத் துறையில் இருக்கின்ற வருவாய்த் துறைக்கும், வளர்ச்சித் துறைக்கும் நடைபெற்ற போராட்டம் அல்ல. சில பல நிலைமைகளுக்கு, அழுத்தம் திருத்தமான கொள்கைகளுக்கு, சில போக்குகளுக்கு இடையில் நடைபெற்ற சமாதானங்கள்—அவைகளுக்குக் கிடைத்த சமரசமான ஏற்பாடுகள் என்கிற வகையில் இதைக் கருதிக் கொள்ள வேண்டுமே அல்லாமல், இதன் மூலம் யாருக்கும் பகையுணர்ச்சி ஏற்படாத அளவுக்கு இரு துறைகளும் பார்த்துக்கொள்ள வேண்டும். இரண்டு துறைகளையும் நிர்வகிக்க வேண்டிய அமைச்சர் என்ற காரணத்தால் அந்தப் பொறுப்போடு நான் பேச வேண்டியவனாக இருக்கிறேன்.

அன்பில் தர்மலிங்கத்துக்குப் பரவாயில்லை. உங்கள் துறை வாழ்த்துக்களை மட்டும் பெற்றால் போதும்.

அமைச்சர் சாதிக் பாட்சாவுக்கு வருவாய்த் துறை வாழ்த்துக்களை மட்டும் பெற்றால் போதும்.

ஆனால் நான் இரண்டு துறையின் வாழ்த்துக்களையும் பெற வேண்டும். ஆகவே, நான் இந்த இரண்டு துறைகளையும் கேட்டுக் கொள்வேன். நாட்டு நலனில் அக்கறைகொண்டு, ஒன்றுபட்ட கருத்தோடு இருவரும் பணியாற்ற வேண்டுமென்ற முறையில்தான் இந்தப் பிரிவு ஏற்படுகிறதே அல்லாமல் வேறு அல்ல.

அன்பில் தர்மலிங்கம் இதற்கு முன்பு நடந்த விழாவில் கலந்துகொண்டு பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இந்தச் சோதனையிலே நாம் வெற்றி பெற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வீட்டில் வளர்ந்து விட்ட பிள்ளை, வயதுக்கு வந்த பிள்ளை, என்னிடம் பொறுப்புக்களைக் கொடுத்துப் பார், நான் செய்து காட்டுகிறேனா இல்லையா என்று கேட்டு, பொறுப்புக்களைக் கொடுத்த பிறகு அதைச் சரிவர நிறைவேற்றாமல் போய் விட்டால் பலர் பேசுவார்கள். அது வரை பேசாமல் இருந்த ஊரார், தெருவினர் கூடச் சொல்லுவார்கள். ‘அப்போதே கொடுக்க வேண்டாம் என்று சொன்னேன்'' என்பார்கள். அவர்கள் உண்மையில் சொல்லியிருக்க மாட்டார்கள்; இருந்தாலும், அப்பொழுதே கொடுக்க வேண்டாம் என்று சொன்னேன் என்று சொல்வார்கள். ஆகவே, அந்தப் பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்றிக் காட்டியாக வேண்டும். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே கொடுத்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே, தாமதமாகக் கொடுத்தார்களே என்று சொல்லுகிற வகையில் நீங்கள் நடந்துகொண்டால் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைகிற இடத்தில் இருக்க வேண்டும்.

இந்தப் பிரகடனத்தின் விளைவை இந்த நாடு அனுபவிக்க வேண்டும். நீங்கள் ஒரு கதை கேட்டிருப்பீர்கள். அது உங்களுக்குத் தெரிந்த கதைதான். இரண்டு பிள்ளைகளிடம் ஆளுக்குப் பத்து ரூபாய் கொடுத்து வீட்டை நிரப்புங்கள் என்று சொன்ன தகப்பனாரையும், அதை வாங்கிக் கொண்டு போய் 10 ரூபாய்க்கு வைக்கோல் வாங்கி நிரப்பிய ஒரு பிள்ளையையும் விளக்கு ஏற்றி வைத்த இன்னொரு பிள்ளையையும் உங்களுக்குத் தெரியும்.

நான் பார்க்கப் போகிறேன், எந்தப் பிள்ளை வைக்கோலை நிரப்பப் போகிறது; எந்தப் பிள்ளை விளக்கு ஏற்றி வைக்கப் போகிறது என்பதை. இரண்டு பிள்ளைகளும் விளக்கு ஏற்றி வைக்கும் என்று நம்புகிறேன்; ஏற்றி வைக்கவேண்டும் என்று வேண்டுகிறேன்.

**திருச்சியில் 21—4—74-ல் ஊராட்சி வளர்ச்சித் துறை அலுவலர்கள் கூட்டத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.**



# எழில்மிகு ஏர்க்காடு

ஒரு காலத்தில் ஏரிக்காடாய் இருந்த பகுதியே இன்று எழில் மிக்க ஏர்க்காடாய்க் காட்சி யளிக்கிறது. உதகமண்டலத் தைக் கோடை வாழுமிடங் களின் ராணி என்ருல் ஏர்க் காட்டை இயற்கையின் இள வரசி என வர்ணிக்கலாம்!

**இயற்கையின் இளவரசி:**

வானேக்கி வளர்ந்திருக்கும் வெண் தேக்கு மரங்கள்; காப்பிக் காடுகள், மா, பலா, பேரி, குலே வாழைத் தோப்பு கள்; துள்ளி வரும் தேனருவி ; மாயா ஜாலங்கள் செய்யும் மேகக்கூட்டங்கள் ; இன்னிசை எழுப்பும் புள்ளினங்கள்; இத மான இன்காற்று; நகர நாக ரிகம் அதிகம் ஊடுருவாத அமைதியான சூழ்நிலே . . . இயற்கை எழிலின் அரவணேப் பில் இன்முகங் காட்டிக் கவர்ச் சியாகக் காட்சியளிக்கிருள் ஏர்க்காட்டுஇளவரசி! ஏர்க் காட்டில் விளேயும் காபி, ஏராள மான அந்நியச் செலாவணி யைத் தேடித் தருகிறது.

**அமைப்பு :**

மல்லாபுரம் தொடருக்கும், மஞ்சவாடிக் கணவாய்க்கும் இடையே உள்ள பெரிய மலேத் தொகுதியே சேர்வராயன் மலேத் தொடராகும். இத் தொடரை வன்னியாற்றுப் பள்ளத்தாக்கு இரண்டு பகுதி களாகப் பிரிக்கின்றது. இவற் றின் மேற்குப் புறத்தின் தென் பகுதியில் அமைந்திருப் பது ஏர்க்காடு ஆகும்.

சேலத்திலிருந்து 18 கல் தொலேவில் உள்ளது ஏர்க்காடு. சேலத்திலிருந்து ஏர்க்காட்டுக் கும், சேலத்திலிருந்து ஏற் காடு வழியாக சுவின்டன் பாலத்துக்கும் நிறையபேருந்து கள் செல்கின்றன. கோடைப் பருவத்தில் ஏர்க்காடுசெல்லவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன. ஏர்க்காட்டின் தட்பவெப்ப நிலே என்றும் 85 பாகை எஃப்-க்கு மேல் போகாமலும், 55 பாகை எஃப்-க்கு கீழ் இறங்காமலும் இருப்பதால் எப்போது வேண் டுமானுலும் அங்கு சென்று தங்கி வரலாம்.

மே திங்கள் 11-ஆம் நாள் முதல் 19-ஆம் நாள் முடிய ஏர்க்காட்டில் கோடை விழா நடை பெறுகிறது. சென்ற ஆண்டுதான் கோடை விழா துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கோடை நாள் விழாவைச் சிறப்பிக்கும் வகையிலே, ஏர்க்காட்டின் சிறப்புக் குறித்து இங்கே கட்டுரை இடம் பெறு கிறது.

**லூப் ரோடு :**

ஏர்க்காட்டில் ஏறத்தாழ 20 கல் தொலேவு பரந்து கிடக்கும் தொடர்ச் சாலேயே லூப் ரோடு; இந்தச் சாலேயின் இரு மருங்கும் இயற்கை எழில் தவழ்ந்து குலுங்குகிறது.

**இளேஞர்களின் இன்பபுரி ஏரிக்கரை:**

ஏர்க்காட்டு இளவரசியின் கழுத்தை அலங்கரிக்கும் முத் தாரமாகத் திகழ்வது அங்கு உள்ள அழகிய ஏரியாகும். ஏரியின் தெளிந்த நீரும், ஏரியைச் சுற்றி அடர்ந்து படர்ந்துள்ள பசுமையான மரங்களும், ஏரியின் நீர்ப் பரப்பின் மர நிழல்களுக்கு இடையே மறைந்து விளேயா டும் மேகக் கூட்டங்களும் பார்ப்பதற்குப் பரவசமூட்டும் காட்சிகளாகும். ஏரிக் கரை மீது நடை போடலாம். நடை சலித்தால் குறும் படகுகளில் ஏறிப் பனி நீரில் பவனி வர லாம். சுருங்கக் கூறின் இளே ஞர்களுக்கேற்ற இன்பபுரி இந்த இடம்!

**அண்ணு பூங்கா :**

ஏரிக்கு எதிரே அழகாக அமைக்கப்பட்டுள்ளது 'அண்ணு பூங்கா.' இயற்கையின் எழிலே செயற்கைச் சூழலில் கண்டு களிப்பதற்கேற்ற சிறந்த






இடம் இது. உட்கார்ந்தும், உலாவியும் மன் மகிழ்ச்சி கொள்ளலாம். இப் பூங்காவுக் கருகே சென்ற ஆண்டு உருவாக்கப்பட்ட அருமையான சிறுவர் பூங்கா இளஞ் சிட்டுகளுக்கு இன்பமளிக்கவல்லது. அண்ணா பூங்காவில் நடைபெறும் மலர்க் காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைகிறது.

**பாவையின் பீடம் :**

ஏர்க்காடு ஏரிக்கு அடுத்த முக்கியத்துவம் பெற்ற இப் 'பாவையின் பீடம்' (Lady's seat) ஆகும். இப் பீடத்தின் மேல் நின்று கொண்டு கீழே பார்த்தால் ஒரு பக்கம் பிரமிப்பும், மறுபக்கம் பதட்டமும் ஏற்படுகிறது. 'அதளபாதாளம்' என்பார்களே, அதைப் பார்க்கலாம். இங்கிருந்து சேலம் சந்திப்பு, சேலம் நகரம், கஞ்ச மலை, மேட்டூர் அணை ஆகியவற்றைத் தெளிவாகக் காணலாம். இதேபோன்று 'ஒடுக்கம்' (Retreat கிறித்துவப் பாதிரிகளாவதற்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. இங்குள்ள அற்புதமான தேவாலயம் அவசியம் பார்க்கவேண்டிய ஒன்று) என்ற இடத்திலிருந்தும், 'பகோடா முனை' (Pagoda point) இதன் உச்சியிலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் அடிவாரத்துக்குச் சென்று மேலேறி வருவது நல்ல உடற்பயிற்சியாகும்!, இந்த முனையிலிருந்தும் பார்த்தால் தூரக் காட்சிகள் கண்களுக்கினிமையாக உள்ளன. இவ்விடங்களில் நிற்கையில் மேகக் கூட்டங்கள் நம்மை அப்படியே அணைத்துக்கொண்டு மெய்சிலிர்க்க (குளிரால்!) வைக்கின்றன.

**மலர்த் தோட்டம்:**

'ஆர்ச்சிடேரியம்' (Archidarium) எனப்படும் மலர்த் தோட்டங்கள் இந்தியாவிலேயே இரண்டு இடங்களில் தான் உள்ளன. ஒன்று ஷில்லாங்கில் மற்றொன்று ஏர்க்காட்டில்தான்! இது போன்ற மலர்த் தோட்டங்கள் வெளி நாடுகளில் பிரபலமாக உள்ளன. அங்கு மலரலங்கார வேலைகளுக்காக அவை பெரிதும் பயன்படுகின்றன. ஏர்க்காடு மலர்த் தோட்டத்தில் மண்ணில், க லில், மரத்தில் வேர் விட்டு வளரும் மலர்ச் செடிகளை மிகுந்த கவனத்தோடு பயிராக்கி வருகின்றனர். பல மலர்களின் பெயர்கள் வாயில் நுழைவதில்லை; எனினும் அவை கண்கொள்ளாக்காட்சி. இங்கு மலரும் மலர்கள் நாற்பது நாட்கள் வரை வாடாமல் உள்ளனவாம்!

**கவின்மிகு அருவியும் கரடிக் குகையும் :**

கிளியூர்அருவி ஏர்க்காட்டின் எழில் மிக்க இடங்களில் ஒன்றாகும். நூறு அடி உயரத்திலிருந்து வீழும் அருவி இன்பமயமான காட்சியாகும். 'அள்ளி வைத்த வெள்ளி மலை உருகி வந்து கலையலையாய்க் கொட்டுகின்ற அழகுக் காட்சி' அது. நீங்கள் அங்கு செல்லும் போது மழை பெய்து தண்ணீர் இருக்க வேண்டும்! இதே போன்றதுதான் 'கரடிக்குகை' (Bear's care) யும். அங்கு சென்று சிரமத்தோடு தேடினால் சிறு குகையைக் காணலாம் ; ஆனால் கரடி எதையும் காண முடியாது. எனினும், அங்குள்ள 'கரடிக் குகை பங்களா'வைப் பார்த்து வரலாம். 90 ஆண்டுகள் பழமையான இந்த பங்களா ஒரு காலத்தில் சிறப்புற விளங்கியிருந்த குற்றவியல் வழக்குரைஞராயிருந்த நார்ட்டன் என்ற ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்தது. இவ்விரு இடங்களும் சிறந்த 'சுற்றுலாத் தலங்கள்' ஆகும்.

**கோயில் :**

சேர்வராயன் கோயிலுக்குச் சென்றுவராமல் ஏற்காட்டுக்குச்








சென்று திரும்பியதாகக் கூற முடியாது. சேர்வராயன் மலைத் தொடரின் உச்சப் பகுதி இது தான். எனவே, இதை 'ஏற்காட்டின் தொட்டபெட்டா' எனக் கூறலாம்! ஆண்டுதோறும் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவையொட்டி நடைபெறும் சந்தை பிரசித்தி பெற்றது. இக் கோயிலுக்குக் கீழே செல்வதாக நம்பப்படும் மர்மச் சுரங்கக் குகை எங்குச் செல்கின்றது என்பதை இதுவரை யாராலும் கண்டறிய முடியவில்லையாம்! கோயிலுக்குச் செல்கையில் அலுமினியச் சுரங்கத்தையும் பார்க்கலாம்.

**மூலிகைப் பண்ணை :**

இந்திய விடுதலைக்குத் தீவிரமாகப் போராடியவர்களில் ஒருவரும் சிறந்த தேச பக்தரும், தொழிலாளர் தலைவருமாயிருந்த திரு பி.பி. பவானி சிங்கால் உருவாக்கப்பட்டு, அவரது மகன் திரு பி.பி. ஜக்கு சிங்கால் உருவாக்கப்பட்டு, பொறுப்புடன் பராமரிக்கப்பட்டு வரும் 'மூலிகைப் பண்ணை' மனித குல நன்மைக்கான மனித முயற்சியின் சின்னமாகும். இப் பண்ணையில் பயிராகும் அபூர்வ மூலிகைகளைப் போன்றே இவ்விருவரும் அபூர்வப் பிறவிகளாவர்; இவர்களையும், இவர்களது மூலிகைப் பண்ணையையும், பார்த்து வருவதே நல்ல அனுபவமாகும். இங்கு தயாராகும் சேவராய் பிரம்மி எண்ணெயும், சேவராய் பிரம்மி சூரணமும், பல்வகை மணத் தைலங்களும் பிரசித்தி பெற்றவை.

**பள்ளிகள் :**

ஏர்க்காட்டில் உள்ள மான்ட் போர்டு பையன்கள் பள்ளியும் (Mont fort) புனித இதயப் பெண்கள் பள்ளியும் (Sacred Heart Convent) பிரபலமானவை. வெளிநாடுகளிலிருந்தும் பல மாணவ மாணவிகள் இப் பள்ளிகளில் பயின்று வருகின்றனர். மான்ட்போர்டு பள்ளிக் கட்டடங்களும், விடுதிகளும், சிறு மிருகக் காட்சிச் சாலையும், பிற வசதிகளும் நமக்குப் பிரமிப்பையூட்டுகின்றன. இங்குள்ள அழகான நீச்சல் குளத்தில்தான் சென்ற ஆண்டு 'கோடை விழா'வின் போது நீச்சல் போட்டியை இப் பள்ளி நடத்தியது! ஏர்க்காட்டில் கல்லூரி எதுவும் இல்லை!

**படிப்பு விளையாட்டு :**

ஏர்க்காடு நூலக, விளையாட்டு கழகம் (Yearcard Library and sports club) சிறந்த பணியாற்றி வருகிறது. படிப்பதற்கும், விளையாடுவதற்கும் பல வசதிகள் இங்கே உண்டு.








டென்னிசும், பூப்பந்தாட்டமும், சீட்டாட்டமும் சிறப்பாக விளையாடப்படுகின்றன. இவை பிடிக்காதவர்களுக்குப் புத்தகங்களும், பத்திரிகைகளும் உள்ளன.

**தங்க வேண்டுமா?**

பயணிகள் தங்குவதற்கேற்ற அருமையான இடங்கள் இரண்டு ஏர்க்காட்டில் உள்ளன. ஒன்று, தமிழக அரசின் சுற்றுலாத்துறை, ரூ. இரண்டரை இலட்சம் செலவில் கட்டியுள்ள அழகும் வசதியும் ஒருங்கே அமைந்துள்ள 'சுற்றுலா மாளிகை' ஆகும். ஏரியைப் பார்த்துக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் இம்மாளிகை பல நவீன வசதிகளைக் கொண்டது.

இரண்டாவது, தனியார் துறையில் சிறப்புடன் நிர்வகிக்கப்படும் 'ஓட்டல் சேவராய்ஸ்'. சேலம் தந்த சிறந்த தேசபக்தர்களுள் ஒருவரான, திரு என். இராமசாமி உடையாரின் பெரு முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த ஓட்டல் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் திருப்தியளிக்கும் வகையில் வசதிகள் கொண்டுள்ளது. இவையன்றி, ஏர்க்காட்டு நகரியத்துக்குச் சொந்தமான பயணிகள் விடுதியும், என். ஜி. ஓ.வின் விடுதியும் உள்ளன.

**கோடை விழா :**

ஏர்க்காடு வரலாற்றிலேயே முதன் முறையாகக் 'கோடை விழா'வைக் கோலாகலமாகக் கொண்டாட தமிழக அரசு சென்ற ஆண்டு ஏற்பாடு செய்தது. மே மாதம் 27-ஆம் தேதியிலிருந்து ஜூன் மாதம் 3-ஆம் தேதி வரை இவ் விழா கொண்டாடப்பட்டது. இப்போது மலர்க் காட்சி, பொருட்காட்சி, கலைப்பொருள் கண்காட்சி, வீட்டுத்தோட்டப் போட்டி, நீச்சல் போட்டி, கலை—இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியவை சிறப்புற நடத்தப்பட்டன. இவ்வாண்டும் இக் கோடை விழா மே 11-ஆம் தேதி துவங்கி ஒரு வாரம் நடைபெற உள்ளது.

**போய் வாருங்கள் :**

சினிமாவும், சீமைச் சாராயக் கடைகளும் ஏர்க்காட்டில் இல்லாதவை! அதே போன்று வாடகை ஊர்திகளும் அங்கு இல்லை. 'டாக்சி' என்ற பெயரில் சில சிறிய பழைய கார்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன! கோடை விழாவை முன்னிட்டு 'மினி பஸ்கள்' விடப்படுவதால் பல இடங்களுக்கும் சென்று வருவது எளிதாக இருக்கும். சீதோஷ்ண நிலை எப்போதும் சீராக இருப்பதால் ஏர்க்காட்டுக்கு எப்போது வேண்டுமாயினும் சென்று வரலாம். அவசியம் பார்க்க வேண்டிய — தமிழகத்துக்கே சிறப்பாக உள்ள இடங்களில் குறிப்பிடத்தக்கது ஏர்க்காடு என்பதில் ஐயமில்லை.

**—க. வெங்கடேசன்**

---

**சென்னை ஓட்டேரி மருத்துவமனையில் பணியாற்றிய தலைமை நர்சு திருமதி சகுந்தலா சீனிவாசராவ், ஓய்வு பெறுவதற்கு முன்பே காலமாகி விட்டதால் தமிழ்நாடு அரசின் புதிய குடும்ப நல நிதித் திட்டப்படி, அவரது கணவர் திரு சீனிவாச ராவிடம் பத்தாயிரம் ரூபாய் நிதியை, சென்னை மருத்துவத் துறை இயக்குநர் திரு எம். நாராயணன் அவர்கள் வழங்குகிறார்கள். நடுவிலிருப்பவர் ஓட்டேரி மருத்துவமனை அதிகாரி ஏ. கதிரேசன்.**





கலையழகு மிளிரக் கம்பீரமாய் எழுந்து நிற்கும் அறிஞர் அண்ணா சுற்றுலா மாளிகை சிலப்பதிகாரக் கலைக் கூடத்திற்கும் கடலுக்கும் இடையில் உள்ளது.

# பூம்புகாரில் புதிய பணிகள்!



சிலப்பதிகாரக் கலைக் கூடத்தின் உள் முற்றத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள கண்ணகி சிலை. சிலம்பு வடிவான பீடத்தில் கண்ணகியும் மாதவியும் குடிகொண்டுள்ளனர்.



பூம்புகாரிலுள்ள மீனவப் பெருமக்களுக்காக உருவாகிவரும் மீனவர் குடியிருப்பு 500 வீடுகள் இந்த முறையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் அமைக்கப்பட இருக்கின்றன. இதன் முதற்கட்டமாக 250 வீடுகள், ரூபாய் 10 லட்சம் செலவில் கட்டப்படுகின்றன. 39 குழுவினருக்கு 25 லட்சம் ரூபாய் செலவில் விசைப் படகும் நைலான் வலையும் விரைவாகத் தருவதற்குத் திட்டமிடப்பட்டுப் படகு வாங்கும் வேலை நடந்தேறி வருகிறது.

# உணவுத்துறையின் ஒப்பற்ற தொண்டுகள்



அனைத்திந்தியப் பொது வாழ்க்கைச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 260 ஆயிற்று. வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளியானது, 1973, மார்ச்சில் 236 ஆக இருந்து 1973, டிசம்பரில் 289 ஆக உயர்ந்தது. நுகர் பொருள்கள், குறிப்பாக உணவுப் பொருள்கள் கிடைப்பது மிகவும் அரிதாய் இருந்தது. டில்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளிலிருந்து அரிசி, கோதுமை, பயறு வகைகள், சமையலுக்கான எண்ணெய்கள் போன்ற இன்றியமையாப் பொருள்கள் கூட இருந்த இடந்தெரியாமல் மறைந்தன.

## தமிழ்நாட்டில்

இத்தகைய இருளார்ந்த சூழ்நிலையில், நாடு நலிந்து தவித்துக் கொண்டிருக்கையில் பொது மக்களும் உற்பத்தியாளர்களும் மன நிறைவு பெறும் வகையில் தமிழ்நாடு தனித்து நின்று தன்னை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைச் சமாளித்தது. ஒரு சிலரால் செயற்கையாக ஏற்பட்ட நெருக்கடிகள் தவிர, மற்றப்படி, மாநிலம் முழுதும், போதுமான அளவுகளில், நியாயமான விலைகளில் பொருள்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில், வாழ்க்கை உணவுச் செலவுப் புள்ளி 1973, மார்ச்சில் 216 ஆக இருந்து 1973, டிசம்பரில் 241 ஆக உயர்ந்தது என்பதையும், அனைத்திந்திய அளவில் இவ்வுயர்வு 22.4 சத வீதமாக இருக்க, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இவ்வுயர்வு 11.6 சதவீதம்தான் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

முக்கியமாக, தானிய வகைகள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்த காரணத்தால் இந்த விலை உயர்வு ஏற்பட்டது. பயறு வகைகள், 4 சதவீதம் விலை குறைந்தன. எண்ணெய்கள் 14 சதவீதம் விலை உயர்ந்தன. எதிர்பாராத விதமாக, எண்ணெய் வித்துக்கள் நமது மாநிலத்தில் குறைந்த அளவில் தான் உற்பத்தியாகின்றன. இவ்வகையில் நாம் பெரும்பாலும் பிற மாநிலங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. தானியங்களின் விலை 15.5 சதவீதம் உயர்ந்தது.



உரம், பூச்சி கொல்லி மருந்து, பயிர்நோய் பூச்சிக் கொல்லி மருந்து ஆகிய வகைகளில் பற்றுக்குறை ஏற்பட்டிருந்தும் இயற்கை நம்மிடம் காட்டிய பரிவு, ஏறத்தாழ நல்ல விளைச்சல் ஏற்பட்டது ஆகியவையே இதற்கு ஓரளவு காரணமாகும். இருப்பினும், நமது மாநிலத்திலுள்ள மன நிறைவளிக்கும் நிலைமைக்கு இதுவே முழுக் காரணமாகச் சொல்ல முடியாது. சில மாநிலங்களில் மிகு விளைச்சல் காணப்பட்ட போதிலும், நெருக்கடி மிகுந்து காணப்பட்டது.

## மனநிறைவளிக்கும் சூழ்நிலை

நியாயமான விலைகளில் போதுமான அளவுக்கு வெளிச் சந்தைக் கொள்முதல் செய்தல், உரிய நேரத்தில் ஆதரவு விலையில் கொள்முதல் செய்தல், லெவி முறை மூலம் உற்பத்தியாளர்களுக்குத் தேவையற்ற தொல்லை தருவதைத் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாளர்களுக்கு எல்லா வகையிலும் அரசு ஊக்கமளித்தது.

அரிசி வணிகத்தைப் பொறுத்தவரையில், அவசியமான இடங்களிலெல்லாம் எளிய மக்களுக்குப் பொதுப் பங்கீட்டு முறை மூலம் பொருள்களை வழங்கியும் மாநில முழுவதிலும் கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவற்றின் மொத்த வணிகத்தை மேற்கொண்டும் பாதகமான சூழ்நிலை உருவாகும் என்று தோன்றிய சமயங்களில் இன்றியமையாப் பொருள்களின் விலை உயராமல் இருக்க, வணிகம் மற்றும் தொழில் வகைகளில் தொடர்ந்தாற்போல் தொடர்பு கொண்டும் பொது மக்களின் நலனில் அக்கறை காட்டியுள்ளது.

பயறு வகைகளுக்கு விற்பனை வரி விலக்கு அளிப்பது மக்களுக்கு நன்மை பயக்கும் என்று தெரிய வந்ததால், பயறு வகைகளுக்கு விற்பனை வரியிலிருந்து அரசு விலக்களித்துள்ளது. தமிழ்நாட்டில் மன நிறைவளிக்கும் சூழ்நிலை நிலவி வருவதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

## அரிசி பற்றிய கொள்கை

அரிசி, நெல் வணிகத்தை முறைப்படுத்தவும், விலைவாசி ஒரு நிலையிலிருக்குமாறு பார்த்துக் கொள்ளவும், ஒரு சீரான பங்கீட்டு முறையைச் செயற்படுத்தவும் இயலும் வகையில் தமிழ்நாடு 19 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஏற்றுமதி செய்யும் மாவட்டத்தின் ஆட்சித் தலைவரால் வழங்கப்படும் அனுமதிகள் மேலன்றி மற்றப்படி ஒரு மண்டலத்திற்கும் மற்றொரு மண்டலத்திற்கும் இடையே அரிசி-நெல் கொண்டுசெல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

1973-74-ஆம் ஆண்டில், பொதுப்பங்கீட்டு முறைக்கும் அண்டை மாநிலங்களுக்கு உரிய தருணத்தில் வழங்கவும், மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டுக்கு அனுப்பவும் தேவைப்படும் தானியங்களைப் பெறும் பொருட்டு வணிகர்கள், ஆலையதிபர்கள் ஆகியோர் மீது லெவி விதிக்கும் கொள்கையைத் தொடர்ந்து அரசு பின்பற்றியது. அறுவடை, விற்பனை நிலைமைகளையொட்டி, வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு பகுதிகளில் லெவி விதிக்கப்பட்டது. 20 சதவீதம் முதல் 33.33 சதவீதம் வரை வெவ்வேறு விகிதங்களில் லெவி விதிக்கப்பட்டது.



இந்த லெவி விதிப்பு மூலம் நாம் 1,14,027 டன் அரிசியைச் சேகரிக்க முடிந்தது. மேலும், குறுவைப் பருவத்தின்போது அறுவடையான நெல்லை விற்பனை செய்யும் வகையில் சிக்கல்கள் தோன்றியபோது ஆதரவு விலையில் இந்திய உணவுக் கழகமும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகமும் சேர்ந்து 91,367 டன் அரிசி வாங்கப்பட்டது. பல்வேறு வகைகளில் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் அளவு மொத்தம் 2,09,398 டன்னாகும். இதில், சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் பொதுப்பங்கீட்டு முறைக்காக 98,590 டன் அரிசி எடுத்துக் கொள்ளப்பட்டது. மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டிற்கு மாநிலத்தின் பங்காக 1,11,435 டன் அரிசி கொடுக்கப்பட்டது, இரு தரப்பு உதவித் திட்டத்தின் கீழ் பின்வரும் மாநிலங்களுக்கு 34,000 டன் அரிசி கொடுக்கப்பட்டது.—

| | டன்கள். |
|---|---|
| மராட்டியம் | ...10,000 |
| குசராத் | ...11,000 |
| கேரளம் | ... 9,000 |
| கர்நாடகம் | ... 3,000 |
| மேற்கு வங்கம் | ... 1,000 |
| ஆக மொத்தம் | ...34,000 |

### குறைந்த வருமானமுள்ளவர்களுக்காக !

சென்னை, கோயம்புத்தூர் மாநகர்களிலுள்ள, திங்களொன்றுக்கு ரூ. 300 அல்லது அதற்குக் குறைவான வருமானமுள்ள குடும்பங்களுக்கு முறையின் மரபில் (Informal Distribution System) அரிசி வழங்கும் முறையை நாம் தொடர்ந்து மேற்கொண்டோம். இதன் மூலம் 28.25 இலட்சம் பேர் பயன்பெற்றனர். எல்லையோரப் பகுதியைத் தாண்டி அரிசி கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க வேண்டிக் கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டி வந்த கன்னியாகுமரி மாவட்ட எல்லையோரப் பகுதிகளில் அரிசி கிடைக்கச் செய்யவும், நெல் உற்பத்தியாகாத இப்பகுதியில் நியாய விலையில் அரிசி கிடைக்கச் செய்யவும் விளவங்கோடு வட்டத்திற்கும் கல்குளம் வட்டத்தைச் சேர்ந்த பத்துக் கிராமங்களுக்கும் பொதுப் பங்கீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் அப்பகுதியிலுள்ள 10.91 இலட்சம் மக்கள் பயன் பெற்றனர்.

### கோதுமை வாணிகத்தில் வெற்றி !

நமது மாநிலத்திற்கு, 1972-73-ல் மொத்தம் 3,59,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க, 1973-74 இல் மொத்தம் 1,47,000 டன் அளவுக்கே கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த இரு மாதங்களில் கோதுமை ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. மாதந்தோறும் சாதாரணமாக 34,000 டன் கோதுமை ஒதுக்கப்படுவது வழக்கம். ஆனால், தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 9,000 டன்தான்.

கோதுமை ஒதுக்கீட்டில் இத்தகையதொரு கடுமையான வெட்டு இருந்த போதிலும், கோதுமை உணவு உண்போர், நீரிழிவு நோயாளிகள், கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்தும் ஓட்டல்காரர்கள், ரொட்டிக் கடைக்காரர்கள், சேமியா தயாரிப்பாளர்கள், பிஸ்கட் தயாரிப்பாளர்கள் ஆகியோரின் நியாயமான தேவைகளையும் நாம் நிறைவு செய்து, சமாளித்து வருகிறோம். கோதுமை, கோதுமைப் பொருள்கள் மொத்த வணிகத்தைமுழுமனத்தோடும் வெற்றிகரமாகவும் மேற்கொண்ட ஒரே அரசு தமிழ்நாடு அரசாகத்தான் இருக்க முடியும்.

தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு நிறுவனத்தின் கடைகளிலிருந்தும், கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்தும் பின் கண்ட கட்டுப்பாடு விலைகளில் பொதுமக்களுக்குக் கோதுமையும், கோதுமைப் பொருள்களும் விற்கப்படுகின்றன :

கிலோ கிராம் ஒன்றுக்கு :— கோதுமை ரூ. 1.00 ; மைதா ரூ. 1.30 ; ரவை ரூ. 1.30 ; கப்பி ஆட்டா ரூ. 1.00.

தற்போது, கோதுமை உணவு உண்போருக்கும், நீரிழிவு நோயாளிகளுக்கும், திங்களொன்றுக்கு, முறையே, ஆறு கிலோ, ஐந்து கிலோ வீதங்களில் நாம் கோதுமை வழங்கி வருகிறோம். கோதுமையைப் பெருமளவில் பயன்படுத்துவோரின் 1971-72 ஆண்டு மொத்தக் கணக்கு, 1972, ஏப்ரலிலிருந்து 1972, செப்டம்பர் வரை கோதுமை விற்பனை மீது கட்டுப்பாடு இராத, பற்றாக்குறை இராத நிலை இருந்தபோது அவர்கள் வாங்கிய கோதுமையின் அளவு ஆகியவற்றில் எது குறைவோ அதைக் கணக்கிற் கொண்டு, அவர்களுக்காகக் கோதுமை ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும் வேறுபாடுகள் காணப்படும் நேர்வுகளில், 1969-70, 1970-71, 1971-72 ஆண்டுகளுக்கான மொத்தக் கணக்குகள் கணக்கிற் கொள்ளப்படுகின்றன. கிடைக்கக் கூடிய கோதுமையின் அளவுக்கேற்ப, ரொட்டி தயாரிப்பாளர்களுக்கு அதிக முக்கியத்துவமும், சேமியா தயாரிப்பாளர்களுக்குக் குறைந்த முக்கியத்துவமும் அளிக்கப்பட்டுப் பங்கீடு முறைப்படுத்தப்படுகிறது.

பங்கீடு அட்டை பெற்றுள்ளோருக்கு எஞ்சிய கோதுமையிலிருந்து சிறு அளவில் கோதுமை வழங்கப்படுகிறது. நம்முடைய குறைந்த அளவு நியாயமான தேவைகளை நிறைவு செய்ய நமக்கு 20,000 டன் கோதுமை தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.



### சர்க்கரைப் பங்கீடுகள்

சர்க்கரைத் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குச் சர்க்கரை வழங்குவதை மத்திய அரசு முறைப்படுத்துகிறது. இந்நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 70 சதவீதத்தை இந்திய அரசு லெவி சர்க்கரையாக எடுத்துக் கொண்டு, அந்தச் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதுடன் பல்வேறு மாநிலங்களின் சொந்தப் பயனுக்காகவும் ஒதுக்கீடு செய்கிறது. சர்க்கரைத் தொழிற்சாலைகள், எஞ்சிய 30 சதவீத அளவு சர்க்கரையை இந்தியாவின் எப்பகுதியிலும் உள்ள சந்தைகளில் தாராளமாக விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரையானது நாடு முழுவதும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2.15 என்ற குறிப்பிட்ட விலையில் விற்கப்பட வேண்டும். 1973-74-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு மொத்தம் 1,24,660.12 டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பொருள் வழங்கு ஆணையாளர், மாநிலத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள சர்க்கரையை, நபர்வாரி அடிப்படையில் மாவட்டங்களுக்குப் பங்கீடு செய்கிறார். தேவைப்படும் அளவை நிர்ணயிக்கக் கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன



| வருமானம். | நகர்ப் பகுதிகள். | கிராமப் பகுதிகள். |
|---|---|---|
| ஒரு திங்களுக்கு ரூபாய் 300-ம் அதற்குக் குறைந்தும். | 2 கிலோ. | 1 கிலோ. |
| ஒரு திங்களுக்கு ரூபாய் 301 முதல் ரூபாய் 499 வரை. | 4 கிலோ. | 2 கிலோ. |
| ஒரு திங்களுக்கு ரூபாய் 500-ம் அதற்கு மேற்பட்டும். | 6 கிலோ. | 4 கிலோ. |

மேற்சொன்ன வகையில் பார்த்தால், இம்மாநிலத்திற்குத் திங்களொன்றுக்கு மொத்தம் 14,000 டன் சர்க்கரை தேவைப்படும்.

தமிழ் நாட்டில் அவ்வப்போது துணை மொத்த வணிகர்களாகச் (Sub-Whole Sales) செயல்படும் கூட்டுறவுகளின் உதவியுடன், தமிழ்நாடு உணவுப் பொருள் பங்கீட்டுக் கழகமே சர்க்கரை மொத்த வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள், கூட்டுறவுகள், தனிப்பட்ட விற்பனையாளர்கள் ஆகியோர் மூலம் சில்லறைப் பங்கீடு செய்யப்படுகிறது. தனிப்பட்ட விற்பனையாளர்கள் செய்யும் சர்க்கரைப் பங்கீட்டைக் கூட்டுறவுகளே படிப்படியாக மேற்கொள்ள வேண்டுமென்று அரசு அண்மையில் கொள்கை முடிவெடுத்தது. பங்கீட்டு முறை அணுவளவேனும் ஊறு ஏற்படாவண்ணம் இக்கொள்கை பின்பற்றப்படுகிறது.

சர்க்கரைப் பங்கீடு செய்யும் செயல் நோக்கத்திற்காகத் தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புற, கிராமப்புற மக்களனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டில் 94,82,604 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



**சமையல் எண்ணெய்கள்**

தமிழ்நாட்டில் வேர்க்கடலை நீங்கலாக ஏனைய வகைகளின் உற்பத்தி மிகவும் குறைவே என்ற உண்மை நமக்குத் தெரியும். வேர்க்கடலை விற்பனைக்கு லெவி விதிப்பதன் மூலம் கடலெண்ணெய்யின் விலையைக் குறைப்பதற்குத் தீர்வு காண அரசு முயன்றுள்ளது. வேர்க்கடலை விற்பனைக்கு 25 சதவீத லெவி விதித்து அவற்றைக் கொண்டு எண்ணெய் தயாரித்து நமது மக்களுக்குக் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 6 வீதம் விற்பனை செய்யவும் அரசு விரும்பியது. இதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கவில்லை. இவ்வகையில் தமிழகம் மீண்டும் மீண்டும் முறையிட்டுக் கொண்ட போதிலும், பயனுள்ள பதிலேதும் இந்திய அரசிடமிருந்து வரவில்லை.

**மண்ணெண்ணெய்**

இந்திய அரசு நமக்கு மாதந்தோறும் சராசரியாக 30,000 மெட்ரிக் டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்து வருகிறது. தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய்க்குத் (Grude oil) தட்டுப்பாடு வந்தபோது இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. 1974, பிப்ரவரியில் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு 20,000 மெட்ரிக் டன் அளவுக்குக் குறைந்துவிட்டது. மண்ணெண்ணெய், உயர் வேக டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் சீரமைக்கப்பட்டதன் காரணமாக டீசல் மண்ணெண்ணெய் கலப்படம் குறைந்தது. எனவே மண்ணெண்ணெய்த் தேவை சுமார் 15 முதல் 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. எனினும் நம்முடைய தேவை இன்னமும் 24,000 மெட்ரிக் டன் முதல் 25,000 மெட்ரிக் டன் வரை என்ற அளவில்தான் உள்ளது.

**பாதுகாப்பு நடவடிக்கைகள்**

பல்வேறு உரிமம் வழங்குதல் மற்றும் கட்டுப்பாடு விதித்துறைகளை அரசு செவ்விய முறையில் செயல்படுத்தி வந்துள்ளது. உணவு தானியங்களை எல்லைக்கப்பால் கடத்திச் செல்வதைத் தடுக்கும் பொருட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகள், சோதனைச் சாவடி ஏற்பாடுகள் ஆகியவை கடுமையாக்கப்பட்டுள்ளன. எல்லை நெடுகச் சுற்றுக் காவல் பணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கடத்தல் நடக்கும் முக்கியமான இடங்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் துறையினரின் பணிகள் பயன்படுத்தப்பட்டன. சட்டப்படியான எல்லைப் பகுதிகளில் உணவு தானியங்களைக்கொண்டு செல்வது நுழைவு அனுமதிச் சீட்டு மூலம் முறைப்படுத்தப்பட்டது. நெல், அரிசி ஆகியவற்றின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எல்லையோரப் பகுதியைச் சுற்றி இரண்டாவது பாதுகாப்பு மண்டலம் ஒன்று தனியாக அமைக்கப்பட்டது. புலனாய்வுத்துறை உணவுப் பொருள் குற்றங்கள் குறித்த பிரிவு, பதுக்கி வைக்கப்பட்டுள்ள உணவுத் தானியங்கள் மற்றும் இன்றியமையாத பொருள்கள் ஆகியவற்றை வெளிக் கொண்டு வரப் பல திடீர்ச் சோதனைகளை நடத்தியது.

இந்த முன்னேற்பாடுகள் தவிரப் பிரபலமான கள்ளக் கடத்தல்காரர்கள் மற்றும் பதுக்கல்காரர்கள் ஆகியோர், உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**பாலைவனப் பசுஞ்சோலை**

மொத்தத்தில் உணவுத் தானிய நிலைமையைத் தமிழ்நாடு அரசு, கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. தேசிய அரங்கில் தமிழ்நாடு ஒரு பாலைவனப் பசுஞ்சோலையாக இருக்கிறது என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

1974-ஆம் ஆண்டின் சம்பா அறுவடைக் காலத்தில் வெளிச் சந்தை மூலமும் லெவி முறை மூலமும் 1.25 இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்வது என்று அரசு முடிவு செய்துள்ளது. இதை உறுதி செய்வதற்குத் தமிழ்நாடு நெல், அரிசிப்போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் இம்

மாநிலம் 19 தனி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் கொள்முதல் செய்யும், கொண்டு செல்லும் தானியங்கள் மீது 25 முதல் 40 சதவீதம் லெவி விதிக்கப்பட்டுள்ளது. 1974-ஆம் ஆண்டு பிப்ரவரி இறுதி வரையில் லெவி மூலமும் வெளிச் சந்தை மூலமும் 79,688 டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த இருப்பானது பொதுமக்களுக்குப் பங்கீடு செய்யப் போதுமானது. நெருக்கடியான நேரங்களில் மூடையிருப்புக்களை வைத்திருக்கவும் அரசு கருதியுள்ளது.

**கள்ளச்சந்தை ஒழிந்திட...**

தனியார் வர்த்தகமும், அரசின் நிர்வாகத்தில் உள்ள பொதுப் பங்கீட்டு முறையும் ஒருங்கே செயல்பட்டு வருகின்ற கூட்டுப் பொருளாதாரத்தில் பொதுமக்களுக்கு ஈடு செய் விலையில் தானியம் வழங்குகையில் செயற்கைப் பற்றுக் குறையையும் கள்ளச் சந்தையையும் ஏற்படுத்தும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இம்முறையினால் உண்மையாகப் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் இடர்ப்பாடுகளுக்குஉள்ளாகின்றனர். வஞ்சக வியாபாரிகள் ஆதாயம் அடைகின்றனர். இந்தத் தீமையைத் தடுக்கும் பொருட்டு உணவுத் தானியங்களை நாம் ஈடுசெய் தொகை ஏதுமின்றிக் கட்டுபடியாகக் கூடிய விலைகளில் பங்கீடு செய்து வருகிறோம். இதனால் சீரான முறையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. கள்ளச் சந்தை ஏற்படுவதற்கான வாய்ப்பும் குறைக்கப்படுகிறது.

தானியவகைகள், எண்ணெய் ஆகியவை குறித்த மட்டில் தனியார் வணிகத்துடன் இப்பொருள் விற்பனையில் தமிழ் நாடு உணவு வழங்கு கழகம் அதிக அளவில் பங்கெடுத்துக் கொள்வதே நமக்கு வெற்றி அளிக்கக் கூடிய ஒரே கொள்கையாகும். இப் பண்டங்களில் 25 சதவீதத்தை நாம் எட்டினோமாயின் பொருளாதாரத்தில் தாழ்ந்த மக்கள் உள்ள பகுதிக்கு நியாய விலையில் வழங்க முடியும். பங்கீட்டு முறையில் மட்டுமின்றி விலையை நிர்ணயிப்பதிலும் நமது கை ஓங்கியிருக்கும். வரும் ஆண்டில் இது குறித்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

குழந்தை உணவு போன்ற பற்றுக்குறை ஏற்படக் கூடிய இன்றியமையாப் பொருள்களுக்கும் இதே கொள்கை கையாளப்படும்.

**கைப்பற்றிய உணவுப் பொருள்கள்**

தலைச்சுமையாக ஓரளவு உணவு தானியம் கடத்தப்பட்டாலும், திட்டமிட்டு லாரிகள் மற்றும் போக்குவரத்து வாகனங்களில் உணவு தானியங்களைக் கடத்திச் செல்வதை நம்மால் தடுக்க முடிந்துள்ளது. கடந்த ஆண்டில் உள்நாட்டுப் பாதுகாப்பு விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள், கைப்பற்றப்பட்ட உணவு தானியங்களின் அளவு, வழக்கு தொடரப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1973-ல் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் 10,505.

கைப்பற்றப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் அளவு —அரிசி 31,026.23 குவிண்டால்; நெல், 20,458.75 குவிண்டால்; மோட்டா ரக தானியங்கள், 8,295.83 குவிண்டால்; வனஸ்பதி, 37.18 குவிண்டால்; மண்ணெண்ணெய், 139,743 லிட்டர்; உரம், 1,321.98 குவிண்டால்; கோதுமையும், கோதுமைப் பொருள்களும், 845.54 குவிண்டால்; சிமிட்டி, 770.12 குவிண்டால்; குழந்தை உணவு, 78 டின்கள்; டீசல், 4,559 லிட்டர்; பெட்ரோல், 5,414 லிட்டர்; இயந்திர எண்ணெய், 810 லிட்டர்; சமையல் எண்ணெய், 2,044 லிட்டர்; சர்க்கரை, 42.01 குவிண்டால்; கைப்பற்றப்பட்ட பண்டங்களின் மதிப்பு, ரூபாய் 62,25,542; உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, 31; இந்தியப் பாதுகாப்பு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, 126 ; தண்டனை அளிக்கப்பட்டவர்கள், 20; விசாரணையில் உள்ள வழக்குகள், 28; புலன் விசாரணையில் உள்ள வழக்குகள், 73; தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள், 5.

கள்ளக்கடத்தலையோ, பதுக்கலையோ கண்டுபிடிக்க உதவினாலும் அல்லது கண்டுபிடித்தாலும், கண்டுபிடிக்கும் அளவில் கணிசமான பரிசு அளிக்கும் முறையைப் புகுத்தியுள்ளது அரசு. அவ்வாறு கண்டுபிடிக்கும் அளவில் ஒரு சதவிகிதம் உடனடியாகவும் பறிமுதல் செய்யப்பட்டவுடன் ஒன்பது சதவிகிதமும் பரிசு அளிப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

**தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம்**

நடைமுறை நடவடிக்கைகளில் அரசின் உணவு தானிய வணிகம் சிக்கிக்கொள்ளாமல் தடுப்பதற்காக 'தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தை' அரசு நிறுவியது. இக்கழகம் 24-4-1972-ல் பதிவு செய்யப்பட்டது. 1-7-1972-ஆம் நாள் செயல்படத் தொடங்கியது.

1973-74-ஆம் ஆண்டில், கோதுமை, கோதுமைப் பொருள்கள், சர்க்கரை ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் இக்கழகம் ஒரு மொத்த வியாபார அமைப்பாக விளங்கியது. இக்கழகம், முழுக் கோதுமையாக வழங்க 9,160 டன் கோதுமையை இந்திய உணவுக் கழகத்திடமிருந்து பெற்றுக் கொண்டது. கோதுமைப் பொருள் அரைவை ஆலைகளுக்கு வழங்கப்பட்ட 130,240 டன் கோதுமையிலிருந்து தயாரிக்கப்பட்ட கோதுமைப் பொருள்களைப் பெருமளவில் பயன்படுத்துவோருக்கு நேரடியாகவும், பொதுமக்களுக்குத் தனது சில்லறை விற்பனைக் கடைகள் சர்க்கரை விற்கும் சில்லறைக் கடைகள் மூலமும் வழங்குவதற்காக மேற்படி ஆலைகளிலிருந்து இக்கழகம் எடுத்துக் கொண்டது.

சர்க்கரையிலும் இதைப் போலவே மாநிலத்திற்குரிய பங்கு அளவைப் பல்வேறு ஆலைகளிலிருந்து பெற்று அதனைத் தனது சில்லறை விற்பனைக் கடைகள், கூட்டுறவுச் சங்கங்கள், தனி வணிகர்கள் மூலம் வழங்கியது.

தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகம், இந்திய உணவுக் கழகத்துடன் இணைந்து லெவி முறையிலும் நேரடிக் கொள்முதல் முறையிலும் அரிசி கொள்முதல் பணியில் இறங்கியது. 1973-ஆம் ஆண்டின் சம்பா அறுவடைக் காலத்தில் இக்கழகம் 81,232 டன்கள் அரிசியைக் கொள்முதல் செய்தது. நேரடியாக 18,213

டன்களை வாங்கியது. மாநிலம் முழுவதற்குமான பங்கீட்டு முறை, வெளி மாநிலங்களுக்குப் போக்குவரத்து ஆகிய இரண்டையும் இருதரப்பு ஏற்பாடுகளின் வாயிலாகக் கவனித்து வந்தது. நடப்பு சம்பா அறுவடைக் காலத்தில் லெவி முறையிலும் நேரடிக் கொள்முதல் வகையிலும் அதிகக் கொள்முதல் செய்வதற்கான பெரும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

தற்சமயம் நிலவுகின்ற பற்றாக்குறையைப் போக்குவதற்காக வெளி மாநிலங்களில் இருந்து 5,579 டன்கள் பயறுகளை வாங்கிச் சொந்த விற்பனைக் கடைகள் மூலம் இக்கழகம் வழங்கியது. குழந்தைகள் உணவு, சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றை உள்ளூரில் இருப்பு வைத்திருப்பவர்களிடமிருந்து இக்கழகம் வாங்கித் தனது சில்லறைக் கடைகள் மூலம் வழங்கியது.

பொதுப் பங்கீட்டு முறையில் ஒருசில தரங்களை நிர்ணயிப்பதற்காகத் தமிழ்நாடு உணவு வழங்கு கழகம், பொதுப் பங்கீட்டு முறையை மேலும் சிறந்த முறையில் நடத்தக்குறைந்தது 100 கடைகளைத் திறக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அப்பொழுதுதான் பொதுப் பங்கீட்டு முறை செயல்படும் முறைபற்றிப் பொதுவாக நாம் ஒரு தீர்ப்புச் சொல்ல முடியும். இதுவரையில் 102 கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

பொதுப் பங்கீட்டு முறையை மேலும் உகந்த முறையில், மக்களுக்குப் பணி செய்யும் வகையில் அமைப்பதற்காகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பண்டங்களின் விற்பனையைக் கூட்டுறவுகளிடம் ஒப்படைக்க அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இக்கொள்கைக்கிணங்க, தனித்து இயங்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் எங்கெல்லாம் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அவர்களிடம் இந்த வாணிபம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனியார் வணிகர்களிடமிருந்து இந்த வாணிபம் எடுக்கப்பட்டுவிட்டது. இன்று மொத்தம் 9,842 சில்லறை விற்பனைக் கடைகள் உள்ளன. இவற்றில் அரிசி, சர்க்கரை, கோதுமைப் பொருள்கள் ஆகியவை விற்கப்படுகின்றன. இவற்றில் தமிழ்நாடு உணவு வழங்கு கழகத்தின் கீழ் இயங்குபவை 102 கடைகள். கூட்டுறவுகளால் நடத்தப்படுபவை 4,753. தனியார் அமைப்பில் இயங்குபவை 4,987.

1974-75-ஆம் ஆண்டில் இன்றியமையாத பொருள்களின் மொத்த விற்பனைப் பொது வாணிபத்தில் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் அதிகப் பங்கேற்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இறக்குமதியையே நம்பி இருக்கின்ற பற்றாக் குறைப் பொருள்களை வெளிச் சந்தையிலிருந்து அதிகம் பெற வேண்டியது தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் பொறுப்பாகும்.



## யாருக்கு அதிகம்?

வாழ்க்கை வரலாற்று நூல்கள் தமது தமிழ்நாட்டில் மிகவும் குறைவு ஆனால் மற்ற நாடுகளில் இவை அதிகம். உலகம் முழுதும் யாரைக் குறித்து அதிக நூல்கள் வெளிவந்திருக்கின்றன என்று ஆய்வு செய்யப்பட்டதில் சில விவரங்கள் கிடைத்துள்ளன.

ஏசு கிறிஸ்துவைப் பற்றித்தான் மிக அதிக அளவில் நூல்கள் வெளிவந்துள்ளன. ஏசுவைக் குறித்து வெளியிடப்பட்டுள்ள நூல்கள் 5152. ஷேக்ஸ்பியரைக் குறித்து 3172 நூல்கள், ஆபிரகாம் லிங்கனைக் குறித்து 2319, நூல்கள், ஜார்ஜ் வாஷிங்டனைக் குறித்து 1755 நூல்கள், நெப்போலியனைக் குறித்து 1735 நூல்கள் வெளிவந்துள்ளன!

### அரசு ஊழியர்களுக்கு

தமிழ்நாடு உணவு வழங்கு கழகத்தின் மாதிரி, சில்லறை விற்பனைக் கடைகள் செயல்படு முறையைப் படிப்படியாக மேலும் மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இக்கடைகளின் பணிகள் விரிவுபடுத்தப்பட்டுப் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ள அதிகமான பண்டங்கள் இக்கடைகள் மூலம் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். உணவு தானியங்கள் மொத்த வணிகத்தைத் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்திடம் வைத்துக்கொள்வதும், சில்லறை விற்பனை முழுவதையும் கூட்டுறவுகளிடம் படிப்படியாக ஒப்படைப்பதும் அரசின் கொள்கையாக இருக்கும்.

அரசு ஊழியர்கள் அதிகமான அளவில் உள்ள இடங்களில், தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது. ஆரம்பக் கட்டமாக சென்னை மாநகரில் அவ்விதமான ஐந்து கடைகள் திறக்கப்படும். இத்திட்டங்கள் பின்பு படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இக்கடைகளில் அரசு முகமை மூலமாக விநியோகிக்கப்படும் பொருட்களுடன் மொத்த விலையில் கொள்முதல் செய்யப்படும். மற்ற இன்றியமையாப் பொருள்களும் இலாப நட்ட மற்ற முறையில் விற்பனை செய்யப்படும்.

உணவுப் பங்கீட்டுப் பணி என்பது இன்றியமையாததொரு பணியாகும். இதில் பொதுமக்கள் ஒத்துழைத்தால் அல்லாமல் உணவு வழங்கல் துறை திறம்படச் செயல்பட இயலாது. பண்டங்கள் விலை ஏற்றம், பற்றாக்குறை, கட்டுப்பாடுகள் ஆகியவை பற்றிய வதந்திகள் பண்டங்கள் பதுக்கப்படுவதற்குக் காரணமாகின்றன. இதனால் செயற்கை முறையான 'கிராக்கி'யும், பற்றாக்குறைகளும் ஏற்படுகின்றன. இதில் மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்.

# தமிழனின் பெருமிதம்!



## 3 வரிசைகளில்

**இன்றே வாங்குங்கள்**

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

மொத்தப் பரிசுகள்: **7902**

மொத்தப் பரிசுத் தொகை:

# ரூ. 10,47,000

3 முதல் பரிசுகள்

# ரூ. 1,00,000

ஒவ்வொன்றும்

66வது குலுக்கல் நாள்: **12-6-1974**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொ ர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

# முதலாண்டு மாணவர்களின் முத்தான படைப்புகள்



'சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்' வரைந்து வரைந்து பக்குவப்பட்ட கரங்களால் வனப்புமிக்க ஓவியங்கள் உருவாகின்றன. ஆனால் இக்கலையினைப் பயிலத் துவங்கிய சில மாதங்களிலேயே முழுமையான ஓவியப் படைப்புகளுக்கு நிகராகும் அற்புதத்தினைச் செய்து காட்டினர், அரசினர் கலைத்தொழில் கல்லூரியின் முதலாண்டு மாணவர்கள். ஏப்ரல் 3-ஆம் நாளிலிருந்து 7-ஆம் நாள்வரை சென்னை அரும்பொருட்காட்சியகத்தின் நூற்றாண்டு விழாப் பொருட்காட்சி மண்டபத்தில் இம்மாணவர்களின் ஓவியப் படைப்புகளைக் கொண்ட ஒரு கண்காட்சி நடைபெற்றது. தொழில்முறைக் கலைப் பள்ளியில் பயிலத் துவங்கியிருக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் முறையில் இக்காட்சி அமைந்திருந்தது.

நீர் வண்ணம், எண்ணெய் வண்ணம் ஆகியவற்றால் தீட்டப்பட்ட பல இயற்கைக் காட்சிகளின் ஓவியங்கள் சிறப்பாகக் காட்சியளித்தன. இவை தவிர கிரயான், பேஸ்டல் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட சித்திரங்களும் பெரிதும் கவர்ந்தன. அரசினர் கலைத் தொழில் கல்லூரியில் பயிலும் முதலாண்டு மாணவர்களில் 21 மாணவர்கள் வரைந்த 52 ஓவியங்கள் இக்கண் காட்சியில் இடம் பெற்றிருந்தன.

வெறும் கோடுகளால் தீட்டப்பட்ட ஒரு முதியவரின் சித்திரத்தைக் காட்சியில் கண்ட போது அதில் உயிர்த்துடிப்பினை உணர முடிந்தது.

மாறுபட்ட நோக்கோடு, ஆனால் சக்தி வாய்ந்த வண்ணச் சேர்க்கையினால் துணிவான முயற்சியைக் கையாண்டு நற்படைப்புகளை வழங்கியிருந்தார், இன்னொரு மாணவர். நவீன பாணி ஓவிய முறையில் இம்மாணவர் தாம் வரைந்திருந்த ஓவியங்களில் அவரது தனிக் கைத்திறனை வெளிக் காட்டியிருந்தார்.

சில மாணவர்களின் ஓவியங்கள், வண்ணக் கலவைகள் தேர்ச்சியாகக் கையாளப்பட்டிருந்ததைத் தெரிவித்தன. பாங்கான இந்த ஓவியங்களில் சிலவற்றைப் பாவையர்களும் வழங்கியிருந்தனர்.

சென்னையிலுள்ள இளம் ஓவியர்கள்-சிற்பிகள் சங்கம் இக்காட்சிக்குத் தனது ஒத்துழைப்பை நல்கியிருந்தது. மலரும் தருணத்தில் திறனைக் காட்டியிருந்த இந்த இளம் மாணவர்களின் அற்புத ஓவியப் படைப்புக்களைக் கலை உணர்வு மிக்க மக்கள் திரளாக வந்து கண்டுகளித்துப் பாராட்டியதோடு, அவர்களில் ஒரு சிலர் காட்சியில் வைக்கப்பட்டிருந்த 30-க்கும் மேலான ஓவியங்களை விலைகொடுத்தும் வாங்கிச் சென்றனர்!

— டி. பி. எஸ். எஸ்.

# தென்னார்க்காடு மாவட்டத்திற்கு ஏற்ற கேழ்வரகு இரகங்கள்

முக்கிய உணவு தானியப் பயிர்களில் ஒன்றாக விளங்கும் கேழ்வரகு, இந்தியாவில் 2.35 மில்லியன் எக்டேரிலும், தமிழ் நாட்டில் 0.32 மில்லியன் எக்டேரிலும் பயிரிடப்பட்டு வருகிறது. இது, பல்வேறு மண் மற்றும் காலநிலைகளில் நன்கு பயிராகிறது. கேழ்வரகு தானியம் பழுப்பு அல்லது முத்து வெள்ளை நிறத்தில் இருக்கும். பழுப்புநிறக் கேழ்வரகு இரகங்கள் அதிக மகசூல் கொடுக்கக் கூடியவை; ஆனால் குறைந்த அளவு புரதச்சத்துக் கொண்டவை. வெள்ளைநிறக் கேழ்வரகு இரகங்கள் குறைந்த அளவு மகசூலே கொடுக்கக் கூடியவை எனினும், அதிகப் புரதச்சத்துக் கொண்டவை. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பாலூர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ற கேழ்வரகு இரகங்களையும், அந்த இரகங்களைப் பயிரிடுவதற்கு ஏற்ற தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து நிலையையும் கண்டறிய 1969-70, 1970-71, 1971-72 ஆகிய ஆண்டுகளில் மே மாத விதைப்புப் பருவத்திலும், 1970-71, 1971-72 ஆகிய 2 ஆண்டுகளில் டிசம்பர் மாத விதைப்புப் பருவத்திலும் சோதனைகள் நடத்தப் பெற்றன.

'சாரதா', 'கோ. 7', 'பி.எல்.ஆர்.1' 'கோ-9' (வெள்ளை) ஆகிய 4 இரகங்களும், தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றில் 4 நிலைகளில் பயிரிட்டுப் பார்க்கப்பட்டன. தழைச்சத்தில் பாதியையும், மணிச்சததது, சாம்பல் சத்து ஆகியவைகளை முழு அளவிலும் அடியுரமாகப் பயிர்நடும் பொழுது இடப்பட்டது. 23 சென்டி மீட்டர் × 15 சென்டி மீட்டர் இடைவெளியில் இளம் நாற்றுகள் நடப்பட்டன. களை எடுத்தல், பாசனம் செய்தல், பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் முறையாக மேற்கொள்ளப் பெற்றன. அப்பரிசோதனைகளில் இருந்து பின்கண்ட பயன்தரும் முடிவுகள் கிடைத்துள்ளன.

மே-ஆகஸ்ட் பருவத்தில், 'கோ. 7' கேழ்வரகே மிகுந்த பயனளித்துள்ளது. மகசூலில் 'கோ. 7' கேழ்வரகு இரண்டு ஆண்டுகளில், 'பி.எல்.ஆர். 1' இரகத்தையும், மூன்று ஆண்டுகளிலும் 'கோ.-9' இரகத்தையும் மிஞ்சி உள்ளது! மேலும் இரண்டு ஆண்டுகளில் 'சாரதா இரகம் கொடுத்த அளவு மகசூலுக்குச் சமமாகவும், ஒரு ஆண்டில் சாரதாவைவிட மிஞ்சியும், கோ.7 இரகம் மகசூல் கொடுத்துள்ளது. மூன்று ஆண்டுகளிலும் 'கோ. 7' இரகம் சராசரியாக எக்டேருக்கு 2,452 கிலோ மகசூல் கொடுத்துள்ளது.

ஒப்பியல் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இரகங்களில் இச்சராசரி மகசூலே உயர்ந்த அளவாகும்! ஆகவே, மே மாதத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் கேழ்வரகு பயிரிடும் பகுதிகளுக்கு 'கோ. 7' இரகமே சிறந்தது என்பது புலனாகிறது.

1970-71-ஆம் ஆண்டில் டிசம்பர்-மார்ச்சுப் பருவத்தில், 'கோ. 7', 'கோ-9' இரகங்களை விட, 'சாரதா' இரகமே அதிக மகசூல் அளித்துள்ளது. ஆனால் 'பி.எல்.ஆர். 1' இரகத்திற்குச் சமமாகவே மகசூல் அளித்துள்ளது. அடுத்த ஆண்டில் இரகங்களின் மகசூலில் அதிக வேறுபாடு இல்லை. ஆயினும் 'சாரதா' இரகமும் 'பி.எல். ஆர். 1'. இரகமும் 'கோ. 7', 'கோ. 9' இரகங்களைவிடச் சிறந்தவை என்பதை நிரூபித்தன. சராசரியாக 'பி.எல். ஆர். 1' இரகம் எக்டேருக்கு 4,617 கிலோ மகசூல் கொடுத்துள்ளது. இது சாரதாவின் மகசூலைவிடச் சற்று அதிகமானது; 'கோ. 7'. 'கோ. 9' இரகங்களின் மகசூலைவிடச் சற்றேறக்குறைய 10 சத அளவு அதிக மகசூலாகும்!

ஆகவே, 'பெரும் ராகி' எனப்படும 'பி.எல்.ஆர். 1', டிசம்பர் மாதத்தில் கேழ்வரகு பயிரிடும் பகுதிகளுக்கு மிகவும் சிறந்ததாகும்! 'பி.எல்.ஆர். 1'-இரகத்தின் கதிர்கள் மூடிய கையைப்போல் இருப்பதுடன் எடையுள்ளதாகவும் இருக்கும்.

மேற்கூறிய இரு பருவங்களிலும் என்.பி.கே. அளவில் குறிப்பிட்ட வேறுபாடு உள்ளது. 90:45:45 என்ற அளவில் உரமிட்டபோது, மகசூல் அதிகமாகக் கிடைத்துள்ளது. 110:45:45 என்ற அளவில் உரமிட்டபோதும் அதே அளவு மகசூலே கொடுத்துள்ளது. எனவே, எக்டேருக்கு 90:45:45 (ஏக்கருக்கு 36:18:18) என்ற உர அளவே இரு பருவத்திற்கும் ஏற்ற இரசாயன அளவு என்பது தெளிவாகிறது.

எனவே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மே மாதத்தில் 'கோ 7' என்ற கேழ்வரகு இரகத்தையும், டிசம்பர் மாதத்தில் 'பி.எல்.ஆர். 1' என்ற கேழ்வரகு இரகத்தையும், எக்டேருக்கு 90:45:45 என்ற அளவில் இரசாயன உரமிட்டுப் பயிரிட்டுப் பயன்மிகு பெறுமாறு தென்னார்க்காடு மாவட்ட உழவர் பெருமக்களுக்குப் பரிந்துரைக்கின்றோம்.

—ஆர்.எம்.

> இலட்சியம் இல்லாத மனிதன், திசைகாட்டும் கருவி இல்லாத கலம் போன்றவன்.
>
> —ஆல்பரி.



# களவு செய்த பொருட்களை உளவு செய்து மீட்டுவோம்!



**மா**ர்ச் மாதம் 18-ஆம் நாள் மாலை 7.15 மணி!

காவல்துறை கண்ட்ரோல் அறைக்கு ஒரு தகவல் வருகிறது.

சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சென்னைத் தேனாம்பேட்டையிலுள்ள சித்தரஞ்சன் சாலைக்கு விரைகின்றனர்.

அங்கே—

மூன்று பேர் தம் அருகே இருந்த கழிநீர்க் குட்டையில் ஒரு பீடத்தை எறிவதைப் பார்க்கின்றனர். அவர்களிடமிருந்த ஒரு துணிமூட்டையையும் பிரித்துப் பார்க்கின்றனர். அதிலே சிலைகள் சில காட்சியளிக்கின்றன!

உடனே வட்டாரத் துப்பறியும் ஆய்வாளர் கழிநீர்க்குட்டையிலிருந்த பீடத்தையும், சிலைகளைக் கட்டியிருந்த நான்கு மூட்டைகளையும் கைப்பற்றினார். இவற்றுள் நான்கு சிலைகள் இருந்தன. 76.20 செ.மீ. உயரமுள்ள சிவகாமி சிலை ஒன்றும், 54.34 செ.மீ உயரமுள்ள உட்கார்ந்த நிலையிலுள்ள சிவபெருமான் சிலை ஒன்றும், 45.72 செ.மீ. உயரமுள்ள பார்வதி சிலை ஒன்றும், மற்றும் 25.40 செ.மீ. உயரமுள்ள சோமாஸ்கந்தர் சிலை ஒன்றும் இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

இவையன்றி ஒரே மரகதக் கல்லால் ஆன மூன்று தேவதைகள் உள்ள அழகிய சிலையும் கைப்பற்றப்பட்டது. இதன் உயரம் 30.48 செ.மீ.

கடத்தப்பட்ட இந்த ஐம்பொன்னாலான சிலைகள் தஞ்சை சோழ மன்னர்கள் காலத்தவையாம். இவற்றின் மதிப்பு ரூ. 40 இலட்சத்துக்கும் மேலாகும்.

இந்தச் சிலைகளைத் திருச்சிக்கு அனுப்பி அங்கிருந்து பம்பாய்க்கு விமானம் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு நடந்து கொண்டிருந்ததாம்!

தக்க தருணத்தில் இந்தக் கடத்தலைக் கண்டு பிடித்துச் சிலைகளைக் கைப்பற்றிய காவல்துறை அலுவலர்களைப் பாராட்ட வேண்டும். குறிப்பாகக் குற்றவியல் துறைத் துணை ஆணையாளர் திரு. டி. நாராயணசாமி பாராட்டுக்குரியவர்.

இந்தக் கடத்தல் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட மூவரில் ஒருவர் பம்பாயைச் சேர்ந்தவர். இது சம்பந்தமாக வழக்கொன்றும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட சம்பவங்கள் நமக்கு எவற்றை உணர்த்துகின்றன?

''சமுதாயம் என்னும் வயலில் காணப்படும் களைகளைக் களைந்தெறிவது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆலயங்களில்.உள்ள விக்கிரகங்கள் வழிபடுவதற்கே உள்ளன· வழிபடும் ஆண்டவனையே களவாடி விற்கும் இந்தக் கூட்டங்களைப் பற்றிய தகவலோ அல்லது அவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்கவோ நாம் காவல் துறையினருடன் ஒத்துழைக்க வேண்டும்.''

அன்றாடச் செய்திகளைப் படிக்கும்போது எத்தனையோ வகையான நூதனத் திருட்டுக்கள் பல்வேறு இடங்களில் நடப்பதை நாம் அறிகிறோம். கடந்த மூன்று திங்களில் இந்தியாவின் பல பாகங்களில் இது போன்ற சிலைத் திருட்டுக்கள் நடந்திருக்கின்றன. பெங்களூரில் நடந்த சிலைத் திருட்டில் நான்கு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆக்ராவில் ஒரு ஜைன ஆலயத்திலிருந்து மரகதம், தங்கச் சிலைகளும், பம்பாயில் புராதன விக்கிரகங்களும் களவு போயுள்ளன.

குற்றப் பிரச்சினையைத் திறமையாகவும், செவ்விய முறையிலும் சமாளிப்பதற்குத் தேவையான முயற்சிகள் அனைத்தையும் தமிழ்நாடு காவல்துறை மேற்கொண்டு வருகிறது. 1973-ல் 60 சதவீதம் வழக்குகளில் துப்புதுலக்கப்பட்டிருப்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

வெளிநாடுகளில் கலைப்பொருளாக மிகப் பெரிய தொகைகளுக்கு விற்கப்படும் கடவுளர் சிலைகள் கோவில்களிலிருந்து களவாடப்படுவது மட்டுமின்றி இவ்வகையில் புதியதொரு முறையும் பின்பற்றப்படுகிறது என்பது தஞ்சாவூர் மாவட்டத்தில் அண்மையில் தெரிய வந்தது.

சம்பந்தப்பட்ட கோவில் பூசாரி உடந்தையாக இருந்து தீவிரப் பங்கு கொண்டு உதவியதன் மூலம் குற்றவாளிகள் அசல் கடவுளர் சிலைகளை அகற்றிவிட்டு, இவற்றிற்குப் பதிலாக விலைகுறைந்த போலி கடவுளர் சிலைகளை வைத்துவிட்டுச் சென்றனர். இவ்வாறு அசல் சிலைகளுக்குப் பதிலாகப் போலி சிலைகளை மாற்றி வைத்த ஐந்து சம்பவங்களைக் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுச் சிறப்புப் பிரிவு 1973 ஆகஸ்டுக்கும் 1974 சனவரிக்கும் இடைப்பட்ட காலத்தில் கண்டுபிடித்தது.

திருவைகாவூரிலுள்ள விளவனேசுவரர் கோயிலுள்ள சந்திரசேகரர், பிரதோஷ நைனார் சிலைகள், சிறுகுடி கிராமத்தைச் சேர்ந்த அகஸ்தீசுவரர் கோயிலிலுள்ள நடராசர் சிலை, மாத்தூரைச் சேர்ந்த சோமாஸ்கந்தர் சுவாமி மற்றும் இரு அம்மன் சிலைகள், லால்குடியைச் சேர்ந்த விசுவநாதசுவாமி கோயிலிலுள்ள விநாயகர், பிரதோஷ நைனார் சிலைகள், திருவிடைவாசலைச் சேர்ந்த நடராசர், சிவகாமி சிலைகள் ஆகியவை அந்த ஏமாற்றுச் சம்பவங்களுக்கு இலக்கான சிலைகளாகும். இவை சம்பந்தப்பட்ட வழக்குகளெல்லாம் புலனாய்வில் உள்ளன.

சிலைத் திருட்டு என்றதும், சென்னை எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திலுள்ள 'திருட்டுச் சொத்துக்களின் கண்காட்சி'யும் நம் நினைவுக்கு வருகிறது.

இக்கண்காட்சியில் விலை உயர்ந்த வைர, தங்க நகைகள் பழங்காலச் சிலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள், வண்ணப் புடவைகள், மின்சாரப்பொருட்கள், செப்புக் கம்பிகள், புகைப்படக் கருவிகள் முதலியன காண்போரை விந்தைக்குள்ளாக்குகின்றன.

ஒருவர் ஒரு சைக்கிளைத்தான் ஓட்ட முடியும். சர்க்கசில் வேண்டுமானால் இரண்டு சைக்கிளை ஓட்டலாம். ஆனால், ஒரே ஓர் ஆசாமியோ 81 சைக்கிள்களை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறார்! அதாவது களவாடியிருக்கிறார். அந்தச் சைக்கிள் அணிவகுப்பையும் இங்கே காண முடிகிறது.

காட்சியிலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒரு கதை சொல்லும். ஆம், அது எவ்வாறு களவாடப்பட்டது என்ற கதைதான்!

1974 மார்ச் மாதத்தில் நகரக் காவல்துறை சிறந்த பணியாற்றி இருக்கின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு : 1974 பிப்ரவரி மாதத்திலிருந்து தீவிரமாக வீடு புகுந்து திருடுபவர்கள் துரைக்கண்ணு, ராஜு குறவன், மோகன் மற்றும் சிலரும் கைது செய்யப்பட்டு, வைர மோதிரங்கள், நகைகள் மற்ற சொத்துக்கள் மீட்கப்பட்டதும், தண்டையார்ப் பேட்டையிலுள்ள ஒரு கம்பெனியிலிருந்து திருடப்பட்ட சுமார் ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள செப்புக் கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டதும், சில லாரி திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதும், நல்வாழ்வுச் சீட்டுக் கம்பெனியின் அமைப்பாளர் லத்தீப் என்பவர் கைது செய்யயப்பட்டதன் விளைவாக ஒட்டு மொத்தமாகச் சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள


மேலைநாட்டுக்குக் கடத்தப்படவிருந்த அழகுச்சிலைகள்

சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருப்பதும் பாராட்டிற்குரியது. இந்தச் சொத்துக்கள் பொதுமக்கள் பார்வைக்காகக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தப்பொருட்காட்சியினைத் தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களும், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் பார்வையிட்டுப் பாராட்டிப் போற்றி மகிழ்ந்திருக்கிறார்கள்.

இங்குள்ள பார்வையாளர் புத்தகத்தில் இப்பொருட்காட்சியைப் பற்றி பலர் கருத்துரை வழங்கியிருக்கிறார்கள். தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கள் கூறுகிறார்.

''சென்னை நகரின் காவல் துறையின் திறமையினை விளக்கிக்காட்டும் வகையில் அமைந்துள்ளது இக்கண்காட்சி. மேலும் இத்தகைய கடுமையான பணிகளை அனைவரின் திருப்திக்கும் ஏற்ற வகையில் அமைதியோடும் விவேகத்தோடும்நிறைவேற்றியுள்ளதை இது எடுத்தியம்புகிறது''

கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதியுள்ள குறிப்பில் இவ்வாறு கூறியிருக்கிறார்:

''குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலும், திருட்டுப்போன சொத்துக்களை மீட்பதிலும் தமிழகக் காவல்துறையினர் எவ்வளவு திறமையைப்பெற்றிருக்கிறார்கள் என்பதை 'திருட்டுச் சொத்துக்களின் கண்காட்சி' தெளிவுபடுத்திக் காட்டுகிறது.''

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுத் தூதுவர் என்ன கூறுகிறார்?

''சென்னை நகரக் காவல் துறையினர் நமக்குத் தேவைப்பட்ட நேரங்களில் பாதுகாப்பைத் தந்து வெற்றி கண்டு வந்துள்ளனர். திறமையான- நன்கு பயிற்சியளிக்கப்பட்ட இந்தக் காவல் துறையினர், மக்கள் சரியான வழியில் செல்ல உதவுகின்றனர்.''

ஆந்திரத்திலிருந்து வந்து இக்கண்காட்சியைப் பார்வையிட்ட 'காவலர் இல்லக் கழக' மேலாண்மை இயக்குநர் திரு ஜெ. சால்தானு எழுதுகிறார்:



விற்பனைக் கூடமல்ல—

''தொல்லைகள் நிகழ்கின்ற இடத்திலிருந்து அழைப்பு வந்தவுடனேயே, சென்னை நகரக் காவல் துறையினர் விரைந்து சென்று தக்க நடவடிக்கை எடுப்பது போன்ற நிகழ்ச்சியை என்னுடைய 22 ஆண்டுக்காலக் காவல்துறை அனுபவத்தில் இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறேன்........''

இவ்வாறு பாராட்டிப் புகழப்படும் தமிழகக் காவல்துறை களவுபோன பொருட்களை மீட்பதில் மட்டுமின்றி, சம்பந்தப்பட்ட எல்லாத்துறைகளிலுமே தனிச் சிறப்புடன் விளங்கி வருவதை நாம் பார்க்கிறோம்.

இந்தப் பணியில் சிறிதும் தளராமல் மேலும் மேலும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும்



மீட்கப்பட்ட பொருள்களின் காட்சி அமைப்பு!



கைப்பற்றிய சிலைகளை முதல்வர் கலைஞரும், காவல் துறைத் தலைமை அலுவலரும் பார்வையிடுகின்றனர்.



கண்காட்சியில் ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களும், அவரது துணைவியாரும்.

கடமையாற்றக் காவல்துறை ஆணையாளர் திரு. கே. ஆர். செனாய் அவர்கள் தம் துறையினருக்கு வழங்கும் ஐந்து கட்டளைகள் - கருத்துரைகள் எவை என்பதைத் தெரிந்து கொள்வோமா?

''முதலாவதாகச் சட்டம், ஒழுங்கு சீரிய முறையில், அதுவும் பலவந்தத்தைக் கைக்கொள்ளாமல் தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும். தகுந்த நேரத்தில் தகவல்களைச் சேகரித்து தேவையான தடுப்பு நடவடிக்கை எடுத்து அவற்றைக் கவனமாக அலசிப் பார்த்து, தேவையான நேரத்தில் தேவையான பலத்தைத் திரட்டி நிலைமையை உறுதியுடன் சமாளிப்பதன் மூலம் இதைச் செய்ய வேண்டும்.

''இரண்டாவதாகப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டுப் பெருகிவரும் சாலை விபத்துக்களைத் தடுக்க வேண்டும்.

''மூன்றாவதாக, நாம் சாதித்துள்ள மிகச் சிறந்த மீட்புப் பணி மேலும் தொடர வேண்டும்.''

''நான்காவதாக, வழக்குகளில் புலனாய்வு முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டு, சரியான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

''ஐந்தாவதாக, நகரில் பல பகுதிகளிலிருந்தும் பகல் நேரத் திருட்டு, ஜேப்படி, பறிப்பு போன்ற புகார்கள் பல இருப்பதால் நம்முடைய தடுப்புப் பணிகளை அதிகரிக்க வேண்டும். போதுமான தடுப்பு நடவடிக்கைகளைத் தக்க நேரத்தில் எடுக்காவிட்டால் வருகின்ற கோடை, திருமணக் காலங்களில் இரவுத் திருட்டுக்கள், கல்யாண மண்டபத் திருட்டுக்கள் போன்றவை நிகழக்கூடும். மேற்கொண்டு சூசகமான வழியில் புலன் திரட்டி, மறைவான ரோந்துகள் நடத்தி, கால தாமதமின்றிக் குற்றங்கள் கண்டுபிடிப்பதற்கான முறையில் நம்முடைய புலனாய்வுப் பணியையும் அதிகரிக்க வேண்டும்.''

இந்த ஐந்து கட்டளைகள், சமுதாயத்தில் மேலும் பல குற்றங்களைக் களைந்தெரியவும் பல சொத்துக்களை மீட்கவும் அதன் மூலம் தமிழகக் காவல் துறையின் திறமையும் புகழும் பிற மாநிலங்களுக்குப் பரவவும் வகை செய்யும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

''உனக்காக நீ அல்ல மக்களுக்காக நீ ஆவாய்!'' என்ற இந்த வாசகம். எழும்பூர் காவல்துறை ஆணையாளர் அலுவலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. மக்களுக்காகவே இருபத்துநான்கு மணி நேரமும் அயராது பணியாற்றும் காவல் துறைக்கு மக்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்தான் அமைதியும் ஒழுங்குமுள்ள சமுதாயத்தைக் காணவும், அதன் மூலம் சமுதாயத்திலுள்ள தீமைகளை-குற்றங்களைக் களையவும் முடியும் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

—பி. வி. ஜி.



கண்காட்சியைப் பார்வையிடுகிறார் முதல்வர் கலைஞர்.

# நகர்ப்புற வளர்ச்சியில் நமது பணிகள்

நகர்ப் புற வளர்ச்சியைப் பொறுத்த மட்டில், உலக நாடுகளிடையே இந்தியா ஐந்தாவது இடத்தைப் பெற்றிருக்க இந்திய நகர்ப்புற வளர்ச்சியில் மராட்டிய மாநிலத்திற்கு அடுத்து, தமிழ்நாடு இரண்டாவது இடம் பெறுகிறது. இருப்பினும், நகரங்களின் எண்ணிக்கையைக் கொண்டு பார்ப்போமானால், மராட்டியத்தில் 289 நகரங்கள் மட்டுமே இருக்கையில், தமிழ்நாடு தன்னகத்தே 443 நகரங்களைக் கொண்டு முதலிடம் பெற்றுத் திகழ்கிறது.

நகரங்களைத் திட்டமிட்டு மேம்படுத்துவதன் மூலம், வட்டார மேம்பாட்டு நோக்கில், நகர்ப்புற வளர்ச்சியை முறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையின் நோக்கம், சமூக—பொருளாதார அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதாகும். இவற்றில் சமுதாய வசதிகள், பணிகள், பெருவாரியான வேலை வாய்ப்புகள், சுமூகமான சூழ்நிலை ஆகியவை அடங்கும்.

### வட்டாரத் திட்டம்

சென்னை பெரு நகர்ப் பகுதியிலும், மதுரை, கோவை திருச்சி, சேலம் நகரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மக்கள் தொகை வளர்ச்சி வேகம் நன்கு வகுக்கப்பட்ட திட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்படாது தொடர்ந்துவளர அனுமதிக்கப்படுமேயாகில், இந்த வளர்ச்சி வீதம் நகர்ப்புற மக்களிடம் உள்ள விசாலமான இடத்தில் மட்டும் அல்லாமல் பொருளாதார அமைப்பிலும் நகர்ப்புறச் சூழ்நிலையிலும் பல ஏற்றத் தாழ்வுகளையும், நெருக்கடிகளையும் உண்டாக்குவது திண்ணம்.

எதிர் காலத்தில் இம் மாநில நகர்ப்புறமக்கள் தொகையைத் திட்டமிட்ட முறையில் பரவலாகக் குடியமர்வதற்குப் புதிய முறைகளை வகுப்பதன் உடனடித் தேவையை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இந் நோக்கத்தை எய்துவதற்கு வட்டாரக் கொள்கை ஒன்றை வகுப்பது முக்கியமாகும். அத்தகையதொரு வட்டாரக் கொள்கை மூலம் அடைய வேண்டிய நோக்கங்களாவன:

1. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மக்கள் தொகைக்குள்ள இடத்தைச் சீராகவும், தகுந்த அளவிலும் பரவலாக அமையுமாறு நகரங்களையும் மையங்களையும்அமைத்தல் ;

2. அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும், அத்தகைய வசதிகள், பணிகள் ஆகியவற்றைப் பேணி வருவதில், இடையூறுகள் ஏற்படாதவாறும், சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான வாயில்கள் சீர்குலைவுக்கு ஆளாகாவண்ணமும், மாநகரங்களும், நகரங்களும் பெரிதாக அமையாதவாறு பார்த்துக் கொள்ளுதல் ;

3. நகர்ப் புற மக்கள் தொகை பரவி வரும்போது அது பரவலான இடத்தில் நினைத்தவாறு அமையாமல் தெரிந்தெடுத்த பகுதிகளில் முறையாக அமையப் பெற வேண்டும். ஏனெனில், அந்த இடங்களில் கிடைக்கும் குறைவான வசதிகளையும் பயன் மிகும் வகையில் நன்கு பயன் படுத்திக் கொள்ள ஏதுவாகும்.

4. திட்ட நன்மைகள் சமுதாயத்திற்குப் பெருமளவில் கிடைப்பதற்காக நகர்ப்புற மக்கள் தொகை பரவியுள்ள வகைக்கு ஏற்ப மாநிலப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைப் பொருந்துமாறு அமைத்தல்;

5. கிராமச் சமுதாயத்தினருக்குத் தேவைப்படும் பொருளாதார-சமூக வளர்ச்சிக்கு உதவுமாறு அமைந்துள்ள வளர்ச்சி மையங்களை ஆய்ந்து கண்டு, அவற்றில் அம் மக்களுக்குத் தேவைப்படும் பணிகளும் அடிப்படை வசதிகளும் கிடைப்பதை உறுதிப் படுத்தும் வண்ணம் உருவாக்குதல்.

மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக இம்மாநிலத்திற்குள் வட்டாரத் திட்டப் பணி ஒன்றை அரசு ஏற்கெனவே தொடங்கியுள்ளது. இம் மாநிலம் இயற்கை அமைப்பு, மண்வளம், தொழில் வகை ஆகியவற்றின் அடிப்படையில், எட்டுத்திட்ட வட்டாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. வட்டாரத் திட்டங்கள் இவை அனைத்திற்கும் வகுக்கப்பட்டுள்ளன. இந்த வட்டாரங்கள் பின்வருமாறு :—

1. தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி.
2. சேலம்-கடலூர்.
3. செங்கற்பட்டு-சென்னை
4. வேலூர்-தருமபுரி.
5. கோயம்புத் தூர்-நீலகிரி.
6. மதுரை.
7. இராமநாதபுரம்.
8. திருநெல்வேலி-கன்னியாகுமரி.

இந்த வட்டாரத் திட்டங்களும், வட்டாரங்களுக்குள்ளேயே சிறு பகுதிகளுக்குத் தயாரிக்கப்பட வேண்டிய உள் வட்டாரத் திட்டங்களும், எதிர்கால நகரமைப்பு உருவாகும் வகையை விளக்குவதுடன், ஒவ்வொரு நகரத்திற்கும் இருக்கக்கூடிய மக்கள் தொகையைக் குறிப்பிட்டு நகரங்களின் வளர்ச்சி வகையை விளக்குவதற்காக அமையும். இம் மாநிலத்துக்குள்ளேயே சீரான திட்டமிட்ட நகர்ப்புற வளர்ச்சி ஏற்படச் செய்வதற்கு இத்தகைய வட்டாரத் திட்டங்களில் முன்னுரிமை ஏற்பாடுகளைப் பற்றியும் கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கும்.

### நகரமைப்புத் திட்டம் பற்றிய சட்டம்:

இதற்கு ஆதரவாக, அரசு, ''1971-ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத்திட்டச் சட்டம்' என்னும் நகர நாட்டுப்புற அமைப்பு வரையறை திட்டச் சட்டம் ஒன்றை ஏற்கனவே இயற்றியுள்ளது. 15-9-1973 முதல் செயலுக்கு வந்துள்ள இந்தச் சட்டம், நகர்ப்புறப் பகுதிகளுக்கான வட்டாரத் திட்டங்கள், பெருந் திட்டங்கள், புதிய நகர மேம்பாட்டுத் திட்டங்கள், சிறிய பகுதிகளுக்கான விரிவான மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை தயாரிக்கப்படுவ்தற்கு வகை செய்கிறது. இச் சட்டம்; இம் மாநிலத்தில், நகரமைப்புத் தொடர்பான திட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பதற்காக மாநில நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட வாரியத்துடன், வட்டாரத் திட்ட அதிகார மன்றம் உள்ளூர் திட்ட அதிகார மன்றம் புதிய நகர மேம்பாட்டு அதிகார மன்றங்கள் ஆகியவை அமைக்கப்படுவதற்கும் அதிகாரம் அளிக்கிறது.

### திட்ட அமைப்பு அதிகார மன்றங்கள் அமைத்தல் :

இந்தப் புதிய சட்டம், வட்டார அளவில் ஒன்றும், உள்ளூர் அளவில் மற்றொன்றுமாக இரண்டடுக்கு திட்ட அமைப்பு அதிகார மன்றங்களை ஏற்படுத்த வகை செய்கிறது. இத் திட்ட அமைப்பு அதிகார மன்றங்கள் ஏற்படுத்தப்படுவதன் முக்கிய நோக்கம் என்னவெனில், திட்ட அமைப்பானது, உள்ளாட்சி மன்றங்களின் சட்டப்படிக்கான எல்லைகளைக் கடந்தும் மேம்படுத்த வேண்டிய பகுதிகளை இணைத்துச் செயல்படுவதாக இருக்கும். பல நேர்வுகளில், ஒரு திட்டம் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும்; வளர்ச்சி வாய்ப்பினையும் மக்கள் ஒன்று கலந்து வாழ்வதையும் பொறுத்து, இத் திட்டம் நகர்ப் பகுதியைக் குறித்ததாக அல்லது வட்டாரப் பகுதியைக் குறித்ததாக அல்லது ஒரு முழு நகரம்—கிராமம் அடங்கிய தொகுதி குறித்ததாக இருக்கலாம்; திட்டமிடும் பணி, ஒருங்கிணைந்த திட்டமிடும் அதிகார மன்றங்களை அமைத்து திட்டமிடும் பணிகளை நிர்வகிப்பதற்காக, விரிவான முறையில் திட்டமிடுவதற்கென்றே நகரமைப்புத் திட்டச் சட்டம் என்னும் சொல் புனையப்பட்டது என்று கூறலாம்.

### நகர்ப்புற மேம்பாடு :

நகர்ப்புற மக்கள் தொகை முந்திய அளவிலேயே தொடர்ந்து அதிகரித்து வரும் என்று வைத்துக் கொண்டால் 1991-ஆம் ஆண்டு மாநில மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதமும், 1984-ஆம் ஆண்டு மாநில மக்கள் தொகையில் சுமார் 37 சத வீதமும் நகர்ப் பகுதிகளிலேயே இருக்கும் எனக் கூறலாம்.

சரியான புள்ளி விவரங்களை கொடுப்பதானால் 1984-ஆம் ஆண்டின் நகர்ப்புற மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டு மக்கட் தொகையாகிய 125 இலட்சத்தைவிட 55 இலட்சம் கூடி 180 இலட்சத்தை எட்டிவிடும். இந்த எதிர்கால மக்கள் தொகையை எவ்வாறு குடியமர்த்துவது என்று கவனமாக ஆய்வு செய்து பார்த்தபோது மாநிலத்தில் நன்கு வளர்ச்சி அடைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகளிடையேதான் இந்த நகர வளர்ச்சி வருங்காலத்தில் அமையச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது.




இவை, முக்கியமாக, சென்னை-கோயம்புத்தூர் தொடர்பு வழிப் பகுதி, சென்னை-மதுரை தொடர்பு வழிப்பகுதி, மதுரை-நாகர்கோயில் தொடர்பு வழிப் பகுதி, சேலம்-கடலூர் தொடர்பு வழிப் பகுதி ஆகியனவாகும். எஞ்சிய நகர்ப்புற மக்கட்தொகை, இப் பகுதிகள் தவிர்த்த சில பெரிய நகர்ப்புறப் பகுதிகளிலும் மற்றும் மாநிலம் முழுவதிலும் பரவியுள்ள சில பணி-வளர்ச்சி மையங்களிலும் குடியமர்த்தப்பட வேண்டியதாகும்.

### சென்னை பெருநகர்ப் பகுதி :

சென்னை பெருநகர்ப் பகுதி, இந்நகரின் பெரிய தொடர்பு வழிப் பகுதிகள் சேருகின்ற ஒரு முக்கியமான பகுதியாக அமைந்து தனித் தன்மையுடன் திகழ்கிறது. சென்னை பெருநகர் திட்டத்தின் கீழ், இந்த பெருநகர் பகுதியில், 1991 ஆம் ஆண்டுக்குள் 53 இலட்சம் மக்களையும், 1984 ஆம் ஆண்டுக்குள் 45 இலட்சம் மக்களையும் குடியமர்த்துவதற்கு வழி காண திட்டமிடப்பட்டுள்ளது. இவர்கள், சென்னை மாநகரும் அதனையடுத்துச் சுற்றி அமைந்துள்ள நகர்ப்புறப் பகுதியும் அடங்கிய தற்போதைய பெரு நகர்ப் பகுதியிலும், சிறந்த போக்குவரத்து வசதிகள் கொண்ட பகுதிகள் நெடுகவும் மேம்படுத்தப்பட இருக்கிற பல நகர்ப்புறப் பகுதிகளிலும் மேலும் மக்கள் குடியமர்வர்.

சென்னை பெருநகர்த் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநகரிலிருந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் இப் பகுதிகள் நெடுகவும் மூன்று துணை நகரங்கள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை, செங்கற்பட்டுக்கு அருகே உருவாகும் மறைமலை நகர், திருவள்ளூர், கும்மிடிப் பூண்டி ஆகியனவாகும். அண்மையில் அமைக்கப்பட்ட சென்னை-பெருநகர் வளர்ச்சித் திட்ட அதிகார மன்றம் ஏற்கெனவே இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 1971-ஆம் ஆண்டு நகர, நாட்டுப்புற அமைப்புத்திட்டச் சட்டத்தில் அண்மையில் செய்யப்பட்ட ஒரு திருத்தத்தின் மூலம், இந்த அதிகார மன்றத்திற்குப் போதிய திட்ட அமைப்பு ஒருங்கிணைப்பு அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நகர்ப்புறப் பகுதிகளில் பெருமளவு வந்து குவிகின்ற மக்களுக்காக, விரிவான போக்குவரத்துத் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில், விரைவான போக்குவரத்துச் சாதனப் பாதை அமைப்பும் அடங்கும். இது மாநகரின் மையத்தினை இணைத்துக் கிட்டத்தட்ட கடற்கரை ஓரமாக வடக்கு-தெற்காகச் செல்லும்.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்ட மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள திட்டவட்டமான திட்டப்பணிகள், மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியவை பற்றி ஈண்டுக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இதன் நோக்கம், சென்னை மாநகருக்குள் மக்கள் அளவுக்கு மேல் குடியேறுவதைத் தவிர்ப்பதாகும்.

செங்கற்பட்டு அருகேயுள்ள துணை நகரமான மறைமலை நகர் வளர்ச்சி இவற்றில் அடங்கும். நகர்ப்புற வளர்ச்சி குறித்து, நகர அமைப்பு இயக்குநர் அலுவலகம் முன்னரே வகுத்துள்ள திட்டங்களின் பேரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சி மன்றம் மேற்கொண்டு ஆய்வு நடத்தி வருகிறது. சில* புறநகர்களைத் தொழிற்சாலை-குடியிருப்புப் பகுதியாக மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

எண்ணூர்-மணலி புற நகர்ப் பகுதியினை 1974-75-ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மெரீனா கடற்கரையை அழகுபடுத்தல், பிராட்வே பேருந்து நிலையத்தைப் புதிதாக மேம்பாடு செய்தல். ஆகியவை இந்த அதிகார மன்றம் தற்சமயம் திட்டமிட்டுள்ள ஏனைய திட்டங்களில் அடங்கும்.

## ஏனைய நகரங்கள் :

எஞ்சிய மக்கட் தொகையில் சுமார் 30 இலட்சம் மக்கள் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற நான்கு பெரிய நகர் சார்ந்த பகுதிகளில் குடியமர்வதை எதிர் நோக்கி அதற்கு ஏற்றபடி திட்டமிடக் கருதப்பட்டுள்ளது. எஞ்சிய மக்களில் 105 இலட்சம் பேர் பெரிய நகரங்களின் தொடர்பு வழிப் பகுதி நெடுகவும் உள்ள நகரங்களிலும் குடியமர வசதிகள் உருவாக்கப்படும். இந்த மக்கட் தொகையில் ஒரு சிறு பகுதியினர் உள்வட்டாரத் திட்டங்களினால் அமையும் நகரங்களில் குடியமரலாகும். வட்டாரத் திட்டங்களின் அடிப்படையில் அமையும் நகர்ப்புறங்களில் நகர்ப்புறங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை இந்நகர்ப்புறங்களின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை தெளிவாக்கும்—

## நகர அமைப்புத் திட்டங்களும் நகர வளர்ச்சித் திட்டங்களும் :

இந்த முறைகளில் நகர வளர்ச்சி அமைவதற்காக, நகர வளர்ச்சி எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை இந்தப் பகுதிகளில் விளக்கிக் காட்டுவதற்காக விரிவான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு உள்ளூர் மன்றங்களுக்கு இத் திட்டத்தின்கீழ் கடன் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 1973-74 ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்திற்காக 13 நகராட்சி மன்றங்களுக்கு ரூ. 6.80 இலட்சமும் மதுரை மாநகராட்சிக்கு ரூ. 4.00 இலட்சமும் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மேற்கொண்டு ரூ. 6 இலட்சம் அளவில் உதவி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

## பெருந் திட்டங்கள், வட்டாரத் திட்டங்களா ஆகியவற்றை வகுத்தல் :

எட்டு வட்டாரங்களுக்காக வரைவு வட்டாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. துணை வட்டாரத் திட்டங்கள் தயாரிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சேலம்-கடலூர். திருச்சி-தஞ்சாவூர் ஆகியவை குறித்த இரண்டு வட்டாரத் திட்டங்கள் பற்றி அந்தந்த கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டது. கருத்தரங்கில் ஏனைய வட்டாரத் திட்டங்கள் பற்றி விரைவில் பேசப்படும். வட்டாரத் திட்டங்களில் நகரங்களுக்காகப் பெருந் திட்டங்கள், வட்டாரத் திட்டங்கள் ஆகியவை தயாரிப்பதற்காக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## முக்கிய நகரங்களுக்கான தனி வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்தலும், நிறைவேற்றலும் :

சென்னை நகர்ப்புறப் பகுதி வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தொடங்கப்பட்ட திட்டங்களுடன் இம் மாநிலத்தின் ஏனைய முக்கிய நகரங்களுக்கு அதே போன்ற தனி வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கவும், நிறைவேற்றவும் இத் திட்டம் வகை செய்கிறது.

## போக்குவரத்து ஆய்வுகள் :

### சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு விரைவுப் போக்குவரத்து அமைப்பு :

சென்னை மாநகரத்திற்குள் தற்போதுள்ள போக்குவர்த்து நிலைமை ஏற்கெனவே நெரிசல் மிகுந்ததாக உள்ளது.

வருங்காலத்தில் இந்த மாநகரத்தின் வளர்ச்சி அதை மேலும் கடுமையாக ஆக்கிவிடும். பெருகிவரும் போக்குவரத்தையும், பெருநகரப் பகுதிப் போக்குவரத்துத் தேவைகளையும் நிறைவு செய்யும் பொருட்டு, பெருநகரப் பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்த அடங்கல் ஆய்வு ஒன்று நகரமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டது.







பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகவே மணலியுடன் திருவான்மியூரை இணைக்க வடக்கு — தெற்கு தொடர்பு வழிப் பகுதி நெடுக மிகவும் விரைவுப் போக்குவரத்துக்கான நீளமான அமைப்பை (பாதாள ரயில்) ஏற்படுத்துவதற்கான அவசியம் பற்றிக் குறிப்பிட்டு 1991-ஆம் ஆண்டுக்கான வருங்காலப் போக்குவரத்துத் தேவைக்கு வழி செய்வது குறித்த அறிக்கை இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. சென்னையில் விரைவுப் போக்குவரத்து அமைப்பிற்கான தொழில் நுட்பப் பொருளாதாரச் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்வதற்காகப் பெரு நகரப் போக்குவரத்துத் திட்ட ஆய்வு அமைப்பு ஒன்றை ரயில்வே வாரியம் ஏற்படுத்தியது. ரயில்வே வாரியமும், திட்டக் குழுவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, போக்குவரத்து ஆய்வுப் பிரிவு இயக்குநர் அலுவலகம் துணை ஆய்வினை மேற்கொண்டது. 1981-ஆம் ஆண்டுக்கு, போக்குவரத்துத் தேவைகள் குறித்து அடங்கல் அறிக்கையொன்றை வெளியிட்டது. அப்பகுதிக்கு 1980-க்குள் விரைவுப் போக்குவரத்து அமைப்பை ஏற்படுத்துவதற்கான நியாயம் உள்ளது. இந்த அறிக்கை ரயில்வே அமைச்சகத்துக்கும், திட்ட ஆணைக் குழுவிற்கும் மாநில அரசால் அனுப்பப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து இந்தப் பணிக்கு நிதி ஒதுக்குமாறு மாநில அரசு முனைந்து வலியுறுத்தி வருகிறது. சென்னைப் பெருநகரப் பகுதிக்கு ரயில்வே நிர்வாகம் மேற்கொண்ட விரைவுப் போக்குவரத்து அமைப்பு குறித்த தொழில் நுட்ப-பொருளாதார ஆய்வை விரைவில் முடிக்குமாறு நமது அரசு வலியுறுத்தி வருகின்றது.



## டாக்டர் கே. நாகராஜன்

திரு. கே. நாகராஜன், மதுரை மாவட்டம், வடமதுரைத் தொகுதியில் 1971-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உயிரியல் துறையில், மரவட்டை, பூரான் இவற்றை ஆராய்ச்சி செய்து தற்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் (Ph.D.) பட்டம் பெற்றுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றிலேயே, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டு டாக்டர் பட்டம் பெற்றதில் முதன்மையானவர் திரு. நாகராஜன் அவர்கள்தான்.

1964-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியைத் தொடங்கிய இவர், ஆராய்ச்சி முடியும் தறுவாயில் கட்டுரையைச் சமர்ப்பிக்க இயலாமல் போய் விட்டது.

சட்டமன்ற உறுப்பினராகப் பொது வாழ்க்கையில் இருக்கின்ற பொறுப்புக்களையும் தவறாமல் நிறைவேற்றிக்கொண்டு, தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்து செய்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டத்தைப் பெற்றிருக்கும் இவர் தமிழ்நாடு வனத்துறை ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராகவும் விளங்குகிறார்.

## பிற பகுதிகளுக்கான போக்குவரத்து ஆய்வுகள் :

கோயம்புத்தூர் நகருக்குப் பொருத்தமான போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரிக்க, போக்குவரத்து ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. மதுரையைப் பொறுத்தவரை, போக்குவரத்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டன. திட்டக் காலத்தில் திருச்சிராப்பள்ளி, சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இதே போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

சேலத்திற்கு அருகே, சேலம் உருக்காலைக்கான முன்னோடி வேலைகளும், தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை, பெட்ரோலியம்-ரசாயனத் தொழிற்சாலை, துறைமுகத் திட்டம் ஆகியவைகள் உருவாக்கப்பட்டிருப்பதன் விளைவாகவும் அந்நகரைச் சுற்றித் தொழிற்சாலைகளும் அதனுடன் இணைந்த துணைத் தொழில்களும் ஏற்பட்டதனாலும் சேலத்திலும், தூத்துக்குடியிலும் போக்குவரத்து வளர்ச்சி குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

## நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தில் வல்லுநர்களுக்குப் பயிற்சி :

பல்வேறு நகர, நாட்டுப்புற அமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான, தொழில் நுட்பப் பணியாளர்கள் கிடைக்க, நகரமைப்புத் திட்டத்தில் வல்லுநர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக ஆண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1973-74-ல் உதவி இயக்குநர்கள் இருவர் உட்பட நகரமைப்புத் துறையின் ஏழு அதிகாரிகளுக்கு கிண்டி பொறியியல் கல்லூரியில் புதிய முறையில் திட்டமிடுதலிலும், கணக்கிடும் முறையிலும் பயிற்சியளிக்கப்பட்டது. 1973-74-ல் கருவிகள் வாங்குவதற்காக ரூபாய் ஒரு இலட்சம் அனுமதிக்கப்பட்டது.





# தேரும் திருக்குறளும்

சிலம்பொலி

சு. செல்லப்பன்




இன்று மக்கள் பயணம் செய்ய ஈருருளி, பேருந்து, இன்னூர்தி, புகைவண்டி, விமானம் போன்ற ஊர்திகள் பலவுண்டு. பண்டைய மக்கள் பயன்படுத்தி வந்த ஊர்திகளில் மிக முக்கியமானது தேர். வெளியூர் செல்லவும், உள்ளூரிலேயே ஓரிடத்திலிருந்து வேற்றிடம் செல்லவும், வாவிக்கும் சோலைக்கும் மகிழ்வுடன் சென்று திரும்பவும் ஆண்கள் தேர்களைப் பயன்படுத்தினர். வீரர்கள் போர்க் களங்களில் தேரூர்ந்து போரிட்டனர். நால்வகைப் படைகளுள் தேர்ப் படையும் ஒன்று. இளைஞர்கள் தேர்களில் ஏறி அவற்றைச் செலுத்தி மகிழ்ந்தனர். குழந்தைகளோ தமக்கெனச் செய்து தரப்பட்ட சிறிய தேர்களைக் கைகளால் இழுத்து விளையாடினர். குழந்தைகள் உருட்டி விளையாடிய தேர்கள் மூன்று சக்கரங்கள் கொண்டவை. அம் ''முக்காற் சிறுதேரை'' உருட்டி விளையாடும் குழந்தைப் பருவம் ''சிறு தேர்ப் பருவம்'' என்று பெயர் பெற்றது. ''தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்'' களையும், ''தச்சன் செய்த சிறுமா வையம், ஊர்ந்து இன்புறூஉர் ஆயினும், கையின் ஈர்த்து இன்புறும் இளையோரையும்'' இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

இயல்தேர்க் குட்டுவன், பொற்றேர்ச் செழியன், நற்றேர் வழுதி, கடுந்தேர்ச் செல்வன், நெடுந்தேர்க் காரி, திண்தேர்க் கொண்கன், பொலந்தேர்த் திதியன், கொடித்தேர்ப் பொறையன், தேர் வேள் ஆய், தேர்வண் கிள்ளி போன்ற இலக்கியச் சொற்றொடர்கள் அரசர்களும் வீரர்களும் தம் பெயர்களுக்குத் 'தேர்' என்னும் சொல்லை அடையாகப் பெற்றனர் என்பதைக் காட்டுகின்றன.

குதிரைகள் பூட்டி ஓட்டப்பட்டவை தேர் என்றும், எருதுகள் பூட்டி இழுக்கப்பட்டவை

சகடு, வண்டி, பண்டில் என்றும் அழைக்கப்பட்டன. குதிரைகள் தேர்களை இழுத்துச் செல்லும் காட்சிகளை இலக்கியங்களில் எழில் உறக் காணமுடிகிறது. ''நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர். குதிரைகளின் நெற்றிகளில் நீல மணியாலாகிய நெற்றிச் சுட்டிகள் தொங்குகின்றன. அடர்ந்த பிடரி மயிர். கொள்ளுடன் நெய் பெய்த கொழுவிய சோற்றை உண்டு மதர்த்துள்ள அக் குதிரைகள் நான்காக நின்றாலும் ஒரே வரிசையில் ஒரே பெற்றியாக ஓடும் இயல்பின. அவற்றின் பருத்த கழுத்தில் வடங்கள் நெருக்கமாகப் பொருத்தப்பட்டுத் தேருடன் இணைக்கப்பட்டுள்ளன. பாகன் ஓட்ட அவை நீர் பாய்ந்தாலொப்பத் தாவிச் செல்லுகின்றன. பால் போன்ற வெள்ளிய கடற்கரை மணற்பரப்பில் வாய்க்கால் போன்ற சுவடுகளை உண்டாக்கிய வண்ணம் தேர் விரைந்து செல்லுகிறது.''

''கொற்கைக் கடற்கரையில் வெண்மையான குளிர்ந்த முத்துக்களை அலைகள் வாரி இறைத்துள்ளன. அம் முத்துக்கள், அவ்வழியே தேரை இழுத்துச் செல்லும் குதிரைகளின் கால்களை உறுத்தி அவை மேலே செல்லவொட்டாமல் தடுக்கின்றன.''—இத்தகு அழகிய தேரோவியங்களை நாம் அகநானூற்றில் காண்கிறோம்.

குதிரைகளின் பிடரி மயிர் அழகுபெறக் கத்தரித்து விடப்பட்டன என்பதைக் ''கொய் உளை மான்தேர்'', ''கொய்சுவல் புரவிக் கொடித்தேர்'' போன்ற சொற்றொடர்களிலிருந்து அறிகிறோம். கால்கள் நிலத்தில் படிவதாகத் தோன்றாது பறப்பன போலக் குதிரைகள் வேகமாக இயங்கின. இவ்வாறு நிலம் தீண்டாது பறப்பன போன்று இயங்கிய குதிரைகள் ''புள்இயல் கலிமா''—அதாவது பறவைகளின் இயல்பையுடைய குதிரைகள்—என்று பேசப்படுகின்றன.

தேர்கள் பல்வேறு அழகுப் பொருள்களால் புனைவு செய்யப்பட்டன. இன்றைய ஊர்திகளின் வருகையை அறிவிக்க ஊதொலி இருப்பது போல அன்றைய தேர்களின் இயக்கத்தை அறிவிக்க அவற்றில் மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. பெருமணித் திண்தேர், வடிமணி நெடுந்தேர், இனமணி நெடுந்தேர், கறங்கு மணி நெடுந்தேர், ஒல்லென ஒலிக்கும் தேர் என்ற சொற்றொடர்கள் தேர்களில் மணிகள் அசைந்து ஒலியை எழுப்பின என்பதைப் புலப்படுத்துகின்றன.

தேரின் உச்சியில் கொடிகள் பறக்கவிடப்பட்டன. ''வான்தோய் வெல்கொடி தேர் மிசை நுடங்க'', ''ஒளிறுகொடி நுடங்கத் தேர்திரிந்து கொட்ப'', ''நெடுந்தேர் நுடங்கு கொடி'', ''நெடுங்கொடிய தேர்மிசையும்'' என்ற பதிற்றுப்பத்து வரிகள் தேர்களில் கொடியசைந்த தன்மையை விளக்குகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த தேரினைத் திருவள்ளுவர் காணுகின்றார். அவருடைய எண்ணம் அதன் அழகிலோ, வடிவிலோ, எழுப்பும் ஒலியிலோ, மேலசையும் கொடியிலோ செல்லவில்லை. அவருடைய கண்கள் தேர்ச் சக்கரங்கள் உருளத் துணையாயிருக்கும் அச்சினைக் காண்கின்றன. அச்சிலும் அதன் இரு எல்லைகளில் சக்கரத்தையொட்டி வெளிப்புறமுள்ள ஆணிகளை நோக்குகின்றன. அச் சிறிய ஆணிகள் அச்சிலிருப்பதால் அச்சாணி எனப் பெயர் பெறுகின்றன. அச்சின் இரு கோடியிலும் நிற்பதால் கடையாணி என்றும் அழைக்கப்படுவதுண்டு. தேர் ஓடுவதற்கு அதன் சக்கரங்கள், அச்சு, இழுத்துச் செல்லும் குதிரைகள் காரணமாக அமைகின்றன. இவையனைத்தும் நம்கண்களுக்கு வெளிப்படையாகத் தோன்றுபவை. ஆனால் தேர் சீராக ஓட நம் கண்களுக்குத் தெற்றெனத் தோற்றமளிக்காத அச்சாணிகள் பெருந்துணை செய்கின்றன. அச்சாணிகள் இல்லாவிடில் சக்கரங்கள் கழன்று தேர் உருண்டு சிதையும். பாரத்தைச் சுமந்து ஊர்ந்து செல்லும் சக்கரம் நேரே, நெறி பிறழாமல் செல்லக் காரணமாயிருப்பவை அச்சாணிகளே. அதுபோன்றே எந்த ஓர் இயக்கத்தையும் நழுவ விடாது, நேரே செலுத்தும் அச்சாணி போன்றவர்கள் இருக்கச் செய்வர். அவர்கள் உருவத்தாற் சிறியராக, தோற்றப் பொலிவின்றி இருக்கக் கூடும். ஆனால் செயலாலே இயக்கத்தைக் கட்டிக் காப்பவர்களாக இருப்பார்கள். அத்தகையவர்களை அறிந்து





அச்சின் கடையில் ஆணியை நிறுத்துவது போலத் தக்காங்கு இருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அறிவுடையார் கடமை யாகும்.

**''உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து''** **(குறள் 667)**

உருள்கின்ற தேர்க்கு அச்சிலிருந்து தாங் கும் ஆணி போன்றவர்கள் இவ்வுலகில் உள்ள னர். அவர்கள் உருவாற் சிறியராயிருக்கலாம். வடிவின் சிறுமை நோக்கி அவரை இகழக் கூடாது என்பது இதன் பொருள்.

தேரின் இயக்கத்திற்கு அடிப்படையாய் இருப்பது அச்சாணி. அதுகொண்டே எந்த ஒன்றிற்கும் அடிப்படையாக அமைவதை ஆணி என்றழைக்கின்றனர். உலகில் மக்கள் உயிர் வாழ்தற்கு அடிப்படையான உணவைத் தருபவர்கள் உழவர்களாதலின் அவர்களைத் திருவள்ளுவர் 'உலகத்தார்க்கு ஆணி' என் கிறார். நற்றிணைப் பாடல் ஒன்றில் மழை 'உலகிற்கு ஆணி'' என்று பேசப்படுகின்றது.

அச்சாணி சிறியதேயாயினும் தேரை நடத்த வல்லதாதல் போல உருவிற் சிறியா ரும் பெரிய செயல்களை நடத்தும் வல்லமை பெற்றிருக்கக்கூடும். ஆணி சிறியதாக இருப்ப தாலேயே பார்த்த அளவில் அதன் சிறுமை கண்டு இகழ்ந்துவிடக் கூடாது. அஃதில்லா விடில் வண்டியோட்டம் ஏது? கண்டவுடனே எள்ளத் தோன்றுமாதலால் 'கண்டு எள்ளாமை வேண்டும்' என்றார். எதையும் அறிந்து எள்ள வேண்டுமே தவிரக் கண்டதும் எள்ளு வது கூடாது. வினைத்திறனின் பெருமையைக் கொண்டு ஒருவரை மதிக்க வேண்டுமேயன்றி உருவத்தைக் கொண்டு அல்ல. எதிர்மறை யாக, காட்சியில் பெருமை தோன்றிச் செய லில் சிறுமை நேருமானால் அது மதிக்கத்தக்கது அன்று என்பதும் பெறப்படுகின்றது.

இக்குறள், வினைத் திட்பம் என்னும் அதிகா ரத்தில் உள்ளது. கருதிய தொழிலைத் திண் மையோடு செய்து முடிக்கும் ஆற்றல் வினைத் திட்பம் எனப்படும். மனம் கலங்காமல், சோர்வு கொள்ளாமல், துன்பம் நேர்ந்தாலும் அச்சாணி போன்று உறுதியாக நின்று செயலை முடிப்பவனே வினைத்திட்பம் உடையவனா வான்.

சக்கரங்கள் தடையின்றி உருள அச்சில் எண்ணெய், மை போன்ற உயவுப் பொருள் கள் தடவப்படுவதுண்டு. தேர் ஓட ஓட, மை அச்சுமுழுதும் பரவி ஆணியின்மீது படிந்து அதற்கு அழுக்கையேற்றும். காற்றில் பறக்கும் புழுதி, மையிற்படிந்து ஆணி இருப்பதே தெரி யாமல் மறைக்கும். இவ்வாறு அழுக்கு வந்து சேர்ந்தாலும், புழுதி வந்து படிந்தாலும் தான் கொண்ட செயலிலிருந்து சிறிதும் பிறழாத ஆணியைப் போல, ஒருவர் தம்மை அடையும் துன்பங்களுக்கும், பழிகளுக்கும் சிறிதும் கலங் காது துணிந்து நின்று செயலாற்ற வேண்டும்.

தேர் உருளாத நிலையிலிருக்கும்போது அச்சாணி வேண்டும் என்பதில்லை. உருளும் போதுதான் அதன் இன்றியமையாமை வெளிப் படுகின்றது. அதனாற்றான் வள்ளுவரும் ''உருள் பெருந்தேர்க்கு அச்சாணி'' என்றார். வினைத் திட்பமுடையோரின் பெருமையும் செயல்கள் நடைபெறும் வேளையிற்றான் புலப் படும். அத்தகு சிறப்புக்குரியவர்களைக் கண்டு பிடித்துப் போற்றிப் பெருமை செய்தல் வேண்டும்.

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்ற இக் கருத்தினைப் பிற புலவர்களும் ஏற்றுப் போற்றி விளக்கியுள்ளனர். தாழை மலரின் மடல் பெரியது ; மகிழம் பூவின் இதழ்களோ சிறியவை. ஆயினும் மகிழ மலர் தாழையினும் மணத்தில் சிறந்ததாயுள்ளது. கடல் பெரிதே யானாலும் அங்குக் குடி நீரில்லை. அதன் கரையில் சிறிய மணற் குழியில் சுரக்கும் ஊற்று உண்ணும் நீராகிறது. ஆதலின் உருவத்தில் சிறியரென்று மதியாதிருத்தல் கூடாதென்பதை ஔவையாரின்,

**''மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகா(து) அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்''**

என்ற மூதுரைப் பாடல் விளக்குகின்றது.



அதிவீரராம பாண்டியன் பனங்கொட்டை யையும் ஆலின் விதையையும் கொண்டு இவ் வரிய கருத்தினுக்கு அரண் செய்கிறார். பனங் கொட்டை பருத்தது. அதில் முளைத்து வெளி வரும் மரமும் உயர்ந்து வளர்வதுதான். ஆனாலும் அம் மரத்தின் நிழல் ஒருவர் நிற்க வும் போதுவதில்லை.

> தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
> வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
> ஒருவர்க் கிருக்க நிழலா காதே !

ஆலின் விதையோ மிகவும் நுண்மையானது. அதிலிருந்து முளைத்து வளரும் ஆலமரம் படர்ந்து செழித்துப் பலரும் தங்கப் பெரு நிழல் தருகிறது.

> தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
> அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழலா கும்மே !

ஆதலால் ஒருவர் உருவத்தால் பெரியராயிருப் பதாலேயே பெருமை பெற்றுவிடுவதில்லை ; சிறியவராயிருப்பதாலே தாழ்வடைந்து விடுவ துமில்லை.

> ''பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
> சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்''

என்பது மன்னன் அதிவீரனின் மணிமொழி. எனவே எவரையும் தோற்றம் கொண்டு எளி தாக நினையாது அவருடைய அறிவு, ஆற்றல், பயன் கண்டு போற்றுதல் வேண்டும்.

ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குகை யில் அதற்கெனத் தொடக்கத்தில் ஏற்படும் செலவு, செலவு செய்த பிறகு உண்டாகும் வரவு, பிற்காலத்தில் கிடைக்கக் கூடிய ஊதி யம் ஆகிய இவற்றையெல்லாம் நன்கு ஆராய வேண்டும். செய்யத் தகாத செயல்களைச் செய்வதால் கேடு உண்டாகும் ; செய்யத் தகுந்த செயல்களைச் செய்யாது விடுவதனாலும் கேடு உண்டாகும். ஆகவே செய்யும் செயல் களைக் கூர்ந்து, ஓர்ந்து, தேர்ந்து செய்ய வேண்டும் என்பது திருவள்ளுவர் கட்டளை.

இவ்வாறு ஆழ்ந்து ஆராய்ந்து செய்யும் போதும் ஒருவன் தான் செய்யக் கருதியுள்ள செயலின் வலிமையையும், அதனைச் செய்து முடிக்கத் தனக்குள்ள வலிமையையும், அதனை விலக்கக் கருதும் மாற்றார் வலிமையையும், தனக்கும் அவர்க்கும் துணையாக இருப்பவர் களின் வலிமையையும் சீர்தூக்கிப் பார்த்துத் தன் வலிமை மிகுதியென்று தோன்றினால் மட்டுமே அச் செயலைச் செய்ய வேண்டும். தம்முடைய வலிமை தெரியாமல் உள்ளக் கிளர்ச்சியால், ஒரு செயலை முனைந்து தொடங்கி, அதனை முடிக்க முடியாமல் இடையே தளர்ந்து அழிந்தவர் பலர். தனக்கு அமைந்துள்ள நிலைக்குத் தக்கபடி நடவாமல், தன் வலிமையின் அளவையும் அறியாமல், தன்னைப் புகழ்ந்து தருக்கிக் கொண்டிருப்பவன் விரைவில் அழிவான்.

இவ்வாறாகச் செய்ய வேண்டியவைகளைத் தேர்ந்து, வலிமையறிந்து செயலாற்ற வேண்டு மெனக் குறிப்பிடும் திருவள்ளுவர் எதுவும் அளவோடு அமைய வேண்டுமென்றும் அளவு மீறினால் அழிவு நேரும் என்றும் புலப்படுத்து கின்றார்.

> ''பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின்'' (குறள் 475)

---



## பிகாசோவின் பெருமை

காலஞ்சென்ற நவீன ஓவி யக் கலைஞர் பிகாஸோ தம் நண்பர் ஒருவர் பேசிக் கொண்டே ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தார். எதிர் பாராத வகையில், வண்ணக் கிண்ணத்தை அவர் தட்டி விடவே, நண்பரின் சட்டையி லெல்லாம் வண்ணம் கொட்டி விட்டது. பிகாசோ தமது செயலுக்கு மிகவும் வருத்தப் பட்டு நண்பரிடம் மன்னிப்புக் கேட்டார். ஆனால், அந்த நண்பர் குறிப்பிட்டார்:

''பரவாயில்லை, பரவா யில்லை! இந்தச் சட்டையில் உங்கள் கையெழுத்தையும் போட்டுவிடுங்கள்...... நான் இதனை விற்றுக் காசாக்கிக் கொள்கிறேன்''

பிகாசோவின் ஓவியத் துக்கு உலகத்தில் பெரும் மதிப்பு இருந்தது என்பதை நண்பரின் வார்த்தைகள் நய மாகத் தெரிவித்தன.



தங்கள் ஊரில் நில நடுக் கம் ஏற்படப்போவதை அறிந்த ஒரு பெற்றோர், தங்களின் ஒரே மகனை, நூறு மைல் தொலைவில் உள்ள உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். இரண்டு நாட்களில் அந்த உறவினரிட மிருந்து பையனின் பெற்றோ ருக்குக் கீழ்க்கண்டவாறு தந் திச் செய்தி வந்தது.

''பையனை இன்று திருப்பி அனுப்பியுள்ளோம்; நிலநடுக் கத்தை இங்கே அனுப்பி வைத்தால் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.''

மெல்லிய மயில் தோகையேயானாலும் எவ்வளவு ஏற்றினால் சுமக்கக் கூடுமோ அந்த அளவிற்கு மிகுதியாக ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்து கெடும். அதுபோலப் பகைவர் மிகவும் எளியராயினும் பலர் ஒருங்கு திரண்டு எழுந்தால் வலிய பெரிய வீரனையும் வென்று தொலைப்பர்.

பகைவர்களைத் தனித் தனியே நோக்கும் போது மெலியவர்களாக இருக்கலாம். ஆயினும் அவர்கள் ஒன்றாகச் சேரும்போது ஒரு பெரிய சக்தியைப் பெற்றுவிடுகிறார்கள். எனவே எப்பொழுதும் தமக்கு மாறாயிருப்பவர் அனைவரையும் ஒன்று சேர்த்து மொத்தமாக அவர்கள் வலிமையை எண்ணிப் பார்க்க வேண்டுமேயல்லாது தனித் தனியே நோக்கி வாளா இருந்துவிடக் கூடாது.

தான் வலிமையுள்ளவனாயினும் பலரோடு பகை கொள்ளக் கூடாது. எதிரிகள் மெலியவர்களேயானாலும் அவர்கள் ஒன்றாக இணையும்படி விட்டுவிடக் கூடாது. இச் செயற் சூழ்ச்சி அவன் வலிமைக்கு மேலும் வலிமை சேர்க்கும். இச் சூழ்ச்சியில்லாத் தன்மை அவன் வலிமையைப் பொருளற்ற தாக்கி விடும். வலிவுள்ளவனாயிருக்கின்றோம் என்ற செருக்குக் கொண்டு தடுக்க வேண்டியவைகளைத் தடுக்க வேண்டிய நேரத்தில் தடுக்காமல் ஒருவன் இருப்பானேயானால் அதுவே அவன் அழிவுக்குக் காரணமாய் அமைந்துவிடும்.

செய்யும் செயலைத் தன்னுடையவலிமை, பகைவனுடைய வலிமை, தனக்குத் துணையாயிருப்போருடைய வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் வள்ளுவர், தக்க காலமறிந்தும் செயலாற்ற வேண்டுமென்கிறார். ''தக்க வேளையில் தக்க இடத்திலிருந்து செயலாற்றினால் உலகமே வேண்டுமென்று கருதினாலும் கை கூடும்; காத்திருக்க வேண்டிய நேரத்தில் கொக்கைப் போல் அமைதியாக இருக்க வேண்டும். வேளை வாய்த்ததும் அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்க வேண்டும். கோட்டான் காக்கையை விட வலிமையானது. பகலில் அதற்குக் கண் தெரிவதில்லை. எனவே பகலில் அதனினும் வலிமை குன்றிய காக்கை அதனை வென்று விடுகிறது. கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால் அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால் செயற்கரிய செயல்களையும் செய்து முடிக்கலாம்''—காலமறிந்து செயலாற்ற வள்ளுவர் இவ்வாறு வகுத்துரைக்கின்றார். காலமறிந்து செயலாற்றுவதோடு வாய்ப்பான இடமும் வேண்டும். ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எக்காரியத்தையும் தொடங்கக் கூடாது. ''நீரில் இருக்கும்வரை முதலை மற்ற உயிர்களைக் கொல்கிறது. அதுவே நிலத்தில் கிடத்தப்பட்டால் எளிய உயிர்களும் அதனை வென்றுவிடும். போர்க் களத்தில் வேல் ஏந்திய வீரர்களை வீசியெறிந்து கொன்ற யானை, கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் நரிகள் அதனைக் கொன்றுவிடக் கூடும்''—இவ்வெடுத்துக் காட்டுகள் மூலம் ஏற்ற இடத்தின் காரணமாக வலிமை சேர்வதையும், பொருந்தா இடத்தின் காரணமாக வலிமை குறைவதையும் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

இடமறிந்து செயல் படாவிட்டால் வெற்றி வாய்ப்பை இழக்க நேரும் என்பதைத் தேரைக் கொண்டும் திருவள்ளுவர் விளக்குகின்றார். தேர் பெரியது ; வலிமையான சக்கரங்களையுடையது ; காற்றிலும் விரைந்து செல்லும் வேகமுடையது. ''மேல்ஆடை வீழ்ந்தது எடு என்றான் ; அவ்வளவில் குதிரைகள் நாலாறு (இருபத்து நான்கு) காதம் ஓடிவிட்டன''.—நளன் தேர் செலுத்தும் ஆற்றலைப் புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் இவ்வாறு புகழ்ந்துரைப்பார். தேரின் இந்த ஓட்டம் தரையில்தான்! கடலில் தேரைச் செலுத்த முடியுமா? மரக்கலம் கடலில் அலைகளை எதிர்த்து, காற்றினைக் கிழித்து, அன்னமென ஆடி அசைந்து செல்லுகிறது. அதை நீரிலிருந்து நீக்கி, நிலத்தில் போட்டால் நகர முடியுமா?

''கடல்ஓடா கால்வல் நெடுந்தேர்; கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.'' (குறள் 496)

கால்வல் நெடுந்தேர் கடல் ஓடா ; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா—என்பது மேலுள்ள செய்யுளின் உரைநடை வடிவம். வலிமையான சக்கரங்களைக் கொண்ட நெடிய தேராயினும் அதன் ஓட்டம் நீரில் செல்லாது; நாவாயின் இயக்கம் தரையில் முடியாது. தரை தேருக்கு வாய்ப்பான இடம் ; நீர் கலத்திற்கு வாய்ப்பான இடம். தனக்கு வாய்ப்பான தரையை விட்டு, தேர் நீரில் ஊரமுடியாதது போல, ஓரிடத்தில் வலிமையாக இருப்பவன் இட வேறுபாடு காரணமாகப் பிறிதோரிடத்தில் எளியவனாகவும் ஆகக் கூடும்.

தேரும் கலமும் மரத்தால் ஆனவையே. ஒரே பொருளால் செய்யப்பட்டிருப்பினும் ஒவ்வொன்றும் ஒவ்வோரிடத்தில்தான் சிறப்பினைப் பெற முடிகிறது. சக்கரங்களைச் செய்து, மேலே தட்டினைச் சேர்த்து, அச்சையும் பொருத்தினால் மரம் தேராகத் தரையிலே ஓடுகிறது. அதையே உட்குடைந்து கலமாகச் செய்தால் நீரில் ஓடுகிறது. ஒரே மரமாயினும் தரையிலும், நீரிலும் செல்ல வெவ்வேறு அமைப்புகளைச் செய்வதுபோல ஒரே செயலாயினும் இடத்திற்கேற்ற உத்தியைக் கையாண்டால்தான் வெற்றி காண முடியும்!

நீரில் ஓடுகின்ற கலத்தைத் தரையில் கிடத்தினால் இயக்கம் இராதே தவிரக் கலத்திற்குச் சேதம் எதுவும் நேர்வதில்லை. ஆனால் தேரைக் கடலினுள் செலுத்தினால் நகராது என்பதோடு முழுகி அழியவும் நேரும். இடம் ஏற்றதாக இல்லாவிட்டால் சில வேளைகளில் தரைப்பட்ட கலம்போலச் செயலற்ற நிலை மட்டும் நேரக்கூடும். இன்னும் சில வேளைகளில் நீருக்குள் ஆழும் தேர்போலச் செயலற்ற நிலையோடு அழிவும் சேர்ந்து நேரக் கூடும். ஆதலின் ஏற்ற கலத்தோடு தக்க இடத்தையும் தேர்ந்தெடுத்து வினையாற்றினால் தான் நிறைவு காண முடியும்.

இடமறிந்து, வலியறிந்து, திட்டமுடன் வினையாற்ற வேண்டுமென்பதைத் திருவள்ளுவர் தேர், அச்சு, ஆணி கொண்டு விளக்கியுள்ளார். நம் வாழ்க்கைத் தேர்க்குத் திருக்குறள் வலிமையான அச்சாகத் திகழ்கிறது. திருவள்ளுவரின் கூர்த்த மதி அச்சாணியாய் நின்று தேரைச் சீருறச் செலுத்திச்செல்கிறது. அச்சை மதித்து, ஆணியைப் போற்றுவோமாக !

# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.


















**தமிழ்நாடு கதர்—**
**கிராமத் தொழில் வாரியம்**
குறளகம்
சென்னை 600001

# நற்றமிழ் வளர்க்கும் நக்கீரர் கழகம்

நாம் வாழும் இந்தக் காலத்தையும் ஒரு 'சங்க காலம்' என்று கூறலாம்!

ஆம். இன்று எத்தனை சங்கங்கள் இங்கே இருக்கின்றன! சில சங்கங்கள் அந்தக்கால முச்சங்கங்களைப்போலத் தமிழை வளர்க்கின்றன; சில பொழுதுபோக்குச் சங்கங்களாக விளங்குகின்றன.

வெறும் பொழுதைப் போக்காமல், பயனுள்ள வகையில் பொழுதைப் போக்கும் சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், அமைப்புகள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் நக்கீரர் கழகம்.

இது எப்பொழுதும் சும்மா இருப்பதில்லை. ஏதாவது ஒரு இலக்கியக் கூட்டம், தமிழ் வகுப்பு, கல்வெட்டு வகுப்பு என்று தமிழ்ப் பணி செய்துகொண்டே இருக்கும்.

இக் கழகம் ஆண்டுதோறும் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகளை நடத்திப் பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயனுள்ள செயல்களைச் செய்து வருகிறது.

கடந்த மார்ச் திங்களில் இக் கழகம் 9 இலக்கியக் கூட்டங்களைச் சென்னை மாநிலக் கல்லூரியில் நடத்தியது. இக் கூட்டத்தில் சங்க காலம், தொல்காப்பியம், நன்னூல், சிலப்பதிகாரம், யாப்பு, தண்டி, இலக்கியத் திறன், திறனாய்வு, அகப்பொருள், புறப் பொருள், மொழியியல், இலக்கியமும் கலையும் ஆகிய தலைப்புகளில் அவ்வத்துறைப் பேராசிரியர்களால் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன.

இந்தச் சொற்பொழிவுகள் புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர் நிறைநிலை, தமிழ் எம்.ஏ., பயிலும் மாணவ மணிகளுக்குப் பெருந்துணை புரிந்தன. கூட்டத்திற்குத் திரளான மாணவ மாணவியர் கலந்து கொண்டது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

புலவர் நிறைநிலை, எம்.ஏ., முதலாண்டு தேர்வுக்குரிய 30 கல்வெட்டுப் பாடங்களை நிழற்படம் மூலமாக விளக்கிக் காட்டியது ஒரு சிறப்பு அம்சமாகும்.

இக்கழகம் நடத்தும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில் புலவர் புகுநிலை, புலவர் முதனிலை, புலவர் நிறைநிலை, தமிழ் எம்,ஏ., வகுப்புகள் இலவசமாகக் கற்பிக்கப் படுகின்றன. சுமார் 20 தமிழ் ஆசிரியர்கள் இக் கல்லூரியில் அன்புப் பணி புரிந்து வருகின்றனர்.

இவையன்றிச் ''சைவம்'' தொடர் சொற்பொழிவுகளும் நடக்கின்றன. இதுவரை 36 சொற்பொழிவுகள் முடிந்துள்ளன. மேலும் பத்துச் சொற்பொழிவுகளில் இது முடிவுறும். ''வைணவம்'' தொடர் சொற்பொழிவுகளில், வைணவ சமயம் பற்றியும், வைணவ இலக்கியங்கள் பற்றியும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை 20 சொற்பொழிவுகள் முடிவுற்றன. மேலும் 3 சொற்பொழிவுகளில் இது முடிவுறும். ''கல்வெட்டியல்'' தொடர் சொற்பொழிவுகள் ஏற்கெனவே நடந்து வருகிறது.

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாயிருந்து, தமிழ், தமிழர், தமிழ்நாடு பெருமையினை-அருமையினை உலகமெலாம் பரவும் வகை செய்தல் தமிழர்தம் தலையாய கடமையன்றோ?

—பி.வி.ஜி.



# வினாக்குறி?



என்னுடை நெஞ்சில் எழுந்த வினாக்குறி
'என்ன எழுதலாம்?' என்ற வினாக்குறி!
என்னைப் பற்றி எழுதுநீ கவிதை
என்றது வினாக்குறி; எழுந்தது கவிதை!
கனாவினில் பகற்கனா காண்பது தீது!
வினாவினில் எதுவும் வீணா? இல்லை!
பாட்டினில் ஒளவைப பாட்டி யுடன்நீ
போட்டிட முடியுமா போட்டி? முதுகுக்
கூன்தனில் வெற்றி கொள்கிறாய் ஒளவையை!
ஏன்நீ வளைந்தே இருக்கிறாய் வினாக்குறி?
வியப்புக் குறியோ வீர வாலிபன்;
தயங்கி மயங்கித் தலைகுனி யாமல்
நிற்கும் நிமிர்ந்து! நீமணப் பெண்போல்
வெட்கம் கொண்டா வெகுவாய்க் குனிகிறாய்?
தொங்கிக் கிடந்த தூண்டிலின் முள்தான்
இங்குன் வடிவில் எழுந்து நிமிர்ந்ததோ?
வார்த்தை நடக்கும் வரிநெடுஞ் சாலையைப்
பார்த்திட நிமிர்ந்த மண்ணுளிப் பாம்புநீ!
பொன்மணிக் கதிர்தரும் பொலிவுடன் விளங்கும்
செந்நெற் பயிரின் சிரம்அறுக் கின்ற
கைப்பிடி யுடைய கருக்கரி வாள்நீ!
ஒப்புமை உவமைகள் உனக்கோ பலப்பல!
நெஞ்சில் பதுங்கி நிற்கும் பதிலைக்
கொஞ்சம் இழுத்துக் கொணரும் கொக்கிநீ!
கலந்துரை யாடலில் கலந்துநீ எழுகிறாய்;
நலந்தரும் கருத்துகள் நாங்கள் பெறுகிறோம்!
படிக்கும் பள்ளிப் பிள்ளைகள் காட்டும்
துடுக்கை அடக்கத் தோன்றிய கருவிநீ!













மக்க ளாட்சி மலர்ந்திரா விட்டால்
திக்குகள் எட்டிலும் தேர்தலே இல்லை!
தக்கநீ இன்றேல் தரணியில் படிக்க
அக்கறை வருமா? அமையுமா தேர்வுகள்?
மாணவர்க் கிதனால் மதிப்புடை நீதான்
ஆணவம் அடக்கும் அருள்குரு நாதன்!
காலையில் வீட்டுக் காரிகை நெஞ்சில்
ஆழமாய் எழுந்து அமைந்த வினாக்குறி
பொரியலாய், வறுவலாய்ப் புதுப்புதுச் சமையலாய்ச்
சரிவர அமைந்து சாப்பிட வைக்கும்!
அஞ்ஞானி நெஞ்சில் அடிக்கடி வினாக்குறி;
மெய்ஞ்ஞானி யாகிறான் மேதினி புகழ்ந்திட!
விஞ்ஞானி நெஞ்சின் வினாக்குறி அழகு
கொஞ்சும் நிலாக்கல் கொணர்ந்துகாட் டிற்று!
காட்சிப் பொருள்களின் மாட்சியால் நல்லசொல்
லாட்சிக் கவிஞனின் அகமெழும் வினாக்குறி
காவியம் கொடுக்கும்; கைத்திறம் படைத்த
ஓவியன் நெஞ்சில் உதிக்கும் வினாக்குறி
படங்களாய் மாறிப் பார்வையை இழுக்கும்!
நடமிடும் குழந்தையர் நாவின் வினாக்குறி
அறிவை அவர்க்கு அறிமுகப் படுத்தும்!
அறிபொருள் வினாவென, ஐய வினாவென
அறியான் வினாவென அமைந்துநீ எமக்குப்
பாடமாய்த் தினம்மனப் பக்குவம் தருகிறாய்!
''ஏ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏஇரு வழியும் வினாவா கும்!'' எனும்
நன்னூற் சூத்திரம் உன்னாற் பிறந்தது!
கண்களின் வினாக்குறி காதலின் தொடக்கம்!
பகுத்தறி வாளரின் படைத்தலை வன்நீ!
தொகுத்துன் பெருமைகள் தொடர்ந்துநான் கூறினால்
இவ்வள வேன்? என எழுந்திடும் வினாக்குறி!
அவ்வினாக் குறிஏன்? அதனால் முடிக்கிறேன்!






புலவர் பொன்னிவளவன்



சட்டத் தமிழ் பற்றிச் சொற்பொழிவாற்றுகிறார் திரு. மா. சண்முக சுப்பிரமணியம்.

# சட்டத்தமிழ்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு கொலை வழக்கு நடந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவரைக் கொன்றதை நேரில் கண்டதாகக் கூறும் சாட்சிகள் எவரும் அவ்வழக்கில் இல்லை. இதர சூழ்நிலைச் சான்றுகளிலிருந்து கொலைக் குற்றத்தை இவர்தாம் இழைத்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது என்ற அடிப்படையில் வழக்காடப்பட்டது.

சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், இரண்டு நாட்கள் வாதங்கள் (Arguments) நடந்தன. நேரடிச் சாட்சியம் இல்லாததால், சூழ்நிலைகளிலிருந்து எவ்வாறு 'எதிரி'யேதான் குற்றம் இழைத்தார் என்பதை ஊகித்தறிய வேண்டும் என்று நுட்பமாகவும் விவரமாகவும் அரசாங்க வழக்கறிஞர் வாதித்தார். குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் வாதாடிய வழக்கறிஞரோ, 'குற்றம் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்படவில்லை' என்று காரணங்கள் காட்டி வாதித்தார். முடிவில், நீதிபதி, 'கொலைக்குற்றம் மெய்ப்பிக்கப்பட்டதெ'னத் தீர்ப்புக்கூறி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனை விதித்தார். அத் தீர்ப்பினை நீதிபதி படித்து முடித்ததும், நீதிமன்ற எழுத்தர் எழுந்து, குற்றம் சாட்டப்பட்டவரை நோக்கி, "உமக்குத் தூக்குத் தண்டனை சொல்லியிருக்காங்க", என்று உரத்த குரலில் கூறினார்.

அவ்வாறு அவர் கூறியதும், நீதிமன்றத்தில் ஓர் அமைதி நிலவியது. அந்த அமைதியின் குரலாக ஒரு குரல் ஒலித்தது. கைதிக் கூண்டிலே நின்று கொண்டிருந்த குற்றவாளியின் குரல்தான் அது!

"ஜட்ஜ் துரைங்களே, இரண்டு நாளாக வக்கீலுங்க என்ன பேசினாங்கன்னு தெரியலை. நீங்க என்ன தீர்ப்புப் படிச்சீங்கங்கறதும் தெரியலை. எனக்குத் தூக்குத் தண்டனை போட்டிருக்கீங்க! இதுதான் தெரியுது!" என்று இரு கைகளையும் கூப்பிக்கொண்டு கண்களிலே நீர்மல்க, உதடுகள் துடிக்க, குரல் தளதளக்க 'எதிரி' நீதிபதியிடம் கேட்டார். நேர்மை நிறைந்த நீதிபதியின் முகத்திலே துயரக் களை தோன்றி மறைந்தது.

குற்றம் சாட்டப்பட்டவராக (Accused) நின்றவர் 'தீர்ப்புக் குற்றவாளி' (Convict) ஆகிவிட்டார். கைதிக் கூண்டிலிருந்து அவரை வெளியேற்றி, அவருக்குக் கைகளிலே விலங்கிட்டுக் காவல் அதிகாரிகள் சிறைக்கு அவரை அழைத்துச் சென்றனர். காவல் துறையினரின் உந்து வண்டி மரண தண்டனை பெற்ற குற்றவாளியை ஏற்றிக்கொண்டு மாவட்டச் சிறையை நோக்கி விரைந்து சென்றது.

ஆனால், மரண தண்டனை பெற்றவரின் ஏக்கப் பார்வைக்கும் இதயக்குரலுக்கும் விடையே இல்லை!

இது உண்மையில் நடந்த நிகழ்ச்சி!

ஆங்கிலமொழி தெரியாத நிலையில் நின்று கொண்டிருந்த

குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆங்கிலத்தில் நடந்த வாதங்களும், ஆங்கில மொழியில் எழுதி வாசிக்கப்பட்ட தீர்ப்பும், விளங்கவில்லை! எந்தக் காரணங்களின் அடிப்படையில் தமக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது என்பதும் அவருக்குப் புரியவில்லை! நீதியின் குரல் அவருக்குப் புரியாமலே போய்விட்டது! ஆனால், நீதி விதித்த தண்டனை அவரது உயிரைப் போக்கிவிட்டது!

இந்நிலைதான் இன்றும் நீடித்து வருகின்றது.

''நீதி வழங்கப்பட்டால் மட்டும் போதாது. வழங்கப்படுவது நீதிதான் என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ளும் வகையில் அது வழங்கப்பட வேண்டும்'' என்பது நீதிமுறையின் அடிப்படைக் கொள்கையாகும். இதனால்தான், நீதிமன்றங்கள் மக்கள் அனைவரும் காணும் வகையில் இயங்குகின்றன. நீதி முறையின் நீர்மையும் நெறியும், பண்பும் பயனும், நாட்டுமக்கள் நலமுற அறியும் விதத்தில் அமைதல் வேண்டும். எனவே, நீதிமன்ற மொழி, மக்களுக்குப் புரியும் வகையில் அவர்களது தாய் மொழியாகவே இருத்தல் வேண்டும் என்பது நீதிமுறையின் இன்றியமையாத தேவையாகிறது.

அந்நியர் ஆட்சியின் காரணமாகவே ஆங்கிலம் இன்று நீதிமன்ற மொழியாக நிலவுகின்றது. அந்த மொழியறிவால் நாம் அடைந்துள்ள பலன்கள் பல. ஆங்கிலேயரின் நீதிமுறை நம்நாட்டின் பண்பிற்கு ஏற்றவாறு இயைந்துள்ளது. ஆங்கில ஆட்சியினால் நம்நாட்டிற்கு ஏற்பட்ட நற்பயன்களில் தலைசிறந்தது அவர்கள் நிறுவிய நீதிமுறை என்று கூறுவது சாலப் பொருந்தும். இருப்பினும், நீதிமுறை தாய்மொழியில் அமைவது நல்லாட்சியின் பயனாகும்; நீதிமுறையின் நெறியுமாகும்.

'சட்டத்தமிழ்' என்னும் நூலிலுள்ள இந்தச் சம்பவமும், கருத்தும் நமக்கு உணர்த்துவது இதைத்தான்:

''எதிர்காலத்தில் நீதிமன்ற மொழியாகத் தமிழே வரவிருப்பதால், சட்டம் பயிலும் மாணவர்கள் சட்டங்களைத் தமிழில் புரிந்து கொள்வது எளிதானது; இன்றியமையாதது.''

இதனை உணர்த்தும் நோக்கோடு சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தின் சார்பில் சட்டத்தொடர் சொற்பொழிவுகள் நடந்து வருகின்றன.

> **சிங்க வேட்டை**
>
> **வேட்டைகள் அனைத்திலும் சிங்க வேட்டைதான் மிக ஆபத்தானது. இதயத்தில் ஊடுருவச் சுடப்பெற்ற சிங்கமும் மனிதனைத் தாக்கிக் கொன்றுவிடும் அளவுக்கு அதன் சினம் வீரிட்டு நிற்கும். அதே நேரத்தில் விலங்கினங்களில் மிகச் சிறிய இதயம் கொண்டது சிங்கமாகும்!**

இந்தத் தொடர் சொற்பொழிவு கடந்த ஆண்டு அக்டோபர்த் திங்கள் 16-ஆம் நாள் சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துபவர் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துறையின் செயலாளர் திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள்.

சட்டத்தைத் தமிழில் தெளிவாக எடுத்து விளக்கும் இவருடைய சொற்பொழிவுகள் பொதுமக்களுக்குக் குறிப்பாகச் சட்டத்துறை மாணவர்களுக்கு மிகவும் பயன்படுவனவாகும்.

சட்டம் பற்றித் தமிழில் ஒரு தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவது இதுவே முதல் தடவையாகும் என்பதைப் பெருமையோடு சொல்ல வேண்டும்.

தமிழ் வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டது இந்த ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம். 'பட்டிமன்றம்' என்ற பெயர், இன்று விவாத அரங்குகளான 'பட்டி மண்டபங்களையே' குறிக்கிறது. சென்னை நகரின் சுறுசுறுப்பான பகுதியில் அமைந்துள்ள மூன்றடுக்கு மாளிகையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. கட்டடத்தில் ஒரு தமிழ் மன்றத்தைக் காலஞ் சென்ற டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் இலக்கிய அன்பர்கள் தொடங்கிய பொழுது, அவ்வமைப்புக்கு 'ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம்' என்றே அவர் பெயரிட்டார். 'பன்னருங் கலை தெரி பட்டி மண்டபம்' என்ற கம்பரின் வாக்குக்கேற்ப, ஒய். எம். சி.ஏ. பட்டிமன்றத்தில் பல திறச் சொற்பொழிவுகளும் நடைபெறலாயின.

இதே பட்டிமன்றத்தில்தான் திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் மூன்றாண்டுகள், கம்ப இராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அடுத்து டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகார வகுப்புகளை மூன்றாண்டுகள் தொடர்ந்து நிகழ்த்தினார்.

பட்டிமன்றத்தின் இப்போதைய தலைவரும், பல சட்ட நுணுக்கங்களைத் தமிழில் எழுதியிருப்பவரும் ஆகிய திரு. மா. சண்முகசுப்பிரமணியம் அவர்கள், தமிழில் முதன் முதலாக ஒரு சட்டத் தொடர் சொற்பொழிவினைக் கடந்த 6 மாதமாக நிகழ்த்தி வருவது புதுமையான முயற்சியாகும்.

பொதுமக்களுக்கும், சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில், 'குற்றவியல்' பற்றி 12 சொற்பொழிவுகளை இதுவரை அவர் ஆற்றியுள்ளார். இத்தொடரில் இன்னும் 3 சொற்பொழிவுகள் நிகழ இருக்கின்றன.

அடுத்துத் 'தீங்கியல் சட்டம்' (The law of Tort) பற்றிய சொற்பொழிவுகள் நிகழும்.

''யாமறிந்த புலவரிலே
கம்பரைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
கண்டதில்லை''

என்ற பாரதியாரின் பாடலுக்கேற்ப கம்பரையும் இளங்கோ வடிகளையும் தக்க வகையில் போற்றியுள்ள பட்டி மன்றம் இச் சட்டச் சொற்பொழிவுகளின் வாயிலாகக் 'குறள் கூறும் சட்ட நெறி'யைச் சிறப்பாகப் பரப்புகிறது என்று கூறலாம்.

மாதம் மும்முறை செவ்வாய்க்கிழமைகளில் சரியாக மாலை ஆறரை மணிக்குத் தொடங்கி, ஒரு மணி நேரம் சொற்பொழிவு, பிறகு அரை மணி நேரம் அவையினரின் ஐயங்களைத் தெளிவித்தல் என்ற முறையில் நடைபெறும் இக்கூட்டங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

இதுபோன்ற பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துவரும் தமிழார்வமிக்க இளைஞர் பட்டிமன்றச் செயலாளர் திரு. கெ. பக்தவத்சலம் பாராட்டுக்குரியவர்.

—.பி.வி.ஜி.

தமிழ்நாட்டின்

# பசுமைப் புரட்சி

**1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்**

**1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்**

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின் பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| **1966-67ல்** | **2100.87** |
| **1972-73ல்** | **5618.15** |



**தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்**

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

TNSC BANK

குடவாசல்

| | | |
|---|---|---|
| **ஆர். கனகசபை** | **சி. கிருட்டிணமூர்த்தி** | **என். எல். ஹெப்லிகர்** |
| தலைவர் | உபதலைவர் | நிர்வாக இயக்குநர் |



மற்போர் பயிற்சி

# உடற்பயிற்சிக்கு ஒரு கல்லூரி

நல்ல உடற்கட்டும் தேக ஆரோக்கியமும் அமைய, முறையான உடற்பயிற்சிக் கல்வி இன்றியமையாதவொன்றாகிறது. உடற்கல்வி புதிய கல்வித் திட்டத்தின் கீழ் புதுமையானதென்றாலும் இது தொன்று தொட்டு வருகின்ற கிரேக்க ரோமானிய நாட்டு மக்கள் நமக்குக் காட்டிய வழி முறையே ஆகும். பழங்காலத்திலிருந்தே உடற்பயிற்சி அந்த அந்த நாட்டு மக்களுடைய பண்பாடு, சமுதாயம், நாகரிக வளர்ச்சியை ஒட்டி வளர்ந்து வந்துள்ளது. உதாரணமாக ஸ்பார்ட்டான் நாட்டு அரசு அதனுடையமக்கள் போர்வீரர்களாகத் திகழ வேண்டுமென உடற் பயிற்சியைக் கற்றுத் தந்திருக்கின்றது. அது, காலப் போக்கில் மாறி உடல் ஆரோக்கியம் உண்டாக்கும் வழியெனப் பின்பற்றி வந்துள்ளார்கள். அன்றைய நாட்களில் ஸ்வீடனில் இளைய தலைமுறைகளை உடற்கட்டுடன் வளர்க்கும் முறை பின்பற்றப்பட்டு வந்தது. அங்க அமைப்புகள், ஆரோக்கிய உடலுக்கு வேண்டிய பருமன், தேகத்தைச் சீராக வைத்திருக்கும் வழி முறைகளைக் கற்பித்து வந்தனர்.

இப்பொழுது உலகெங்கும் அந்த முறையே சிறந்த முறையெனச் செயல் முறையில் பின்பற்றி வருகின்றனர். அசங்கியமான, வேண்டப்படாத சதைப் பற்றுகளைக் குறைக்கும் வழி முறைகள் அவர்களால் கையாளப்பட்டு வந்தன. சரித்திர வாயிலாக விளையாட்டு போட்டிகள் அனைத்துமே தேகத்தினைக் காப்பாற்றும் இளைய வலிமை மிக்க சமூகத்தினை உருவாக்கும் கருவியாகப் பயன்படுத்தி வந்தனர். இம்மாதிரியான விளையாட்டுப் பயிற்சிகளை முறைப்படி, போட்டி உணர்வுடன் துவக்கியது கிரேக்க மக்கள் தான். அவர்கள் கி.மு. 776-ல் ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்திச் சிறந்த விளையாட்டு வீரர்களுக்குப் பரிசு கொடுத்துப் பாராட்டுதல் செய்து வந்தனர்.

இந்தியாவில் இயங்கி வரும் 54 ஒய்.எம்.சி.ஏ. உடற்யிற்சிக் கல்லூரி நிறுவனங்களுள் மூன்று கல்லூரிகள் தமிழ் நாட்டைச் சாரும். ஒன்று, சென்னையிலுள்ள சைதாப்பேட்டையிலும் மற்ற இரண்டில் ஒன்று காரைக்குடியிலும், மன்றொன்று கோயம்புத்தூரிலும் இயங்கி வருகின்றன. 80 ஏக்கர் பரப்பளவில் அமையப் பெற்றுள்ள சைதாப்பேட்டை ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி இயற்கைச் சூழ்நிலையில் அடர்ந்த மரங்களுடன் கண்ணுக்கெட்டிய தூரம் பசுமையான புல் தரையுடன் காணப்படுவது மனத்திற்கு அமைதி தருவதோடு, கண்களுக்கு விருந்தாகவும் அமைகின்றது.

நெருக்கடியும் பரபரப்பும் மிகுந்த அண்ணாசாலையின்



தமிழரது கிராமிய நடனமான கரகம் மாணவிகளுக்குச் சொல்லித் தரப்படுகிறது



மொத்தமாகச் சேர்ந்து செய்யும் பயிற்சி.

ஓரத்தில் இவ்வளவு நிறைந்த அமைதி தவழும் இடமும் உண்டா, என்று காண்போர் வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது இவ்விடம். இங்குக் கல்வி பயில வந்துள்ள மாணவர்களுக்குக் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகவே இது காட்சியளிக்கின்றது. விவசாயக் கல்லூரி கோவைக்கு மாற்றப்பட்டு விட்டதால் ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி அங்கு அமைவதற்கு வசதியாயிருந்தது என்பது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

கல்விப் பணிக்குத் தக்க முறையில் செலவு செய்துவரும் தமிழக அரசு இந்தக் கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ரூ.1·25 இலட்சம் நிதி உதவி அளித்து வருகிறது.

இங்குள்ள மாணவர்கள் ஆண், பெண் இருபாலருமே பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்துள்ளனர். இங்குள்ள மாணவர்கள் ஒருவருக்கொருவர் புரிந்து இங்கிதமாக நடந்து கொள்ளும் முறை நம்மிடையே நிலவி வரும் ஒற்றுமையுணர்ச்சியையும் சகோதரத்துவத்தையும் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்திருக்கிறது. இங்கு ஐம்பது சதவிகித மாணவர்கள் பஞ்சாப் மாநிலத்திலிருந்து வந்துள்ளவர்களே ஆவார்கள். இவர்கள் மற்ற மாநில மாணவர்களை விட உடற்பயிற்சியில் அதிக ஆவலும் சிரத்தையும் செலுத்துகின்றார்கள். இந்தக் கல்லூரி முதல்வர் திரு. ஜே. பி. தாமஸ் அவர்கள் பஞ்சாப் மாநிலத்தி



முககோணம் போல் உடலை வளைத்துப் பயிற்சி செய்கின்றார்கள்

லிருந்து வருகின்ற கல்லூரியில் சேரவிருக்கும் விண்ணப்பதாரர்களில் எண்ணிக்கை அதிகமாயும் மேலும் அங்கிருந்து வருபவர்கள் அதிக சிரத்தை செலுத்திக் கல்வி பயிலுவதாயும் குறிப்பிட்டுச் சொல்லுவது சீக்கியர்களுடைய ஆர்வத்திற்கு ஒரு நற்சான்றாக அமைகின்றது. இங்கிருக்கும் 400 இடங்களுக்குப் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் குவிவது விளையாட்டில் பொதுவாக மக்களுக்குரிய ஆர்வத்தை விளக்குகின்றது. குறிப்பாக நாகாலாந்திலிருந்து திரு. சிம்ரே என்னும் சட்ட மன்ற உறுப்பினர் கல்வி பயில வந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இங்கு கபடி, மல்யுத்தம், யோகாசனம் மற்றும் தமிழ் நாட்டுக் கிராமிய நடனங்களான கரகம், கும்மி, பொய்க்கால் குதிரை போன்றவைகளும் மாணவ மாணவிகளுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. இக்கல்லூரியில் அனைத்து மாநில மாணவர்களும் குழுமியிருப்பதால் ஆங்காங்குள்ள விசேட கிராமிய நடனங்களும் மாணவர்களுக்குக் கற்றுத் தருகின்றார்கள். குறிப்பாக வட எல்லையிலுள்ள காஷ்மீரிலிருந்து தென் எல்லையிலுள்ள கன்னியாகுமரி வரை எல்லா மாநிலக் கிராமிய நடனங்களும் மாணவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன. இந்த நடனங்கள் அனைத்துமே உடலைச் சீராக வைத்திருக்கும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளவை.



கூடைப்பந்துப் போட்டி ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி மூலம் இந்தியாவில் புகுத்தப்பட்டது.



மேஜைப்பந்து (Table Tennis) கற்றுத்தரப்படுகிறது.

இது தவிர, கூடைப்பந்து, மட்டைப்பந்து, நீச்சல் ஆகியவற்றிலும் மாணவர்கள் நல்ல முறையில் பயிற்சி பெறக் கல்லூரி முதல்வர் கவனம் செலுத்தி வருகின்றார்.

**இயன் மருத்துவம்**

ஒய். எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரியில் தற்பொழுது போட்டி விளையாட்டுகளுக்கு ஏற்ற வைத்திய முறையினை மாணவர்களுக்குப் பாடமாகவே கற்றுத் தருகின்றார்கள். விளையாட்டு வீரர்களுக்குக் காயங்கள் ஏற்படுவதைத் தடுக்கத் தற்காப்புக்கான பாடங்களும், காயம் ஏற்பட்டால் அதிலிருந்து விரைவில் குணமடையும் வழிமுறைகளும் கற்றுத் தரப்படுகின்றன. இம்முறைப் பயிற்சிகளால் விபத்துக்கள் ஏற்படுவது கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகளும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. புனித ஜான் ஆம்புலன்ஸ் முதலுதவித் தேர்வில் தேறியவர்களுக்கே பட்டம் கொடுக்கப்படுகின்றது. மேலும் பட்டம் பெறுமுன் படிக்கும் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் நீச்சல் தேர்விலும் வெற்றி பெற வேண்டும். இங்குள்ள நீச்சல் குளம் அகில உலக நீச்சல் குள விதி அமைப்பின்படி அமைக்கப்பட்டுள்ள ஒன்றாகும். நவீன வசதிகள் அனைத்தும் நிறைந்துள்ள இந்த நீச்சல் குளத்தில் பொதுமக்களும் கட்டணம் செலுத்திக் குளிக்க வசதி செய்துள்ளனர்.

சுருங்கச் சொன்னால் இந்த ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி வெறும் விளையாட்டுப் பொழுதுபோக்கு இடமாக அமையாமல் நல்ல உடற்கட்டுடன் பட்டம் தந்து வேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கும் கல்லூரியாக அமைந்திருக்

# கோடைக்கும் சிறந்தது கோழி முட்டையே!

தேவைக்கேற்ற புரதச்சத்து டாப்கோ முட்டையில் பெற்றிடுவீர்!
டாப்கோ முட்டைகள் கீழ்கண்ட டாப்கோ விற்பனை நிலையங்களில் கிடைக்கும்!

| | |
|---|---|
| பெரம்பூர் | — நெல்வயல் சாலை கடைவீதி |
| கோடம்பாக்கம் | — B. E. காலனி II வீதி |
| பட்டினப்பாக்கம் | — நுழைவாயில் |
| புரசவாக்கம் | — மூக்காத்தாள் தெரு |
| சைதாப்பேட்டை | — மார்கெட் |
| ஜாம்பஜார் | — காவல் நிலையம் எதிரே |
| மைலாப்பூர் | — சித்திரக் குளம் |
| சேப்பாக்கம் | — எழிலகம் |
| அமைந்தகரை | — செனாய் நகர் வளைவு |
| தங்கசாலை | — தங்கசாலை டர்மினஸ்— அரசு அச்சகத்திற்கு எதிரே |
| கடற்கரை ஸ்டேஷன் | — கடற்கரை ஸ்டேஷன் அருகே |
| ராயபுரம் | — மார்கெட் |
| கல்மண்டபம் | — காவல் நிலையம் அருகே |
| திருவொற்றியூர் | — திருவொற்றியூர் நெடுஞ்சாலை |
| காலாடிப்பேட்டை | — திருவொற்றியூர் நெடுஞ்சாலை |

மற்றும் வட சென்னை, மந்தைவெளி, எழும்பூர், அண்ணாசாலை திருவல்லிக்கேணி மற்றும் அயனாவரம் ஆகிய பகுதிகளிலுள்ள பல பால்வள நிறுவன விற்பனைக் கூடங்களிலும் டாப்கோ முட்டைகள் கிடைக்கும்.
இன்னும் பல டாப்கோ விற்பனை நிலையங்கள் விரைவில் செயல்படும்.



TAPCO

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,
98, லாயிட்ஸ் சாலை, சென்னை-600086

# சாணத்திலிருந்து சமையல் எரிவாயு!



நமது நாட்டில் கால்நடைச் செல்வத்துக்குக் குறைவே இல்லை. சுமார் 22 கோடி கால்நடைகள் இருக்கின்றன. இவை மூலம் ஆண்டுக்கு நூற்று இருபது கோடி டன்னுக்கு மேல் சாணம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதைப் பயனுள்ள முறையில் பயன்படுத்த முடியுமா?

முடியும்! சாணத்தை உபயோகித்து எரிவாயு தயாரிப்பதற்கான எளிய இயந்திரச் சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, கால்நடைச் சாணத்தை எரித்தால், அதிலிருந்து, உரம் எதுவும் கிடைப்பதில்லை. இதேபோல் அதைப் பண்ணை உரமாக மாற்றும்போது, எரிபொருள் எதுவும் கிடைப்பதில்லை. ஆனால், இந்த சாண எரிவாயு இயந்திரச் சாதனம் இந்த இரண்டையுமே நமக்குப் பெருமளவில் கிடைக்கச் செய்கிறது.

சாண எரிவாயு இயந்திரச் சாதனம் ஒன்றை அமைப்பதற்கு, நாள்தோறும் குறைந்த அளவு 45 கிலோ கிராம் புதிய சாணம் தேவைப்படும். சாதாரணமாக இரண்டு கன மீட்டர் அளவுள்ள எரிவாயு இயந்திரச் சாதனத்தை அமைப்பதற்கு ஐந்து மாடுகள் இருக்க வேண்டும்.

சாண எரிவாயுவில் சுமார் 55 சதவிகித மெதேனும் 45 சதவிகித கரியமில வாயுவும் அடங்கியுள்ளன. இதற்கான சாதனங்களின் வடிவமைப்புகளை கதர்-கிராமத் தொழில்கள் குழு தயாரித்திருக்கிறது.

இந்த இயந்திரச்சாதனத்தை அமைக்க விரும்புபவர்களுக்கு இந்தக் குழு எல்லா உதவிகளையும் செய்கிறது.

இப்போது நமது நாட்டில் மொத்தம் ஏழாயிரம் சாண எரிவாயு இயந்திரச் சாதனங்கள் இயங்கி வருகின்றன. மேலும் பலவற்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## இட்டலியின் பெருமை

இட்டலி மிகவும் சத்துள்ள உணவு என்று ஐ.நா. சபை உணவு நிறுவன முன்னாள் தலைவர் திரு பி.வி. சுகத்மி கூறியுள்ளார். புனா நகரில் நடைபெற்ற உணவு ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பேசுகையில் அவர் கூறியதாவது:

"தென்னாட்டு உணவுப் பொருளான இட்டலி மிகவும் சத்துள்ளதும், சுவையுள்ளதும் ஆகும். குழந்தைகளுக்குத் தேவையான அத்தனை புரதப் (புரோட்டீன்) பொருளும் இட்டலியில் இருக்கிறது."

## ஐ. நா. சபை எடுத்த கணக்கு

ஐ. நா. சபை எடுத்த கணக்கெடுப்பின்படி சீனாவில் 80 கோடிப் பேர் வசிக்கிறார்கள். இந்தியாவின் மக்கள் தொகை 56 கோடியே 34 இலட்சத்து 94 ஆயிரம். ரஷியாவில் 24 கோடியும், அமெரிக்காவில் 20 கோடி பேரும் வசிக்கிறார்கள்.





# 'வானவில்' தரும் வண்ணங்கள்

அச்சு இயந்திரம் தரமானதாக இருக்கலாம்; அச்சிடப்படும் தாளும் உயர்ந்த ரகமாக இருக்கலாம்; ஆனால் அச்சிடுவதற்குப் பயன்படும் அச்சு மை (Printing Ink) தரமில்லாததாக இருந்தால் பயன் என்ன? கண்ணைக் கவர வேண்டிய பதிப்பு கண்ணராவியாகக் காட்சிதர நேரும். எனவேதான் அச்சகத்தில் பயன்படுத்தப்பெறும் மை உயர்ந்ததாக - தரமானதாக இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

அந்த வகையிலே மைகளைத் தயாரித்து வரும் தொழில் நிறுவனங்கள் எத்தனையோ உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாக வானவில் அச்சு மை தயாரிக்கும் நிறுவனம் (Rainbow Printing Ink and Varnish Manufacturing Company) திகழ்கிறது.

சென்னையிலிருந்து பூந்தமல்லி செல்லும் பாதையில் போரூருக்கு அருகில் 'ரெயின்போவின்' தொழிற்சாலை இருக்கிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ஆம் நாளில்தான் இந்தத் தொழிற்சாலை சென்னையில் துவக்கப்பட்டது. என்றாலும் இந்தக் குறுகிய காலத்துக்குள், இது, மிகப் பெரும் புகழை எய்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு, மற்றும் ஆந்திரம், கேரளம், கர்நாடகம், ஆகிய மாநிலங்களுக்கு இந்த நிறுவனத்தின் அச்சு மை அனுப்பப்படுகிறது. ஏறக்குறைய ஒரு மாதத்தில் 12-டன் மை விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மதிப்பு ஏறக்குறைய 4 இலட்ச ரூபாய் ஆகும்.

ஏறக்குறைய 110 ரகங்கள் இங்கே தயாராகின்றன. அவற்றில் முதன்மை பெற்றவை பச்சை, மஞ்சள், சிவப்பு, நீலம், கறுப்பு ஆகிய வண்ணங்களாகும். இவை மட்டுமல்ல. மஞ்சள் என்று எடுத்துக் கொண்டால் அதிலேயே ஏழெட்டு ரகங்கள் உள்ளன. கானரிப் பறவை மஞ்சள் (Canary Yellow), தெளிந்த மஞ்சள் (Process Yellow) இளம் மஞ்சள் (Prim-Rose Yellow) எலுமிச்சை மஞ்சள் (Lemon Yellow) பொன் மஞ்சள் (Golden Yellow) என்று, இவ்வாறு பல ரகங்கள் உள்ளன. இதைப் போலவே, பச்சை வண்ணம், சிவப்பு வண்ணம், நீல வண்ணம், ஆகிய வண்ணங்களிலும் பல ரகங்கள் உள்ளன.

இங்கே தயாராகும் கறுப்பு மை புகழ்மிக்கது-தரம் உயர்ந்தது. இந்தியத் தர நிறுவனத்தின் சான்றிதழ் பெற்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியத் தர நிறுவனத்தின் வெள்ளிவிழா ஆண்டுக் கண்காட்சி-ராஜாஜி மன்றத்தில் நடைபெற்றபோது, 'ரெயின்போவின்' தயாரிப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டிய செய்தியாகும்.

மற்ற நிறுவனங்களில் இல்லாத ஒரு புதுமை இங்கே இருக்கிறது. 1 கிலோவுக்குக் குறைந்த அளவில், வேறு நிறுவனங்கள் தயாரித்து வைப்பதில்லை. இங்கே அப்படியில்லை, 0.25 கிலோ கொண்ட டப்பாக்கள் கூட விநியோகிக்கப்படுகின்றன. 0.25 கிலோவிலிருந்து 200 கிலோ அளவு வரை, தனித்தனியாகத் தகர டின்களில் அடைத்துத் தருகிறார்கள். சிறிய அச்சகங்கள் தங்களுக்குத் தேவைப்படும் குறைந்த அளவு மையை இந்த நிறுவனத்திலிருந்து வாங்கிக் கொள்ள முடிகிறது.

இந்த நிறுவனம் இங்கே துவக்கப்படுவதற்கு முன்னர், பம்பாயிலுள்ள இதன் தலைமை நிறுவனத்திலிருந்து அச்சுமை தமிழகத்துக்கு வரவழைக்கப்பட்டு வந்தது. தென் பகுதியில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் பம்பாய்க்குக் கடிதம் எழுதி, தங்களுக்குத் தேவையான மைகளைப் பெற்று வந்தனர். தென் பகுதியிலிருந்து வருகின்ற பெரும் வரவேற்பைப் பார்த்த பின்னர், 'ரெயின்போ' நிறுவனத்தார் தமிழ்நாட்டில் கிளை ஒன்றினைத் துவக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அதன் பின்னர்தான் சென்னையில் இந்த



மூலப பொருள்களின் கலவை அரைவை இயந்திரத்தினுல் அச்சு மையாக்கப்படுகிறது.

நிறுவனம் தோற்றம் செய்யப் பட்டது. பம்பாயிலுள்ள இதன் தலைமை அலுவலகம் 1950-ல் தோற்றுவிக்கப்பட்டது. வரு கின்ற 1975-ல் இது வெள்ளி விழாவைக் கொண்டாடவிருக் கிறது.

சென்னையிலுள்ள இந்தக் கிளை நிறுவனத்தில் வியப்புக் குரிய செய்தி ஒன்று கிடைக் கிறது. இங்கே உள்ள தொழி லாளர்களும், அலுவலக ஊழி யர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாகவே இருக்கி றார்கள். தொழிலாளர்கள் அனைவரும் பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்றவர் கள்.

நாள்தோறும் மூன்று பரு வங்கள் (Shifts) இங்கே உண்டு. மொத்தம் 35 தொழி லாளர்கள் பணிபுரிகிறார்கள். ஏறக்குறைய 1.5 ஏக்கர் பரப் பளவுள்ள இடத்தில் தொழிற் சாலையும் அலுவலகக் கட்ட டமும் அமைந்துள்ளன. புற நகர்ப் பகுதியில் இருப்பதால், உற்பத்திக்கு இடையூறு இல்லை; நேரம் வீணாவதில்லை; தொழி லாளர்கள் இயற்கையான காற்றை உட்கொள்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதனால் அவர்கள் உடல்நலத்துடன் திகழ்கிறார்கள்.

இங்கே அச்சு மை தயாரிக் கும் பகுதியில் தொழில் நுட்ப நிபுணர்கள் நால்வர் பணிபுரி கின்றார்கள். தரக்கட்டுப் பாட்டு நிபுணர், தொழில் நுணுக்கப் பணி நிபுணர், தயாரிப்பு நுணுக்கக் கண் கணிப்பாளர் என மூன்று பேரும், கிளை மேலாளர் என ஒருவரும் பணி புரிகின்றார்கள்.

இந்த நிறுவனம் தயாரிக் கும் மை வகைகள்: சாதாரண அச்சு இயந்திர மை (Letter-Press Ink), ஆப்-செட் மை (Offset Ink) செய்தித் தாள் அச்சக மை (Rotary News Ink), வெப்ஆப்செட் மை (Web-Offset Ink) ஆகியவை. வெப்-ஆப்செட் மை, கறுப்பு வண்ணம் தவிரப் பல வண்ணங்களிலும் தயாரா கின்றது.

இவை தவிர பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகள் ஆகிய வற்றில் அச்சுப் பதிப்பதற்குரிய சில்க் ஸ்கிரின் மையும், தகரங் களிலும், தகர டப்பாக்களி லும் அச்சுப் பதிப்பதற்குரிய மை வகைகளும் இங்கே தயா ராகின்றன.

'ரெயின்போ' தரும் வெப்-ஆப்செட் மை புகழ்பெற்றது; சிறப்பு வாய்ந்தது. அது எப்படி என்பதைப் பார்ப்போம். பொதுவாக டெம்மி 8 அளவு 16 பக்கங்கள் அச்சிடப்படுவ தற்கு 4 பிளேட்டுகள் பொருத் தப்படுகின்றன. மிகக் குறுகிய நேரத்துக்குள் தாளின் முன் பக்கமும், பின் பக்கமும் அச் சிடப்படுவதுடன், தாள் படிவ அமைப்பில் (Forme) தானா கவே மடிக்கப்படுகிறது. இந்தக் குறுகிய காலத்துக்குள் அச்சு மை உலர்ந்தால்தான் அச்சுப் பதிப்பு (Printing) சிறப்பாக இருக்க முடியும். விரைவில் உலரும் தன்மை, ரெயின் போ தயாரிக்கும் வெப்-ஆப் செட் கறுப்பு மைக்கு இருக் கிறது. அதனால்தான் இது புகழ் பெற்று விளங்குகிறது.

அச்சுமை எப்படித் தயாரிக் கப்படுகிறது என்பதைப் பார்ப் போம்.

மூலப்பொருள்களும், இரசா யனப் பொருள்களும் நீளமான கலப்பான் இயந்திரத்தில் போடப்பட்டுக் கலக்கப்படு கின்றன. ஏறக்குறைய 400 கிலோ கிராம் கொள்ளளவு கொண்டது இந்த இயந்திரம். அரைமணி நேரம் அல்லது முக் கால் மணி நேரத்தில் மூலப் பொருள்களும், இரசாயனப் பொருள்களும் கலக்கப்பட்டு மெதுவான தூளாகிவிடுகிறது. (ஒவ்வொரு வண்ணத்துக்கும் ஒவ்வொரு இரசாயனப் பொருள் கலக்கப்படுவது குறிப்பிடத்தக்கது). வண்ணத் தூளை அரைவை இயந் திரத்தில் (Grinding Machine) போடுகிறார்கள். அந்த இயந்தி ரத்தில் உள்ள உருளைகள், வண்ணத்தூளை மாவுபோல் மறுபுறம் தள்ளுகிறது. மறு பக்கத்தில் மிகப் பெரிய தகரப் பீப்பாய்களில், அரைவை செய்யப்பட்ட மையைச் சேக ரிக்கின்றனர்.

மை சரியான முறையில் அரைவை செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய, உட னடியாக ஒரு துளியை அதற் குரிய கருவியால் எடுத்து ஒரு தாளிலே தடவிப் பார்க்கிறார் கள். ஏற்கெனவே தயாரித்து வைத்துள்ள மாதிரி மை (Master Ink) போல, இருக் கின்றதா என்று பார்க்கின்ற னர். அவ்வாறு இல்லாமல், திப்பி திப்பியாக இருந்தால், மீண்டும் அரைவை செய்கின்ற னர். சில நேரங்களில் இரண்டு அல்லது மூன்று முறைகூட அரைக்கின்றனர். ஆப்செட் மை, 4 அல்லது 5 முறைகூட அரைக்கப்படுகிறது. மை, மைப்போல இருந்தால்தான் அச்சிடுவதற்குப் பயனுள்ள தாக இருக்கும். அதில் கட்டி சேர்ந்திருந்தாலோ திப்பி, திப்பியாக இருந்தாலோ பயன் படாது. அதனால்தான் அது நன்கு அரைக்கப்பட வேண் டும். அந்த வகையில் 'ரெயின் போ' நிறுவனத்தார் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.


அச்சு மை 'மாதிரி மை'யைப் போன்று சரியாக உள்ளதா என்று சோதனை செய்யப் படுகிறது.

இந்த நிறுவனத்தாரின் தயாரிப்பைச் சென்னையில் பல அச்சகங்கள் பயன்படுத்தி வரு கின்றன. 'தமிழரசு' இதழ் அச் சிடப்பெறும், 'தமிழரசு' அச்ச கம், வெப்-ஆப்செட் இயந்தி ரத்தைப் பயன்படுத்தத் துவங் கியதிலிருந்தே 'ரெயின்போ' தரும் ஆப்செட் மையைத்தான் பயன்படுத்தி வருகிறது. சென்னையில் புகழ்பெற்றுத் திகழும் பல அச்சகங்கள், குறிப்பாக பி.என்.கே. அச்ச கம், வடபழனி அச்சகம், ஆகி யவையும் இந்தியன் எக்ஸ் பிரஸ், ஆனந்த விகடன் போன்ற பத்திரிகைகளும் பயன்படுத்தி வருகின்றன.

இந்தியா டுபாக்கோ நிறு வனம், மெட்டல் பாக்ஸ் நிறு வனம் ஆகியவையும் ரெயின் போவின் மையைத்தான் பயன் படுத்தி வருகின்றன.

பம்பாயில் உள்ள தலைமை நிறுவனத்தைப் போலவே, விரைவில் இங்கேயும் ஒரு நூலகம் துவக்கப்பட இருக்கி றது. ஆப்செட் அச்சகத்துறை யைச் சார்ந்தவர்களுக்கு 'பிளேட் எப்படிச் செய்வது?'' என்ற பயிற்சி வகுப்பும், நடை பெற இருக்கிறது. இந்த 'வானவில்' நிறுவனம் வண் ணங்களை வாரி வழங்குகின்ற களஞ்சியமாகத் திகழ்ந்து தென்னகத்தின் அச்சுமை உற் பத்தித் துறையில் மிகச் சிறந்த இடத்தைப் பெறப்போவது உறுதி.

—த. பி.

# காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

விடிந்தது-பொழுது.

இரவென்ருல், பகல் வரும்.

நிலவென்ருலும், பகல் வருவதும் மரபுதான்.

ஆகவே, மரபைக் காத்து விடிந்த இளங்காலை வேளை இது.

மரபைக் கட்டிக் காப்பாற்றிப் பேணும் ரகசியம் இயற்கைக்குத்தான் தெரியும் என்பதல்ல; இந்த மச்சு வீட்டுக்கும் தெரியும். அதன் காரணமாகத்தான், விடி வெள்ளி முளைத்ததுமே, துயில் கலைந்து கண் விழித்துவிட்டது இவ்வீடு.

நயம் தோய்ந்த விழிகளை நயமாகக் கசக்கிக் கொண்டே வீரமணி திட்டி வாசலை ஒட்டி வந்து நின்ருன். அழுகின்ருஞ அவன்? ஊகூம்; இல்லை! பின், அவன் ஏன் கண்களைக் கசக்குகின்ருன்?—‘தூசு தும்பட்டை’ ஏதாகிலும் பட்டிருக்கும். புளி போட்டு விளக்கப்பட்ட பித்தளைச் செம்புகள் மாதிரி அவன் கண்கள் விளங்கின. கண் கொட்டும் பொழுதுக்குக்கூடக் கண்ணைக் கொட்டாமல், கொட்டக் கொட்ட இரவு பூராவும் விழித்திருந்து தவம் செய்த அந்தரங்கம் அவனுக்கே வெளிச்சம் போலும்! அழகான முகத்திலே, அழகான கண்களில் அடித்திருக்கும். கண்களை மூடி மூடித் திறந்தான்; திறந்து திறந்து மூடினன். கண்கள் மூடினல் என்ன? திறந்தால் என்ன? ஓர் இமைப்



பொழுதுகூட மூடாமல், இரவு பகல் எந்நேரமும் சதா திறந்தே கிடக்கின்ற தன்னுடைய இதயத்தின் காதல் மணி மண்டபத்திலே அப்போதுதான் மலர்ந்த சாதி மல்லிப்பூவாக-அப்போதுதான் இறக்கிய கொம்புத் தேனுக மணத்தும் இனித்தும், விளையாடிக்கொண்டும் விளையாட்டுக் காட்டிக் கொண்டும் இருக்கின்ற அந்தக் 'கனவுக்கிளி'யை அவன் அறியமாட்டானு, என்ன ?—'அம்மான் மகளே!.. அன்னக்கொடி!'

யாரோ சிரிக்கிருர்கள்.

சிரிப்பது யார்?

வீரமணி நிதானமான அமைதியோடு திரும்பிப் பார்த்தான்.

அடம் பிடித்து ஆணவம் கொண்டாடிய காளைக்கன்று அடங்கிப் போய்த் தாயின் மடியைத் தஞ்சம் அடைந்து கொண்டிருக்கிறது.

கொண்டிருந்தன.. 'அம்மான் மகளே!... அன்னம்!'— உந்திக் கமலத்தினின்றும் வெளிக்கிளம்பிய குறுநகை அவனுடைய செவ்வதரங்களில் முகம் பார்த்தது; அகம் பார்த்தது. நேத்திரங்கள் சுடு நீர்கண்டன. வெய்யில் சுளீரென்றது.

வழியை மறித்து விலகிவந்த தெரு நாயொன்று தொட்டித் தண்ணீரை எட்டி, எட்டி நக்கிக் கொண்டிருந்தது. நன்றியை உணர உணர, வால் குழைந்து கொண்டேயிருந்தது.

தேவர் பாய்ச்சல் காளையாகப்பாய்ந்து, ''சீச்சீ,நாயே!' என்று அதட்டி அதை விரட்டிஞர். காலடியில் சிந்திக்கிடந்த சாணத்தை இரு கைகளாலும் அள்ளி எருக்கிடங்கில் வீசிஞர். துவாலை வழுவியது; கட்டுக்குடுமி மட்டிலும் கட்டுக்கு அடங்கி விட்டிருந்தது.

முண்டாசுத் தலையும் மண்வெட்டித் தோளுமாக நின்ற வீட்டுக் குப்பையைக் குறுந்தடிக்கும் வெட்டிச் செய்க்கும் அனுப்பியாக வேண்டும்.. தோண்டத் தோண்ட, குழிச் சவமாகச் சாணம் நாற்றமெடுத்தது. கருமத்தைச் செய்ய வேண்டும்; ஆனுல், பலனை எதிர்பார்க்கக் கூடாதாம் !.. மண் வெட்டியை வீசிஞன்; கெட்ட மூச்சை ஏற்றிஞன். எச்சிலை உமிழ்ந்தான்; நிமிர்ந்தான். ''..மகனே வீரமணி! அக்கம் பக்கம் பதினுறு தலைக்கட்டுக் கிராமங்களுக்குத் தலைமைகொண்ட சிலட்டூர்க் கங்காணியார் பெரிய கறுப்பத் தேவரோட ஒரே மகளான பவளக்கொடியை- அவரோட செல்லக்கிளியான அழகி பவளக்கொடியை உனக்காகப் பெண் பார்த்துப் பேசி முடிச்சிருக்கேன், தம்பி!'—அப்பா தான் இவ்வாறு தீர்ப்புப் படித்தாரா? ...சிந்திச் சிதறியது வேர்வை தானே?

தோட்டம் துரவுப் பக்கம் நாடி மீண்ட பெரியவர்,

## 9. பொற்பின் செல்வியாம் அன்னக்கொடி!

வீரமணிக்குச் 'சுருக்'கென்றது. இருதயத்தைப் பற்றியவனுக, மாட்டுத் தொழுவத்தை விட்டுப் பார்வையைத் திருப்பிஞன். அவன் எதிர் பார்த்தது மெத்தச் சரி.

சாட்சாத் ஆறுகரை ஆதிமூலத் தேவர்தாம் சிரிப்பின் வள்ளலாகி, விடுகதை போடுகிறவர் மாதிரி, மீண்டும் புதிர்ச் சிரிப்பை வாரி வழங்கிக்கொண்டிருந்தார்.

அப்பாதான் சிரித்தாரா ?—வீரமணிக்கும் சிரிக்கத்தான் தோன்றியது. அவன் சிரிக்கவில்லையானுல், அவனை லேசில் விடுவாளா அன்னக்கொடி ?—'அத்தான்!.. ஒரு அந்தரங்கத்தை உங்க நெஞ்சுக்கு நீதியாய் ஒப்படைச்சாக வேணும். எனக்கின்னு ஒரு குடும்ப வாழ்க்கை லவிக்க வேணும்னு விதிச்சிருந்தால், அந்தப் பாக்கியம் நீங்க எனக்கு இடுற அன்புப் பிச்சையிலுலேதாங்க கிட்ட முடியும்!.. இந்த விதியை எப்பேர்ப்பட்ட சோதனையிலேயும் நான் சத்தியமாய் மறந்துப்புட மாட்டேன்!... அதே கணக்கிலே, நீங்களும் மறந்துப்புடாதீங்க, அயித்தை மகனே!'..சத்தியமும் தருமமும் இதய ஒலி எழுப்பிக்

வீரமணி, நழுவிக்கிடந்த துவாலையைத் தலை வணங்கி எடுத்து அதைத் தன் தந்தையிடம் அமரிக்கையோடு ஒப்படைத்தான்.

அப்பா, மகனை நோக்கிஞர்

மகன் அப்பாவை நோக்கிஞன்.

பாசமும் பாசமும் சந்தித்துக் கொண்டன.

அறுவடை:

ஒரு பூச்சிரிப்பு!

ஒரு நெடுமூச்சு!

பாசம் ஒரு பூவிலங்கே தானே?

அவரும் மௌனப் பிண்டமாஞர்!

அவனும் மௌனப் பிண்டமாஞன்!

இணைந்து பிணைந்த இந்த மௌனத்துக்கு, விடுகதை போட மறந்துவிட்டிருக்கலாம்!

மௌனம் போட்டுவிட்ட விடுகதை போதாதா?-பற்ருதா?

வீரமணி சாணக்குழியைத் தோண்டத் தொடங்கிஞன். கஞ்சிப் பொழுதுக்குள்ளாக, வேப்பங்குச்சியை வீசி விட்டு, வாய் கொப்புளித்தார்.

''வீரமணித் தம்பியோ ! தோண்டத் தோண்ட குழி மாளாது; சூட்டோட சூடா இட்டிலியைச் சாப்பிடலாம், வாப்பா. இண்ணைக்கு கொத்தமல்லித் தழைத் துவையல் வேண்டாம்னு காசிகிட்டே 'ஆடர்' போட்டாச்சு. சீமைக் கத்தறிச் சட்டினி பண்ணியிருப்பான்!....''

''ஊம்!''—மோதிர விரல் மோதிரத்தைத் தளர்த்திஞன் இளவட்டம்.

நேற்று நிலா மலர்ந்த வேளையில் அந்த 'நல்ல சேதி'யைத் திருவாய் மலர்ந்தருளிவிட்டு, அதே சூட்டோடு எழும்பிப் படுக்கப் போன அப்பா, இப்போதுதான் திரும்பப் பேச்சுக் கொடுத்திருக்கிருர்!

ரத்தப் பூக்கள் பொன் சிவப்பாகச் சிலிர்க்கின்றன!

அதிர்வேட்டாக வெடித்தது ஏப்பம்!—அவனுக்கே சகிக்கவில்லை. வெட்கமாகப் போயிற்று. இந்த லட்சணத்

தில், விக்கல் வேறு. லோட்டாவை எடுத்தான்; மறுகினன், வீரமணி.

ஊர் நாட்டாண்மைத் தேவர் எங்கோ ஊர்ப்பயணம் போகப் போகிருர்! பராக்...பராக்!

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட நடப்பாக இருந்தது வீரமணிக்கு. ஊமையன் கனவு கண்டால் உப்பு, புளிக்கு ஆகாதென்பார்கள். அப்பா எங்கே போகப் போகிருராம்? கேட்க வாயில்லை.

பெரியவர் வண்டியைக் கட்டினர்; 'செவலை'யை இமை பாவாமல் நோக்கினர். கால்கள் பூமியில் பாவ மறுத்தன. நெஞ்சில் அமைதி கால் பாவவில்லை. வேல் முனைகளாக விளங்கிய அந்தக் கொம்புகளைப் பார்த்ததும் அவரது இதயத்தின் அடிவாரத்தில் சிறுகச் சிறுகச் சலனம் கடந்த சாந்தி படர்ந்து வருவதுபோல இருந்தது. என்னவோ ஓர் உத்வேகத்தோடு காளையின் முதுகில் தட்டிக் கொடுத்தார். 'போக்கணங் கெட்டவன், தன்னோட காசு பணத்துக்குள்ளேதான் ஊர் உலகமே அடிமைப் பட்டுக் கிடக்குதின்னு கனகாணுறன்; ஊமைப் பயல் கனவு கண்டதாட்டம், அவன் தனக்குள்ளேயே என்னென்னமோ கோட்டை கட்டிக்கிட்டிருக்கான். இந்த விதியிலே, என்னை முச்சந்திக்கு இழுத்து என்னோட மானத்தைக் கப்பலேற்றப் போருனுமே? காலம் பறவே, தட்டுக்கெட்ட அந்த நாற வாயிலே ஓங்கி அடிச்சு அவனோட பல்லு முப்பத்திரண்டையும் கொட்டி அவன் கையிலே எண்ணிக் கொடுத்திருப்பேன்!....சகதியிலே கல்லை வீசினல், சகதி நம்ப மேலேதானே பட்டுத் தெறிக்கும் ?... அப்பாலே நம்பளுக்குத் தானே அசிங்கம்னு நினைச்சுப் பொறுமையா இருந்திட்டேன்! இவனுக்குக் கொடுக்க வேணும்னு தீர்ப்புச் சொன்ன கடன் கப்பிசனியனை இந்தக் கிழமைக்குள்ளாறவேகூட அடைச்சிடலாம். அந்த நயவஞ்சகனுக்கு நான் கொடுக்கக் கடமைப்பட்டிருக்காத அனுமத்துப் பணம் ரூபாய் ரெண்டாயிரத்துக்கு அவன் என்கிட்டே எப்பவானும் ஒரு நாளைக்கு 'சவாப்' சொல்லாமலா அவனை விட்டிடுவேன்?...' கசந்த நினைவுகள் ஊமைக் காயங்களாக வலித்தன. பெருமூச் செறிந்தார் பெரியவர்.



செவலை உறுமுகிறது.

தேவர் இரண்டாந் தடவையாகவும் செவலையை அன்புடன் தட்டிக் கொடுத்தார். ரோசக்காரச் செவலை, ராமையாத் தேவரின் பயந்தாங்கொள்ளி வெள்ளை மானத்தை வாங்கி விடவில்லையா?

தந்தையின் பரிவுடன் கூடிய செய்கையைக் கண்ட வீரமணிக்கு விவரம் புரிந்தது. அம்மானின் வெள்ளைக்காளையை எதிர்த்துச் சாடி, ரோசத்தோடு வெற்றி கொண்டதை எண்ணித்தான் தன் தகப்பனர் செவலைக் காளையின் முதுகில் தட்டிக் கொடுக்கின்றுர் என்கிற காரணம் அவனது ரோச உணர்ச்சிக்கு இதமளித்ததில் அதிசயம் ஏதும் இல்லைதான். பகைமை மறக்காத அவன் உள்ளத்தில் அவனுடைய தாய் மாமன் ராமையாத் தேவர் எட்டி நின்றுல்கூட, எட்டியாகக் கசக்காத நேரம் உண்டா? 'அம்மானேட கடனை அப்பா எப்படி உளவடைக்கப் போறுங்க?' —ஊம், புதிரென்றுல், அது என்றேனும் விடுபட்டுத்தான் ஆக வேண்டும்!

பெரியவர் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்ற முகத்தைத் துடைத்துக் கொண்டார்; பிறகு, புதிய ஊட்டம் பெற்றவராக மேனியைக் குலுக்கிக் கொண்டார். அடுத்து இளஞ்சிங்கமென ஏதோ ஓர் இறுமாப்போடு வண்டியில் தாவிக் குந்தினர். கைப்பிடிப்பில் மாட்டின் மூக்குக் கயிறு உடும்பாகப்பற்றிக் கிடந்தது. ''வீரமணி, நான் சிலட்டூர் வரைக்கும் போயிட்டு, உருமத்திலே திரும்பிடப் பார்க்கிறேன். நாச்சி அசமந்தம். தார்க்குச்சி போட்டால்தான் அவனுக்குச் சுறுசுறுப்பு வரும். நீயும் அவன் கூடவே வயல் வெளிப் பக்கம் ஒரு பயணம் போய்ப் பார்த்துக்க. உடையவன் இல்லாங்காட்டி எதுவுமே ஒரு முழம் கட்டைதான்!.... நான் மத்தியான்னச் சோத்துக்கு வாரது ஈரெட்டுத்தான். அஞ்சாறு சோத்தை உண்ணிட்டு, சாப்பிட்டேன்னு பேர் பண்ணிடாதே நீ. நல்ல நிம்மதியோட நல்லாச் சாப்பிடணும். ஆவணி வாசலுக்கு வந்துக்கிட்டிருக்குது. ரோசிச்சுக்க. நான் போயிட்டு வாரேன்'', என்றுர். தாழ்ந்த கண் பார்வையைத் திருப்பினர்; வண்டியை ஒடித்துத் திருப்பினர்.

கொஞ்சும் சலங்கைகள் கொஞ்சின.

திகில் தீச்சுடராகச் சுடுகிறது.

'சம்பந்தம் சாடிக்கையை மனசிலே கமுக்கமாய் முடிபோட்டு வச்சுக்கிணுதான் போலே, அப்பன்காரர் நேற்றைக்கும் சிலட்டூருக்குப் பயணம் வச்சிருக்க வேணும். இப்பைக்கும் அந்த முகாந்தரத்தின் பேரிலேதான், புதுசாய்ச் சம்பந்திச் சொந்தம் கொண்டாடிக்கிட்டுக் கங்காணியாரைத் தேடிச் சிலட்டூர்ப் பக்கம் பறிஞ்சிருக்க வேணும் அப்பன்காரர்! . . .ம் . . .ம்! . . . தப்புக் கணக்குப் போடவே மாட்டாராமே அப்பா? வீரமணி மலைப்புத் தட்டி நின்றுவிட்டான். ஏதோவொரு கவடு அவனுடைய உள்மனத்தின் ஏதோவொரு முடுக்கில் சுவடு பதித்திருந்த இரகசியம் அவன் வரை 'சிதம்பர இரகசியம்' அல்லதான்!

**செ**ம்மறிக் கிடாரி காட்டுக் கத்தலாகக் கத்தியது ; விரக தாபம் வாய் பேசியிருக்கலாம்.

வீரமணி எருக் குப்பையை ஒழுங்குபடுத்தி அள்ளிக் கொட்டி, நாலு வண்டிகளை வயல் வெளிக்கு வழியனுப்பி வைப்பதற்கும், சேக்காளி மாணிக்கம் வந்து நிற்பதற்கும் கணக்காக அமைந்தது.

நெற்றிவேர்வை சொட்டச் சொட்ட வீரமணி வரவேற்றுன். முட்டின்றி வழிந்த மகமாயி ஊருணித் தண்ணீர் முட்டியைச் சாய்த்து உடம்பைச் சுத்தப்படுத்தினன். பெற்ற தாயின் உடல் நலன் பாதிக்கப்பட்டதால், சொல்படி நேற்று அந்திக்கு வர

இயலவில்லை என்பதாகத் தோழன் சொன்ன தகவலைக் காதில் வாங்கிக் கொண்டான். சிநேகிதனின் அன்னை நலம் தேறிய தாக்கல் அமைதி காட்டியது. ஆனால், அதே சமயத் தில், அவன் இதயம் அமைதியைப் பறி கொடுக்கவும் நேரிட்டது. 'ஆத்தா!' . . . வீட்டின் வெளிப்புறத்தே பளிச்சிட்ட கிளிப் பச்சை வண்ணப் பூச்சைப் போற்றிய அவன், உட் புறத்தில் பார்வையை வீசியபோது, அங்கங்கே பல் இளித்த மண் சுவர்களையும் வெடிப்புக்களையும் சிதிலங்களையும் காணக் காண, அவனுள் ஓர் உறுத்தல் மாறுல் மாருமல் ஏற்படவே செய்தது. வீட்டின் உட்புறங்களையும் செப்பனிட்டுச் சீர்ப் படுத்தினால்தான், வீட்டின் வெளியழகுக்குச் சமதையான—உண்மையான அந்தஸ்து ஏற்பட முடியும் என்ற யதார்த்த நிலை அவனுக்கு விளங்காமல் இல்லை. ஆனால், வழிதான் மட்டுப்படவில்லை. தலையை அடகு வைத்தாவது முதலில் அம்மான் கடனைத் தொலைத்துத் தலை முழுக வேண்டும். அப்போதுதான், தலை முறை தத்துவமாகக் கட்டிக் காக்கப்பட்டு வரும் இந்தக் கண்டிச் சீமைக்காரர் மச்சு வீட்டின் மானம் மரியாதை எல்லாம் நிலைக்கும்; நிறக்கும் ; மணக்கும்!

'வீரமணி அண்ணு! தலை முழுகிப்புட்டீங்களா?''

''இனித்தான் தலை முழுகணும், மாணிக்கம்!''

''கிளம்புவமா?''

''ஓ!''

''மேற்காலே மகமாயி ஊரணிக்குப் போவலாமா? இல்லாட்டி, கிழக்கிட்டு முனைக் கொட்டுக் கம்மாய்க்கு நாடுவமா?''

''உன் இஷ்டம், தம்பி.''

''அப்படீங்களா? மேற்காலவே பறிவோம். அப்பத்தான் உங்களுக்குக் கிளுகிளுப்பு மூச்சுக் காட்டும்!''

''ஓகோ, அப்படியா? உன் விருப்பத்தைக் கெடுப்பானேன்? கிளம்பு, கிளம்பு!''

மாணிக்கத்தின் விடமச் சிரிப்புக்கான தாத்பரியம் வீரமணிக்குத் தெரியும். சவுக்கார டப்பாவோடு புறப்பட்டபோது ''தம்பி, ஆல வீட்டு நெல் பொட்டித் துரவச்சியைத் தாங்க. பொன்னியிலே ஒரு பொதிக்குக் காணும்படியா எடுத்து அவிச்சாக்க, ஆடிப் பாடு ஒப்பேறிப் பூடும். அறுவது மரக்கால் காணுங்காட்டி, மாசக் கடோசிலே ரோசிச்சுக் கிடுவோம்,'' என்று தெரிவித்த காசியிடம் சாவியையும் நெல் கணக்கு நோட்டையும் நீட்டினுன் அவன். ''சரி; அடியெடுத்து வைப்போம்,'' என்றுன் வீரமணி.

நட்டாம்கிழமைக்கு வேனல், வெக்கை துச்சம்.

வீரமணியும் மாணிக்கமும் குட திசையில் ஓடிய ஒழுங்கை வழியில் மடங்கி, நடந்தார்கள்.

போதை மண்டைக்கு ஏறி, தட்டுத் தடுமாறி ஓடி வந்த ஓட்டைச் சைக்கிளுக்கு ஆயுசு கெட்டி.

வீரமணி ஓடைப் புனல் இடை 'கெளுத்தி' மீனுக்குத் துள்ளித் துள்ளி நடை தொடர்ந்தான். உள்ளத்தில் மகிழ்ந்து கொட்டிய உவகைத் துளிகள் உதடுகளிலும் வழிந்திருக்கலாம். தன்வரையிலும் எதுவுமே அசம்பாவிதமாக நிகழவில்லை என்பதை அங்கீகரித்துப் பிரகடனம் செய்ய விரும்புபவன் மாதிரிக் களியும் கனவுமாக நடந்தான். அப்படியென்றால், சோதிப்பு எதுவுமே அவனுக்கு ஏற்பட்டு விடவில்லை யென்று பொருளா? பொருள் புரியாக் கவிதை போலவா, அவன் தந்தை அவனுடைய திருமணம் குறித்த அந்த முடிவை இரவிலே அவனிடம் வெளியிட்டார்! அவனுடைய குறுநகை 'ஓட்டிக்கு ரெட்டியாக'வே தழைத்தது. நீராடப் போகும் பாவனையில் சென்றால் வழியில், அவனுடைய 'கனவுக் கிளி'யின் தேவ தரிசனம் கிடைக்கவே செய்யும் என்கிற தன்னம்பிக்கைதான் அவனது அகமகிழ்வுக்குக் காரணமாக இருக்க வேண்டும்.

களத்துமேடு வழி மறித்தது.

''அண்ணுச்சி, உங்களோட களத்து மேட்டுக்குத் தென் வடக்காலே ஒரு மொட்டை வாகை மரம் தண்டமாய் நிற்குதுங்களே, அதை வெட்டியெறிஞ்சாக்க, இடம் போரடிக்கவும் நெல் தூற்றவும் இன்னம் கொஞ்சம் சிலாவத்தாய் இருக்காதுங்களா?'' என்று கருத்துத் தெரிவித்தான் நண்பன்.

அந்தப் பட்ட மரம் எங்க அம்மானுக்குச் சொந்தம். எங்க காணியாட்சி இடத்தை அடுத்து அவருக்கு உண்டான இடம். ஆரம்பமாகுதாம். எங்க குடும்பத்துக்கு முடிஞ்ச மட்டும் இடைஞ்சல் செய்ய வேணும் என்கிறது அவரோட வீம்பு! அந்தத் தூரடியைச் சாய்ச்சு எடுத்துக்கிட்டுப்போனலும், மூணு நாளைக்கு உலை கொதிக்கும். மாட்டேன்னு சொல்லிட்டாராம்! வயிறு நிரம்பினால், சோற்றுப் பானையை மூடாத ஆசாமி எங்க அம்மான். அந்த ஆள் எங்க பெரியவரை அநியாயமாய்ச் சீண்டுருவம் பண்ணப் போக, இப்போ கதையும் காரணமும் எப்படி எப்படியோ திரும்பிக்கிட்டு இருக்குது. இந்தக் கதை கடைசிலே எங்கே போய், எப்படி முடியப் போகுதோ?— தெரியவே இல்லே!'' வீரமணியிடமிருந்து பெரு மூச்சு வெளியேறியது.

''என்ன அண்ணே அப்படிச் சொல்லுறீங்க? எல்லாக் கதையும் நீங்க உங்க அம்மான் மகள் அன்னக்கொடியைக் கைப்பிடிச்சதும் சுபமாய் முடிஞ்சிடாதுங்களா?''

வீரமணிக்கு வெய்துயிர்ப்பை மீண்டும் வெளியேற்ற மட்டுமே அப்போதைக்கு முடிந்தது. அப்பாவின் எதிர் பாராத தீர்ப்பை, அல்லது முடிவை, அல்லது திட்டத்தை மாணிக்கம் எவ்விதம் அறிவான்?—பாவம்! . . .

பாவமாவது; புண்ணியமாவது!



1972 ஆம் ஆண்டு எடுக்கப் பட்ட கணக்கின்படி இந்தியாவில் ஏறத்தாழ 1 கோடியே 29 இலட்சத்து 8 ஆயிரம் ரேடியோக்கள் இருக்கின்றன. இந்தியா விடுதலை அடைந்தபோது 27 இலட்சம் ரேடியோக்கள்தான் இந்தியாவில் இருந்தன.

மராட்டிய மாநிலத்தில்தான் அதிக ரேடியோக்கள் இருக்கின்றன. அங்கு 19 இலட்சம் ரேடியோக்களும், பஞ்சாபில் 14 இலட்சம் ரேடியோக்களும் இருக்கின்றன. தமிழ்நாடு 3-வது இடம் வகிக்கிறது. தமிழ் நாட்டில் 13 இலட்சம் ரேடியோக்கள் இருக்கின்றன.

பாவ புண்ணியத்தின் ஐந்தொகையைச் சோதிக்க இது நேரமல்ல.

ஏன், தெரியுமா?

திருமிகு ராமையாத் தேவரின் வீடு அதோ வந்துவிட்டது! —ஜாக்கிரதை . . .!

வீடு என்றால், ஒரு வீடு என்பது கணக்கு. வீடல்ல; வீடுகள். இரண்டு வீடுகள். ஒன்று, பழைய வீடு. நாட்டோடு வேயப்பட்டது. 'நில்லாய் நெடுஞ்சுவரே' என்ற கவியின் ஆணையைச் சிரமேற் தாங்கிக் கொண்டிருக்கும் சுவர்கள். பழைய வீட்டுக்கு எதிரும் புதிருமாக இருப்பது புது மனை. இரண்டடுக்கு. தளப் பூச்சுத்தான் சொட்டை. ஆவணிக்குப் புது மனை புகு விழாவாம்! துப்பு ஒன்று! —கடைகால் படு கெட்டி. ஆகவே, செவ்வாய் மண்டலத்தைத் தாவிப் பிடிக்கும் அளவிற்குக் கூட அடுக்குகளின் எண்ணிக்கை அபிவிருத்தி அடையலாமாம்! சிங்கப்பூர் தேவரின் வாக்கை மாற்று உரைத்துப் பார்க்க யாரால் முடியுமாம்?

தேள் கொடுக்கு மீசைப் பேர்வழியான ராமையாத் தேவர் முச்சந்தியில் நின்றார்.

அதைப் பற்றி வீரமணிக்கு என்ன கவலை? அவனுடைய அப்பாவை முச்சந்தியில் சந்தி சிரிக்க வைத்து விடுவதாகச் சவால் விட்டவராயிற்றே இந்த அம்மான்காரர்? அவன் பற்களைக் கடித்தான்; கண்களைத் திசை திருப்ப முனைந்தான். அவன் உள்ளம் களியாட்டம் போட ஆரம்பித்து விட்டது. ஆத்மாவின் ராக, மௌனப் பண்பாடும் — பண்பாடு பாடும் அந்த அமுத கீதப் புன்னகையைத் தரிசிக்க வேண்டாமா? தேடினான்; தேடிக் கொண்டிருந்தான்! . . . அற்புதம் . . அற்புதம்! அதோ, பொற்பின் செல்வியாம் அன்னக்கொடி புனிதச் சாதி மல்லிப் பூவாகப் புன்னகை செய்கின்றாள்! . . உயிரின் உயிராகி, உயிருக்கு உயிராகி மலர்ந்த அந்தப் புன்னகைக்கு ஈடாக, குறுணி—பதக்கு என்று பொன்னும் மணியும் கொட்டிக் கொட்டி அளந்து கொட்டினால் கூட, ஈடாக மாட்டாதே! அந்தப் புன்னகையை 'பட்டா' போட்டு உடைமைப்படுத்திக் கொள்ள எந்தச் சத்தியச் சோதனையையும் அக்கினிச்



சோதனையையும் சந்திக்கத் தவம் இயற்றிக்கொண்டே இருக்கலாமே!—அவன் மெய்ம் மறந்தான்; மெய் சிலிர்க்க, மெய் உணர்ந்தான். அப்பாவின் திட்டத்தை அன்னக்கொடி எப்படி அறிவாள்?—'அம்மான் மகளே! . . . என் அன்னக் கொடியே! . . ' —கண்கள் பொடித்தன. திடுக்கிட்டான். அந்த வைரச் சிமிக்கிகளின் ஒயில் ஆட்டத்தைத்தான் அவனால் அப்போது இறுதியாகத் தரிசிக்க முடிந்தது! இன்னும் கொஞ்ச நாழிகையாவது, புன்னகைச் சாதி மல்லிப் பூவைத் தூவி, கனவு காட்டிக் கனவு கூட்டித் தரிசனம் தந்திருக்கலாகாதா, அம்மான் மகளே!.. தவித்தான் வீரமணி.

''இனிமே பறியலாமுங்களா, அண்ணாச்சி?''

''ஊம்! . . அடடே, என்னமோ இரைச்சல் திமிலோகப்படுதே? என்னவாம் சங்கதி? சரி, சரி. அந்தக் கூத்தை நின்னுதான் பார்க்கலாமே!''

''ஆகட்டுமுங்க!''

தோழர்கள் புளிய மர நிழலில் ஒண்டினார்கள்.

அந்த ஏழைக்கு அழத் தெரியும்போது, அந்த ஏழை அழுத கண்ணீருக்குப் பேசவும் தெரிவது சட்ட விரோதம் அல்லதான்!—பேச்சில் ரத்தம் தெறித்தது:

''ராமையாத் தேவரய்யா, நான் உங்ககிட்டே வாங்கின கடன் வள்ளிசாய் நூறே நூறு ரூவாதான். ஆனாக்க, நீங்க எங்கிட்டே நோட்டிலே கை நாட்டு போட்டு வாங்கினதோ ரூவா நூத்தி அம்பதுக்கு. வட்டி வாசிக் கூடுதலைப் பூரிக்கச் சட்டம் எடம் குடுக்காதின்னும், அந்த மூணு வட்டி வீதத்தைச் சரிக்கட்டத்தான் நூத்தம்பதின்னு நோட்டிலே சொல்லியிருக்குதின்னும் சித்திரமாச் செப்புனீங்க. உச்சாணியிலே குந்தியிருக்கிற ஒங்க வாக்கை ஏழை நம்பாட்டி, சும்மா விடுவீங்களா? ஆனா இப்ப காலாவதிக் கெடுவுக்கு புரோ நோட்டுப் படிக்கி ரூவா நூத்தம்பதுக்கு வக்கீல் ஐயா கிட்டே வக்காலத்துக் குடுத்து நோட்டீசு குடுத்திருக்கீங்க!... தெய்வம் திருவுளத்துக்குப் பயந்து மறுமூச்சும் சொல்லிப்பிட்றேன். நீங்க கை நீட்டித் தந்த அசல் ரூவா நூறையும் அதுக்குண்டான பேச்சு வட்டியையும் வாங்கிக்க மாட்டேன்னு செப்பிட்டிங்க. அப்படீன்னா, எம் மேலே தாவா தொடுத்துக்கிடுங்க! விதி என்னை என்ன செஞ்சிப்பிடும்னு எனக்குத் தெரிவிசாய்த் தெரியும். அனுபவிச்சிக்கிறேன். அச்சமில்லே. கேவலம், அம்பது ரூவாய்க் காசினாலே நான் செத்துப்பூட மாட்டேன். ஆனா, அதே அம்பது ரூவாய்க் காசினாலே ஒங்க சத்தியம் நாக்கைப் புடுங்கிக்கிட்டுச் செத்துப் பூடுச்சு என்கிறதை மட்டுக்கும் மறந்துப்புடாதீங்க!'' நான் வாரேன்! . .''

பச்சைக் குறவன் பழனி, தர்மத்தையும் சத்தியத்தையும் முச்சந்தியில் அந்தரமாக நிறுத்திவிட்டுநடந்தான். சத்தியத்தையும் தர்மத்தையும் முச்சந்திச் சரக்காக்கி வேடிக்கை காட்டி, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமையாத் தேவரை —முச்சந்தியிலே நின்ற ராமையாத் தேவரை ஏறெடுத்துப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தான் அந்த ஏழை.

அநியாயமாகக் கசையடி பட்ட மாதிரி, வீரமணி தவித்தான். பாவம், சட்டம் அவனை இங்கேயும் சோதித்து, அவன் வாயைக் கட்டி விட்டது. நடைப் பிணமாகி நடைதொடருவதைத் தவிர, வேறு வழி தெரியவில்லை. 'அண்ணலே! சத்தியத்தையும் தருமத்தையும் அநியாய விலை கொடுத்து வாங்கத் துணிந்திட்ட சமுதாயத் துரோகிகளுக்கு நடுவிலே ~~இனியும்~~ உயிர் தரிப்பது பாவமென்று முடிவு செய்துதான் எங்களிடமிருந்து விடுதலை வாங்கிக் கொண்டீர்களா?'' —நெஞ்சைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு புளிய மரத்தடியைப் பிரிந்தான். ''மாணிக்கம்! வா வா!'' என்றான் வீரமணி.

மழை வெய்யில் எரிக்கிறது.

ஆடிக் காற்று இனிமேல், கொம்பு சுற்றி அடிக்கத் தொடங்கிவிடும்!

(வளரும்)

# போற்றுதலுக்குரிய போக்குவரத்துத் துறை



பொதுப் போக்குவரத்து முறை மாநில அரசுக்குச் சொந்தமானது என்பதும், மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதென்பதும் இவ்வரசு ஏற்றுக்கொண்டுள்ள கொள்கையாகும். பேருந்துப் பணிகளை நாட்டுடைமையாக்கும் முறை இம் மாநிலத்தில் 1940-49-ல் கொண்டு வரப்பட்டது. 1948-ஆம் ஆண்டு அளவில் சென்னை மாநகரப் பேருந்துப் பணி முழுவதும் அரசுத்துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

நாட்டுடைமையாக்கும் பணியில் அடுத்ததாக நீள் தொலைவுப் பேருந்துப் போக்குவரத்து தொடங்கப்பட்டது. 1967-க்கு பின்னர், அரசு நாட்டுடைமைக் கொள்கையை விரைவுபடுத்த முடிவு செய்தது. அரசு அறிவித்த நாட்டுடைமைக் கொள்கை பின் வருமாறு :—

(1) 75 மைலுக்கும் அதற்கும் மேற்பட்ட வழித் தடங்கள் (சாதாரண, விரைவுப் பேருந்துப் போக்குவரத்து);

(2) சென்னை மாநகரில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள், அவற்றின் தொலைவு என்னவாயிருப்பினும், அத்தகைய வழித் தடங்கள் அனைத்தும்;

(3) கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்தடங்கள் யாவும்.

இக்கொள்கையின்படி கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால், இத் திட்டத்தை மேற்கொண்டும் விரைவுபடுத்துவது அவசியமென்று அரசு கருதியது. எனவே, 1972, ஆகஸ்ட் திங்களில், மாநிலத்திலுள்ள பேருந்துப் போக்குவரத்து முறை அனைத்தையும் 5 ஆண்டுகளுக்குள் நாட்டுடைமையாக்க அரசு முடிவு செய்தது.

அரசுப் போக்குவரத்துத் துறைக்குக் கிடைத்துள்ள அனுபவத்திலிருந்து, குறிப்பிட்ட அளவுக்கு மேல் துறை அமைந்திருப்பது துறையை மேம்படுத்துவதற்கும் வளர்ச்சியடையச் செய்வதற்கும் தடையாயிருக்குமெனக் கண்டறியப்பட்டுள்ளது. பிரிவுகளைப் பரவலாக்குவதும், பரவலாக்கப்பட்ட பிரிவுகளுக்குத் தன்னாட்சி உரிமை கொடுப்பதும் சிறந்ததோர் கொள்கையென்று அரசு கருதுவதால், இக் கொள்கையைக் கருத்திற் கொண்டு மாநிலத்தின் பல்வேறு வட்டாரங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போக்குவரத்து கழகங்களை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது.

இக் கழகங்கள், நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவை அரசுக்கே சொந்தமானவையாகும். தற்போது அரசுப் போக்கு வரத்துத் துறை தவிர, வேறு ஆறு போக்குவரத்துக் கழகங்களும் உள்ளன. அவையாவன:

பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், ஆகியவையாகும். கடைசியாகக் குறிப்பிட்ட நிறுவனம் 1974 ஜனவரி 1-ஆம் நாளில் அமைக்கப்பட்டது. இந்தப் பல்வேறு கழகங்கள் நிதி நிலையிலும் பிற வகையிலும் நல்ல நிலையில் உள்ளன.

சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் ஆகிய மூன்று கழகங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் நிதி நிலைமை 1972-73-ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. அவை நாட்டிலுள்ள மிகச் சிறந்த பொதுப் போக்குவரத்து நிறுவனங்களின் வரிசையில் இடம் பெற்றிருக்கும். 1973-74-ஆம் ஆண்டில் இந்த 3 கழகங்களும் நியாயமான அளவு ஆதாயப் பங்குத் தொகையை அறிவிக்குமென்று தோன்றுகிறது.

இந்நாட்டில் தோராயமாக 1,00,000 பயணிப் பேருந்துகள் உள்ளன. அவற்றில் சுமார் 9,500 பேருந்துகள் தமிழ் நாட்டில் உள்ளன. தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற முன்னேற்றக் கொள்கையைச் செயற்படுத்துவதன் மூலம் மேற் குறிப்பிட்ட 9,500 பேருந்துகளில் சுமார் 3,900 பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து முறையின்கீழ் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டுள்ளன. இது 40 சத வீதத்திற்கு மேலாகும். கூடிய விரைவில் பயணிப் பேருந்துகள் முழுவதையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்பதே தமிழக அரசின் நோக்கமாகும். குறிப்பிட்ட ஒரு பகுதியில் உள்ள பேருந்துப் பணிகளை நாட்டுடைமையாக்குவது குறித்து அரசு முனைப்புடன் பரிசீலித்து வருகிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் கூடிய விரைவில் மாநில முழுவதிலுமுள்ள பயணிப் பேருந்து போக்குவரத்து பணிகள் முழுவதையும் நாட்டுடைமையாக்கும் நோக்கம் நிறைவேறும் என்று நம்பப்படுகிறது.

## தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை

1972 சனவரித் திங்கள் 1-ஆம் நாள் அன்று பல்லவன்



போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கியதன் காரணமாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் துறையிடமுள்ள பேருந்துகளில் 45 பேருந்துகளை எடுத்துக் கொண்டு 'அண்ணா போக்குவரத்துக் கழகம்' என்ற மற்றொரு கழகமும் செயலுக்கு வந்தது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலிருந்து 300 பேருந்துகளையும், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து 100 பேருந்துகளையும் கொண்டு 1974 சனவரித் திங்கள் 1-ஆம் நாளில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டது. ஆகவே, இத் துறையில் தற்போது 700-க்குச் சற்று அதிகமாகப் பேருந்துகள் மட்டுமே உள்ளன. எனினும், இந்த ஆண்டு இறுதியில் சுமார் ஒரு கோடி ரூபாய் நிகர ஆதாயம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் இத்துறை சுமார் ரூ. 41 இலட்சத்திற்கு மேற்பட்ட ஆதாயத்தை ஈட்டியது. நீள் தொலைவு வழித்தடங்கள் சிலவற்றில் மின்னல் வேகப் பேருந்துகளையும் சொகுசுப் பேருந்துகளை நடத்தத் தொடங்கியது, இத்துறையின் சிறப்பான அம்சமாகும். பிராட்வேயில் உள்ள தனது பேருந்து நிலையத்தில் பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுவதற்கான திட்டங்களுக்குத் துறை இறுதி வடிவம் கொடுத்துள்ளது. இத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். இக்கட்டடத்தில் பயணிகளுக்கு அவர்கள் பொருள்களை வைப்பதற்கான அறை, துயிலிடம், சிற்றுண்டி விடுதி, ஓய்வு அறை முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். இக் கட்டடத்தில் உபரியாக உள்ள இடங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் துறைக்கு நல்ல ஆதாயமும் கிடைக்கும்.

விரைவுப் பேருந்துகளின் எண்ணிக்கையை 10 சதவீதமும், மாவட்டப் பேருந்துகளின் எண்ணிக்கையை 6 சதவீதமும் பெருக்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நீள் தொலைவு வழித்தடங்களில் மட்டும் புதிய பேருந்துகளே ஓடுகின்றன. தற்போது மூன்றாண்டுகளுக்கு ஓடியுள்ள பேருந்துகள் ஒரு சிலவே உள்ளன. ஏனைய பல்வேறு பேருந்து நிலையங்களில் பயணிகளுக்கு வசதிகள் அளிக்கவும் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

**பல்லவன் போக்குவரத்துக் கழகம்**

உலகெங்கிலும் உள்ள பெருநகர்ப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அதிக விரயம் ஏற்பட்டுள்ளது என்பது அனைவரும் நன்கு அறிந்ததே. பல்லவன் போக்குவரத்துக் கழகம் இதற்கு விதி விலக்கல்ல. இப்பணி அவ்வாறு உள்ளது. இது தவிர்க்க முடியாததாகும். இக்கழகம் 1972 சனவரி 1 ஆம் நாளன்று செயலுக்கு வந்தது. 1972 சனவரி 1 ஆம் நாளிலிருந்து 1973 மார்ச்சு 31 ஆம் நாளோடு முடிவடைந்த முதல் 15 மாதங்களுக்கான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டதில் ரூ. 93.69 இலட்சம் விரயத்தைக் காட்டியுள்ளன. தேய்மானத்திற்காக ரூபாய் 1,26.66 இலட்சமும் வட்டிக்காக ரூ. 19.6 இலட்சமும் ஒதுக்கிய பின்னர் இந்த விரயம் ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டில் (1973-74) தேய்மானம் குறித்து ரூ. 95.30 இலட்சமும் வட்டிக்காக ரூ. 26 இலட்சமும் ஒதுக்கிய பின்னர் துறைக்கு ஏற்படும் விரயம் ரூ. 83.94 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மாநில அரசு முடிவு செய்த கட்டண அமைப்பின்கீழ், துறை நடத்துகின்ற பேருந்துப் பணியைப் பொறுத்து கழகத்தின் செயல்திறனைப் பார்க்க வேண்டும். செலவு பெருகி வருவதைக் கருத்திற்கொண்டு, கட்டண வீதத்தை உயர்த்தத் துறைக்கு எவ்வித அதிகாரமுமில்லை. 1973-74-ல் விரயம் ரூ. 83.94 இலட்சமாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்க, கட்டண வீதங்களை மாற்றியமைக்காததினால் மட்டும் ரூ. 78.47 இலட்சம் விரயம் ஏற்பட்டது. செலவு உயர்ந்துள்ள போதிலும், கழகம் ஆதாயமோ, இழப்போ இல்லாத நிலையை அடைந்துள்ளது.

கழகம் அமைக்கப்பட்டபோது அதனிடம் 1,282 பேருந்துகள் இருந்தன. இந்த ஆண்டு இறுதியில் இந்த எண்ணிக்கை 1,430 ஆகப் பெருகும் என்று தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் செயல் நடவடிக்கையையும் பராமரிப்புப் பணியையும் சீரமைப்பதற்கு எப்போதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. கழகத்தின் பணிமனை செவ்விய முறையில் செயல்படும் பொறுப்பை கிளை மேலாளரிடம் ஒப்படைக்கும் பொருட்டு நிர்வாக அமைப்பும் சீரமைக்கப்பட்டுள்ளது.

கழகம் செயல்படும் முறையில் புதிய உத்திகள் கொண்டு வரப்பட்டுள்ளன. ''வசூல் ஊக்கத் தொகைத் திட்டம்'' அதில் ஒன்றாகும். இத்திட்டத்தின்கீழ், வசூலில் ஒரு சதவீதம் போக்குவரத்துப் பணியாளர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியோரிடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இப் புதிய திட்டம் நல்ல பலனை அளித்துள்ளது.

பயணிகளிடம் பயணத் துணைவர்கள் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதாக கடந்த காலத்தில் அடிக்கடி புகார் கூறப்பட்டது. போக்குவரத்துப் பணியாளர்கள், பயணிகளிடம் நடந்து கொள்ளும் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டு அதனை மனமாரப் பாராட்டுகின்றனர். இத் திட்டத்தினால் வசூல் ஏறத்தாழ 10 சத வீதம் உயர்ந்துள்ளபோதிலும், பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையும் அளவுக்கு மீறி பெருகியுள்ளது. இப் பிரச்சினையைக் கழகம் நன்கு அறியும். மேலும் கூடுதல் பேருந்துகளை விடுவதற்குத்



துறை இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறது.

மாநகரில் ''நேரடி இணைப்பு வழித் தட'' முறையும் கொண்டு வரப்பட்டுள்ளது. பயணிகள் போக்குவரத்துக் குறைவாக உள்ள பகுதிகளுக்குப் பாதகமின்றி, பயணிகள் போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதிகளில் பயணத் தடவைகளின் எண்ணிக்கை இதனால் உயர்ந்துள்ளது. பராமரிப்புப் பணியின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, வசதியான இடங்களில் புதிய பணி மனைகளைத் தொடங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளிகளின் நலனில் போக்குவரத்துக் கழகத்தினர் அதிக நாட்டம் கொண்டுள்ளனர். ரூ. 8.77 இலட்சம் மூலதனத்துடன் வீட்டு வசதி நிதி ஒன்று கழகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குரோம் பேட்டையில் குடியிருப்புகள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. அரசு திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளது. அத் திட்டத்தின்கீழ் துறையின் தொழிலாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கவும், துறையிலிருந்து கழகத்திற்கு முகமையில் அனுப்பப்பட்ட தொழிலாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கவும் மாநில வீட்டு வசதி வாரியத்திடமிருந்து குடிசை மாற்று வாரியத்திடமிருந்து நிலம் அல்லது வீடு வாங்குவதற்காகவும் தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநரின் பொறுப்பில் ரூ. 10 இலட்சம் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் தொழிலாளர் நலத் துறையால் நடத்தப்படுகிற பயிற்சி வகுப்புகளுக்கும், தொழிலாளர் கல்விக்கான வட்டாரத் தொழிலாளர் நல அதிகாரியால் நடத்தப்படுகிற பயிற்சி வகுப்புகளுக்கும் தொழிலாளர்கள் அனுப்பப்படுகின்றனர். எவ்வளவோ இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் இக் கழகம் செவ்வனே நடைபெற்று வந்துள்ளது.

**சேரன் போக்குவரத்துக் கழகம்**

சேரன் போக்குவரத்துக் கழகம் 1972 ஆண்டு மார்ச்சு திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு பேருந்துப் பணியைத் தொடங்கியது. இக் கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூல




தனம் ஒரு கோடி ரூபாயாகும். அதில் ரூ. 35 இலட்சம் செலுத்தப்பட்ட பங்குத் தொகையாகும். இக் கழகத்திடம் 109 பேருந்துகள் உள்ளன. கடந்த ஈராண்டுகளில் இப் பேருந்துகளின் எண்ணிக்கை நான்கு மடங்காக, அதாவது 410 ஆக உயர்ந்துள்ளது.

அரசு நிறுவனமொன்றின் நிதி நிலைமையைப் பொறுத்தவரையில், நடைமுறை மூலதனத்திலிருந்து கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டே அதன் திறமையைக் கணக்கிட முடியும். சேரன் போக்குவரத்துக் கழகமானது, 1972-73-ஆம் ஆண்டில்தான் முதலீடு செய்த மூலதனத்தில் 20 சதவீதத் தொகையை ஆதாயமாகப் பெற்று தனிப் பெரும் பெருமையொன்றைப் பெற்றுள்ளது.

இந்நாட்டிலுள்ள பொதுத் துறை நிறுவனங்களைச் சேர்ந்த பிற போக்குவரத்து நிறுவனத்தை விட இந் நிறுவனம் பெற்றுள்ள ஆதாயமே மிகவும் அதிகமாகும். நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனங்களில், மூலதனம், நிர்வாகம் ஆகியவற்றில் தொழிலாளர்களும் பங்கு கொள்ளும் திட்டமொன்றை முதன் முறையாகத் தொடங்கியதும் இந்த நிறுவனம்தான். இத் திட்டத்தின்கீழ், தொழிலாளர்களுக்கு 8 சதவீத வட்டி கொண்ட ஈட்டுப் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. அவர்கள் விரும்பினால், 10 ஆண்டுக் காலத்திற்குள் அவற்றை நிலையான வட்டியில்லாப் பங்குகளாகவும் மாற்றிக் கொள்ளலாம். 90 சதவீதத் தொழிலாளர்கள் ஏற்கெனவே இத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். ஈட்டுப் பத்திரங்கள் பெற்ற தொழிலாளர்கள் இருவர், சேரன் போக்குவரத்துக் கழக வாரியத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாய் இருப்பதற்கு இயக்குநர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பணியாளர்களின் ஏற்கெனவே 'வசூல் ஊக்கத்தொகை (Collection Batta Scheme) திட்டத்தின் கீழ் வரும் பயணத் துணைத் தலைவர்கள், வலவர்கள் நீங்கலாக] நன்மைக்காக, ''ஆதாயப் பங்கு திட்டம்'' ஒன்றையும் இக் கழகம் தொடங்கி உள்ளது. இத் திட்டத்தின்கீழ், ஒரு மாதத்தில் கிடைத்த மொத்த வசூலில் 0.5 சதவீதத் தொகையை எல்லாப் பணியாளர்களும் பகிர்ந்து கொள்கின்றனர்; அந்த மாதத்தில் 22 நாட்களுக்குக் குறையாமல் வேலைக்கு வந்திருந்த தொழிலாளர்கள் இத் தொகையைப் பெறுகின்றனர்; ஆனால், இவ்வாறு கிடைக்கும் ஆதாயம் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 10 காசுக்குக் குறைவாக இருக்கக் கூடாது.

இக் கழகம், தன்னுடைய தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. இந்தப் போக்குவரத்துக் கழகம் எந்தத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டி வருகிறதோ அந்தத் தொழிலாளர்கள் நல்கும் ஒத்துழைப்புதான் இக் கழகம் வெற்றிகரமாகச் செயல்பட்டுவரக் காரணமாயுள்ளது. இக் கழகம் 1974-75-ல் பாராட்டத்தக்க நிதி நிலைமையில் இயங்கி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம்**

இக் கழகம், ரூ. 5 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் தொடங்கியது; 1972-73-ல் இத் தொகை 5.25 கோடியாக உயர்ந்தது. இக் கழகத்தில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (Paid up Capital) ரூ. 50 இலட்ச



மாகும். இக் கழகம் தன்னிடமுள்ள பேருந்துகளின் எண்ணிக்கையையும் பயணத் தடவைகளையும், அதிகமாக்கி முன்னேற்றம் கண்டு வருகிறது.

கடந்த ஆண்டில் (1972-73) இக் கழகத்திற்குக் கிடைத்த நிகர ஆதாயம் ரூ. 11.78 இலட்சமாகும்; முதலீடு செய்த மூலதனத்திலிருந்து கிடைத்த ஆதாயம் 18.2 சத வீதமாகும். இவ்வாண்டு இன்னும் முடியாத காரணத்தால் இவ்வாண்டின் இறுதிக் கணக்குகள் இன்னும் முடிவு பெறவில்லை. எனினும், 9 மாதங்களில் கிடைத்த ஆதாயம் ரூ. 5,60.51 இலட்சமாகும்; தேய்மானத் தொகையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் முன்னர் கணக்கில் வரும் மொத்த செலவுத் தொகை ரூ. 4,94.31 இலட்சமாகும் ; இதன் மூலம் கிடைக்கும் மொத்த ஆதாயம் ரூ. 66.20 இலட்சமாகும். பேருந்து ஒன்றுக்கு ரூ. 49.23 இலட்சத்தைத் தேய்மானத் தொகையாகக் கணக்கில் கொண்ட பிறகு 9 மாதக் காலத்திற்குக் கிடைக்கும் நிகர ஆதாயம் ரூ. 16.97 இலட்சமாகும்.

முதலில் இக் கழகத்தின் செயல் வரம்பு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களாகும். 1974 ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 1 ஆம் நாள் முதற் கொண்டு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டதன் காரணமாகத் திருநெல்வேலி மாவட்டப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகள் அக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன; சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடன், இம் மாவட்டத்திலுள்ள 106 பேருந்துகளும் சொத்துக்களனைத்தும் அப்புதிய கழகத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டன. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தாமாகவே ஒப்படைக்க முன்வந்த வழித்தடங்களிலிருந்து 150 பேருந்துகளை விலைக்குப் பெற்றுக் கொண்ட பெருமையும் இக் கழகத்தைச் சாரும். கடந்த ஈராண்டுகளில், 182 புதிய பேருந்துகளை இயங்கச் செய்து பேருந்துகள் தற்காலத்தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

பங்கு மூலதனம், நிர்வாகம் ஆகியவற்றில் தொழிலாளர்கள் பங்கு கொள்ளும் திட்டத்தை இக்கழகம் 1973-ஆம் ஆண்டு சூன் திங்கள் 10-ஆம்



நாளில் தொடங்கியது. சுமார் 400 தொழிலாளர்கள் ஈட்டுப் பத்திரங்கள் பெற்றுள்ளனர் ; அவற்றை நிலையான வட்டி இல்லாப் பங்குகளாக மாற்றுவதன் மூலம் அவர்கள் உரிமையாளர்களாகின்றனர். இந்த ஆண்டிலும் இக் கழகம் பேருந்துகளைத் திறம்பட இயக்கி வருகிறது.

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்.

இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாகும்; செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 48 இலட்சமாகும். சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம் போக்குவரத்துப் பொறுப் பேற்றுக் கொண்டபோது 176 பேருந்துகளைப் பெற்றிருந்தது; தற்போது இப்பேருந்துகளின் எண்ணிக்கை 313 ஆக உயர்ந்துள்ளது. பொறையார் சக்தி விலாஸ் நிறுவனத்திடமிருந்த 50 பேருந்துகளும் 1974-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 9-ஆம் நாள் முதற்கொண்டு இக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. 1972-73-ல் இக்கழகம் ரூ. 3.25 இலட்சம் நிகர ஆதாயம் பெற்றது; இது நடைமுறை மூலதனத்தில் 14.5 சதவீத ஆதாயமாகும். நடப்பாண்டில், இக்கழகத்திற்கு ரூ. 12 இலட்சத்திற்கு மேல் நிகர ஆதாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்ணா போக்குவரத்துக் கழகம்

இக்கழகம் 45 பேருந்துகளையும் அனுமதிக்கப்பட்ட மூலதனமாக ஒரு கோடி ரூபாயும் மட்டுமே பெற்றுச்செயல்படத் தொடங்கிய போதிலும், ஓராண்டுக் காலத்திலேயே இப்பேருந்துகளின் எண்ணிக்கை இரு மடங்காகி உள்ளது. கால அளவு மிகவும் குறைவாக இருப்பதால், இக்கழகத்தின் ஆதாய நிலைமையைப் பொறுத்த வரையில் உண்மை நிலையைக் கணக்கிடுவது மிகவும் கடினமான ஒன்றாகும். எனினும், இக்கழகம் செயல்படும் முதலாண்டில் இதற்கு இரண்டு இலட்சம் என்ற அளவில் சிறிதளவு ஆதாயம் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் சில மாதங்களுக்கு முன்னால் அதாவது 1973-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1ஆம் நாள் செயல்படத் தொடங்கிய புதிய கழகமாகும். இக் கழகம் செயல் வரம்பு திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களாகும். இக் கழகம், தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆகிய இரண்டின் பகுதிகளிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5 கோடியாகும். இக் கழகத்தில் உள்ள வண்டிகளின் எண்ணிக்கை 400 ஆகும்.

மோட்டார் வண்டிகளின் பராமரிப்பு நிறுவனம்.

இந்த நிறுவனம் முன்னர் வருவாய் வாரியத்துடன் இருந்தது. 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. பணியாளர்கள் வண்டி, ஜீப்புகள், வான்கள் முதலான 3,000 அரசு வண்டிகளைப் பராமரிக்கும் பொறுப்பு இக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் கழகத்தின் பணிகளை அதிகப்படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

1974-75-ஆம் ஆண்டுக் காலத்தில் காஞ்சிபுரம், திருச்சி நாகர்கோயில் ஆகிய இடங்களில் மூன்று பெரிய பணிக்களரிகளைத் தொடங்குவதற்கான தொடக்க நடவடிக்கைகள் இவ்வாண்டில் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தக் கழகத்தின் கீழ், சேலம், தஞ்சாவூர், மதுரை, சென்னை ஆகிய இடங்களில் நான்கு மோட்டார் வட்டாரப் பணிக்களரிகளும், ஐந்து பழுது பார்க்கும் நிலையங்களும் உள்ளன. இவை வண்டிகளின் பராமரிப்பைக் கவனிப்ப

தோடு சில பழுது பார்க்கும் பணிகளையும் கவனிக்கின்றன.

வண்டிகளுக்கான உதிரி பாகங்கள் சென்னையில் மொத்தமாக வாங்கப்படுகின்றன. அரசு வண்டிகளுக்குத் தேவையான மின்கலங்களும், டயர்களும் அரசுத் துறைகளுக்கு அவற்றின் வண்டிகளுக்காக வழங்கப்படுகின்றன. உதிரிப் பொருள்களை வாங்குதல், வண்டிகளின்சிறந்த பராமரிப்பு, வாங்கிய பொருள்களுக்கு விரைவில் பணம் கொடுத்தல் ஆகியவற்றைக் கவனிப்பதற்காகத் தலைமை இட அலுவலகத்தில் உள்ள நிருவாக அமைப்பு சீர் செய்யப்பட்டுள்ளது. இக் கழகம், ஆவடியிலும், விக்கிரவாண்டியிலும் பணிக்களரிகளை நிறுவி பராமரிப்பது குறித்து முறையே காவல் துறைக்கும் கேர் (Care) நிறுவனத்திற்கும் ஆலோசனை நல்கியுள்ளது. இந்தப் பணிகளரிகளைத் தொடங்குவதற்கு வசதி செய்யும் பொருட்டு சில அலுவலர்கள் முகமையில் அனுப்பப்படுவார்கள்.

**ஐந்து இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டம்.**

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஐந்து இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தை, இந்தப்போக்குவரத்துக் கழகங்கள், தமக்கு முழு அளவில் பயனுடையதாக்கிக் கொண்டன. மத்திய அரசின் துவக்கத் திட்டத்தில், தமிழ் நாடு அரசின் போக்குவரத்துத் துறை சில சட்டத் திருத்தங்களை எடுத்துக் கூறியது. இவை மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருத்தி அமைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட அமைப்பின்படி போக்குவரத்துத் துறை இரண்டு துணைப் பொறியியற் கழகங்களை ஏற்படுத்தி பதிவு செய்துள்ளன. மேலும் இரண்டு துணைப் பொறியியற் கழகங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இத் துணைக் கழகங்களைப் பொறுத்த வரையில் பங்கு மூலதனத்தின் 24 சதவீதம் படித்து வேலையில்லாதிருக்கும் பட்டதாரிகளால் மொத்தமாகவோ, தவணை முறைகளிலோ செலுத்தப்படும். 26 சதவீதம் போக்குவரத்துக் கழகத்தால் கொடுக்கப்படும். எஞ்சிய 50 சதவீதத்தை மாநில அரசு வழங்கும். மாநில அரசு இந்த 50 சதவீதத்தை மத்திய அரசிடமிருந்து, பாதித் தொகையை நேரடி மானியமாகவும், பாதியைக் கடனுகவும் பெறுகிறது.

இந்த நான்கு பொறியியற் கழகங்களும் சேர்ந்து பொறியியற் பட்டதாரிகள் 150 பேர்களுக்கும், பொறியியற் பட்டயம் பெற்றவர்கள் 550 பேர்களுக்கும், தொழில்பயிற்சி நிறுவனச் சான்றிதழ் பெற்ற சுமார் 3,000 பேருக்கும் வேலை வாய்ப்பளிக்கும்.

இந்த நான்கு திட்டங்களின் கீழ், மாநில அரசு மூலமாக மத்திய அரசு இக் கழகங்களுக்கு வழங்கும் பங்குத் தொகை ரூ. 15 கோடியாகும். இந்தத் துணைப் பொறியியற் கழகங்களின் பங்கு மூலதனத்தில், 24 சதவீதம் தொழிலாளர்களால் அளிக்கப்படுவதால் அவர்களின் சார்பாக இரண்டு பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட வாரியத்தில் இருப்பர்.

இக் கழகங்கள், பேருந்துகளின் கூடுகள் கட்டுதல், டயர்களைப் புதுப்பித்தல், பராமரிப்பு பணியைச் செய்தல், எஞ்சின்களைப் பிரித்து ஆராய்தல், வண்டிகள் ஓடுவதற்குத் தேவையான உதிரிப் பாகங்களைத் தயாரிக்கத் தொடங்குதல் ஆகிய பணிகளைச் செய்கின்றன. தொடங்கப்பட்ட முதலாண்டில், இந்த நான்கு கழகங்கள் 100 இன உதிரிப் பாகங்களைத் தயாரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யானைக்குப் புரியும் மொழி!



யானை அறிவுடைய விலங்கு. இதற்கு நல்ல நினைவுண்டு. பாகன் சொன்ன சொற்களையும், கையாலும் காலாலும் செய்யும் சைகைகளையும் நன்ருகப் புரிந்து கொண்டு செயல்படும். யானைகளைப் பழக்க, நடத்தி வர இந்திய மாவுத்தர்கள் பயன்படுத்துகின்ற மொழி தான் மிகத் தொன்மையான உலகமொழி என்று கருதப்படுகின்றது. இவர்கள் இந்தி மொழியோ, அராபிய மொழியோ அல்லது பாரசீக மொழியோ பயன்படுத்தவில்லை. ஆதிகாலத்தில்–சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்ருல் குகைகளில் வாழ்ந்து வந்த கற்கால மனிதர்கள் பயன்படுத்தி வந்த மொழியைத்தான் இவர்கள் பயன்படுத்துகிருர்கள். 50,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பழக்கத்தில் உள்ள மொழி இது. யானை இனத்தின் நினைவாற்றலுக்கும் இது ஒரு சான்ருகும். யானை வேறு எந்த மொழியையும் புரிந்து கொள்ள மறுக்கிறதாம்.

## நீர் அம்பு எய்யும் மீன்!



ஜாவா பகுதியில் டாக் சோட்டிஸ் என்ற ஒருவகை மீன் தண்ணீர்த் திவலைகளையே ஆயுதமாகப் பயன்படுத்தி, இரைகளை வீழ்த்துகின்றது. நீரின்மேல் பறந்து செல்லும் வண்டுகளை, நீர்த் திவலைகள் கொண்டு அம்பு எய்தாற்போல் எய்து தண்ணீரில் விழும்படிச் செய்து அவற்றை உட்கொள்ளுகின்றது.

இலங்கைக் கடல் பகுதியில் நிலத்திலும் செல்லக்கூடிய ஒருவகை மீன் உள்ளது. சுமார் ஒரு மைல் தூரம் தரையில் ஊர்ந்து செல்லக் கூடியது இது. சுமார் ஒரு வார காலம் இது தரையில் தங்கி உயிர் வாழ வல்லது.

# வெள்ளைத் துவரை பயிரிடுவீர்!

வெள்ளைத் துவரை, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு, கரும்பு ஆகிய பயிர்களின் வரப்பு ஓரங்களில் நட்டுப் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பயிர் மரவள்ளிக்கிழங்கு, கரும்பு ஆகிய பயிருடன் ஆண்டு முழுதும் வளர்ந்து பலன் கொடுத்து வருகிறது. இதனைப் பல ஆண்டுகளுக்கு நிலையாக விட்டுப் பலன் பெறவும் செய்யலாம். ஆனால் சாதாரணமாகத் துவரைச் செடிகள் காய்த்து முடிந்ததும், அடுத்த பயிர்ச் சாகுபடியின்போது வெட்டப்படுகின்றன.

வெள்ளைத் துவரை விதைகள் சித்திரை, வைகாசி, மாதங்களில் பெரும் வரப்புகள் மற்றும் மரவள்ளிக்கிழங்கு, கரும்பு ஆகியவை பயிரிடப்படும் வயல்களின் ஓரங்களில் 6 அடி இடைவெளியில் ஊன்றப்படுகின்றன. ஏக்கருக்கு சுமார் 300 முதல் 400 செடிகள் வரை சாகுபடி செய்யலாம். இது, மிகவும் சாதாரண மண்ணிலும் செழித்து வளரக் கூடியது. குறைந்த தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. மிகவும் ஈரம் நிறைந்த சதுப்பு நிலங்களில் நன்கு வளர்வதில்லை. இந்தச் செடிகள் வேகமாகவும், நேராகவும் சுமார் 5 அடி உயரம் வரை வளர்ந்து, பின்னர் கிளைக்க ஆரம்பித்து 8 முதல் 10 அடி வரை வளர்வதால் இதர பயிர்களுக்கு எவ்விதக் கெடுதலும் விளைவிப்பதில்லை. இதன் வேர்கள் ஆழமாய்ச் செல்வதால் மற்ற பயிர் வளர்ச்சியும் பாதிக்கப்படுவதில்லை.

இந்தச் செடிகள் ஆவணி, புரட்டாசி மாதங்களில் பூத்து, பிஞ்சுவிட ஆரம்பிக்கிறது. முதிர்ந்த நெற்றுகள் மார்கழி மாதம் முதல் அறுவடைக்குத் தயாராகிவிடுகின்றன. இப்பயிரின் விதைகளைப் பின்பட்டத்தில் அதாவது சித்திரை, வைகாசிக்குப் பிறகு ஊன்றினாலும், மார்கழி மாதத்தில் காய்ப்புக்கு வருகிறது. இவ்வாறு பின்பட்டத்தில் ஊன்றிய செடிகள் செழித்து அதிக உயரம் வளர்வதில்லை. அதனால் அதிக பலனும் கிடைப்பதில்லை. வெள்ளைத் துவரை செவ்வல் மண்ணிலும், சற்று சுண்ணாம்பு கலந்த கருமண் பூமிகளிலும் மிகவும் செழித்து வளர்ந்து நல்ல பலன் கொடுக்கிறது. பூ விடும் காலத்தில் அதிக மழை இருந்தால் இச்செடிகளின் காய்ப்பு பாதிக்கப்படுகிறது. நல்ல முறையில் வளர்ந்து வரும் செடிகளில், ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஒரு கிலோ கிராம் துவரை கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் 300 முதல் 400 கிலோ கிராம் துவரை கிடைக்கிறது. இந்தத் துவரைச் செடிகளில் அடர்த்தியாகக் காய்கள் காய்க்கின்றன. காய்கள் முதிர்ந்து இருக்கக்கூடிய நிலையில் அறுவடை செய்து, சற்று வெய்யிலில் உலர்த்தித் தடியால் அடித்துத் தூய்மைப்படுத்தி விதைகள் பிரிக்கப்படுகின்றன. பிறகு செம்மண் கட்டி உடைத்து, பருப்பாக்கி உபயோகிக்கின்றனர்.

இத்துவரம்பருப்பு தடிப்பாகவும், கனமாகவும் இருக்கிறது. இப்பருப்பு சுவை மிகுந்ததாகவும், எளிதில் வேகக்கூடியதாகவும் இருக்கிறது. ஒரு ஏக்கர் பரப்பின் ஓரங்களில் நடப்படும் செடிகளில் கிடைக்கக்கூடிய துவரை, சாதாரணமாக ஒரு குடும்பத்திற்கு ஆண்டு முழுதுக்கும் போதுமானதாய் இருக்கிறது. இச்செடிகளைப் பெரும் வரப்புகளில் நட்டுப் பாதுகாத்து வந்தால், நிலையான பலன் கிடைக்கும்!

இந்தச் செடிகளைச் சாதாரணமாய் பூச்சி, பூஞ்சாளங்கள் தாக்குவதில்லை. பூத்துக் காய்க்கும் தருணத்தில் சேதம் விளைவிக்கும் புழுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'பி.எச்.சி. 10' சதம் மருந்து தூவுதல் சிறந்தது.

இப்பயிர், வரட்சி தாங்கக்கூடியதாகையால் தோட்டக்கால் நிலங்களில் இது மிகவும் செழித்து வளர்ந்து பலன் கொடுக்க வல்லது. ஆகவே, இதனை எளிதில் பயிரிட்டு நமக்குத் தேவையான துவரம் பருப்பைப் பெறலாம்.

சேலம் மாவட்டத்தில் முக்கியமாய் மரவள்ளிக்கிழங்கு பயிரிடக்கூடிய உழவர் பெருமக்கள் இதனைத் தங்கள் நிலத்தில் அதிகம் பயிரிட்டுப் பயன் அடையலாம். இதனை மற்ற இடங்களிலும் பயிரிட்டுப் பலன் பெறலாம்!

## உப்பில்லாப் பண்டம் குப்பையிலே!

விடுதலைக்கு முன் இந்தியாவில் உப்புத்தேவையை நிறைவேற்றும் பொருட்டு ஓரளவு உப்பு இறக்குமதி செய்யப்பட்டது. அப்போது உற்பத்தி செய்யப்பட்டது, 19 இலட்சம் டன் உப்பு. அதுசமயம் மதிப்பீட்டின்படி ஆண்டொன்றுக்கு 21 இலட்சம் டன் அளவு தேவை இருந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் உப்பு உற்பத்தி 30·76 இலட்சம் டன் அளவுக்கு உயர்ந்தது.

1973-ல் மட்டும் சுமார் 68·6 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாடு, குசராத், மகாராட்டிரம், ராஜஸ்தான் ஆகியவை முக்கிய உப்பு உற்பத்தி மாநிலங்கள் ஆகும்.

தற்போது இந்தியா பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு உப்பு ஏற்றுமதி செய்யும் திறன் பெற்றிருக்கிறது. 1972-ல் 4 இலட்சத்து 35 ஆயிரம் டன் உப்பு ஏற்றுமதியாகிறது. இப்போது இந்தியாவில் நூற்றுக்கும் அதிகமான உப்புக்கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 1948-ல் அவற்றின் எண்ணிக்கை நான்கு மட்டுமே இருந்தது.



# பருத்திக்கு எத்தனை முறை மருந்து தெளிக்கவேண்டும்?

தமிழ்நாட்டில் பருத்திச் செடியை அசுவணி, பேன், தத்துப்பூச்சி போன்ற சாற்றை உறிஞ்சும் பூச்சிகளும், காய்களைத் துளையிடும் காய்ப்புழுக்களும் தாக்கி, ஏறக்குறைய 40 முதல் 50 சதவீத சேதத்தை உண்டாக்குகின்றன. தற்பொழுது வேளாண் பெருமக்கள் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த பருத்தி முளைத்த ஒரு மாதந் தொடங்கி, 4 முதல் 7 நாட்கள் இடைவெளிவிட்டு, 17 முதல் 20 முறைகள் பூச்சி மருந்துகளைத் தெளிக்கின்றனர். ஆனால் ''இவ்வளவு முறைகள் பூச்சி மருந்து தெளிப்பது தேவைதானா? இது உண்மையிலேயே அதிக இலாபம் வருமளவிற்குப் பருத்தி விளைவை அதிகரிக்கின்றதா?'' என்ற வினாக்களும் உடனே எழுகின்றன. இதற்கு விடை கூறவும், பருத்திக்குச் சரியான-அதே சமயம் போதுமான அளவு-பயிர்ப் பாதுகாப்பு முறையை வேளாண் குடிமக்களுக்கு எடுத்து கூறவும் கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால், கோவை மாவட்டம் சங்கனூரில், திரு. கே. சுப்பையா என்ற உழவரின் நிலத்தில் கடந்த 1973 ஆகஸ்ட் பருவத்தில், ஒரு செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. பூச்சிஇயல் துறையினரால் பருத்தி பயிர்ப்பாதுகாப்பிற்குப் பரிந்துரை செய்யப்படும் 11 தடவை மருந்து தெளித்தலையும், உழவர்கள் மேற்கொண்டு வரும் 17 முதல் 20 தடவை மருந்து தெளித்தலையும் இச்செயல் விளக்கத்தில் ஒப்புநோக்கப்பட்டது. இச்செயல் விளக்கத்தின் முடிவு மற்றும் அதனால் ஏற்பட்ட நிகர இலாபம் முதலியவைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| உழவரின் பெயர் | ... | திரு. கே. சுப்பையா |
| இடம் | ... | சங்கனூர் |
| பருத்தி ரகம் | ... | எம்.சி.யு. 5 |
| கடைசி அறுவடைநாள். | | 25-2-74 |
| நில அளவு | ... | 11.50 சென்ட் |

1. செயல் விளக்கப் பாத்தி (பூச்சியியல் துறையினர் பரிந்துரைக்கும் முறையில் மருந்து தெளித்த பாத்தி)

| எண் (1) | மருந்து தெளித்த நாள் (2) | மருந்தின் பெயர் (3) | மருந்தின் அளவு ஏக்கருக்கு (4) | மருந்துச் செலவு ஏக்கருக்கு (ரூபாய்) (5) |
|---|---|---|---|---|
| 1 | 7- 9-73 | மெட்டாசிஸ் டாக்ஸ் 0.1 சதம் | 750 மில்லிலிட்டர் | 46.87 |
| 2 | 21- 9-73 | ,, | ,, | 46.87 |
| 3 | 3-10-73 | லியோடாக்ஸ் | 1.5 லிட்டர் | 33.00 |
| 4 | 9-10-73 | செவிமால் | 1 கிலோ | 19.60 |
| 5 | 20-11-73 | ,, | ,, | 19.60 |
| 6 | 2-11-73 | ,, | ,, | 19.60 |
| 7 | 9-11-73 | ,, | ,, | 19.60 |
| 8 | 20-11-73 | ,, | ,, | 19.60 |
| 9 | 1-12-73 | ,, | ,, | 19.60 |
| 10 | 11-12-73 | ,, | ,, | 19.60 |
| 11 | 21-12-73 | ,, | ,, | 19.60 |
| | | மொத்தச் செலவு ரூபாய் | | 283.54 |

2. உழவர்முறை பாத்தி (உழவர் பெருமக்கள் வழக்கமாக மருந்து தெளிக்கும் முறையில் மருந்து தெளித்த பாத்தி).

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1 | 3-9-73 | —ரோகார் + பாரத்தால் | 100+100 மில்லி லிட்டர் | 12.70 |
| 2 | 13-9-73 | ,, | 200+200 மில்லி லிட்டர் | 25.49 |
| 3 | 22-9-73 | செவிமால் + மோரோசைடு | 500 கிராம் + 100 மி.லி. | 14.20 |
| 4 | 29-9-73 | கெக்சாசாக்ஸ் | 1 லிட்டர் | 26.20 |
| 5 | 5-10-73 | செவிமால் + மோரோசைடு | 750 கிராம் + 100 மி.லி. | 14.70<br>4.40 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 11-8-73 | நுவக்ரான் + பிளாஞேபிக்ஸ் | 500 மி.லி. + 100 மி.லி. | 42.50 5.50 |
| 7 | 18-10-73 | கெக்சாடாக்ஸ் + ரோகார் | 1 லிட்டர் + 100 மி.லி. | 26.29 5.20 |
| 8 | 25-10-73 | செவிமால் + சல்பர் | 750 கிராம் + 500 கிராம் | 14.70 3.50 |
| 9 | 29-10-73 | தயோடான் + டி.டி.டீ. 50 சதம் | 625 மி.லி. + 500 கிராம் | 18.75 6.50 |
| 10 | 6-11-73 | கெக்சாடாக்ஸ் | 1 லிட்டர் | 26.20 |
| 11 | 12-11-73 | தயோடான் + டி.டி.டீ. 50 சதம் | 500 மி.லி. + 500 கிராம் | 15.80 6.50 |
| 12 | 19-11-73 | பாராகுளார் + டி.டி.டீ. 50 சதம் | 1 லிட்டர் + 250 கிராம் | 26.00 3.25 |
| 13 | 24-11-73 | பாராகுளார் + டி.டி.டீ. 50 சதம் | 1 லிட்டர் + 250 கிராம் | 26.00 3.25 |
| 14 | 2-12-73 | சிப்கோம்பி 40 | 1 லிட்டர் | 25.00 |
| 15 | 5-12-73 | ,, | 1 லிட்டர் | 25.00 |
| 16 | 19-12-73 | செவின் + செல்தேன் | 750 கிராம் + 80 மி.லி. | 30.40 |
| 17 | 26-12-73 | சிப்கோம்பி | 1 லிட்டர் | 25.00 |
| | | மொத்தச் செலவு ரூபாய் ... | | 422.05 |



## இருமுறைகளின் ஒப்பு நோக்கு :—

| எண் | விவரம் | செயல்விளக்கப் பாத்தி (எக்டேருக்கு) | உழவர்முறை பாத்தி (எக்டேருக்கு) |
|---|---|---|---|
| 1 | மருந்து தெளித்த எண்ணிக்கை | 11 | 17 |
| 2 | மொத்த மருந்துச் செலவு ரூபாய் | 632.34 | 1,055.12 |
| 3 | மகசூல் (பருத்தி எடை-கிலோவில்) | 3,220.880 | 3,189.264 |
| 4 | பருத்தி கிலோ ரூபாய் 5.00 என்ற விலையில் மகசூல் ரூபாய். | 16,104.40 | 15,946.12 |
| 5 | மருந்துச் செலவு போக நிகர வருவாய் | 15,412,06 | 14,891.20 |
| 6 | உழவர் முறையைவிட செயல் விளக்கப் பாத்தியில் கிடைத்த அதிக வருவாய் ரூபாய் | 520.86 | |

இச்செயல் விளக்கத்தின் மூலம், 17 முறை மருந்து தெளித்தலால் கிடைக்கும் வருவாய் உழவர்களுக்கு ஏற்பட்ட செலவுக்கு ஏற்ப இலாபத்தைக் கொடுக்க வில்லை என்பது தெளிவாகிறது. எனவே, 11 முறை மருந்து தெளித்தலே சிக்கனமானது என்றும், பூச்சி களை நன்கு கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கின்றது என்றும் தெரிகிறது.

தேவைக்கு மேலாக அதிக அளவு பூச்சி கொல்லி களைத் தெளித்தல் புறத்தூய்மையைக் கொடுப்ப துடன், பூச்சிகளும் மருந்துகளுக்கு எதிர்திறனை அடைய வாய்ப்பளிக்கின்றது. சரியான அளவு பூச்சி கொல்லிகளைத் தெளித்தலால் இவைகள் தவிர்க்கப்படுவதுடன், தற்சமயம் பற்றுக்குறையில் உள்ள பூச்சிக்கொல்லிகளின் வீண்சேதமும் தவிர்க் கப்படும். எனவே, பருத்திக்குக் குறைந்த செலவில் பயிர்ப்பாதுகாப்பு செய்து நிறைந்த வருவாய்ப் பெற, மேற்கூறியவாறு 11 முறை மருந்து தெளிக் கும்படி உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின் றோம்.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# கேளுங்கள் கொடுக்கப்படும்?



வினா : தமிழக முதல்வரால் அண்மையில் அறிவிக்கப்பட்ட பொது மக்கள் ஓய்வு கால ஊதியம் பற்றி தயவு கூர்ந்து விளக்கமாய்த் தெரிவிக்க வேண்டுகிறேன். ஓய்வு கால ஊதியத்தில் சேர விண்ணப்ப நமூனாவை எங்கிருந்து பெறுவது? சந்தா தொகையினை எப்படிச் செலுத்துவது? 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் திட்டத்தில் பங்கு கொள்ள முடியுமா? என்பன போன்ற வினாவிற்குத் தயவு செய்து பதில் தர வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன்.

—பி. கே. சுந்தரராசன்,
1, தெற்குவடம்போக்கி வீதி,
அய்யம்பேட்டை (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை : ஏழை எளிய சாமான்ய மக்களின் வாழ்வை வளமாக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 1974-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 4-ஆம் நாள் தமிழக சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் 1974-75-ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை வைத்து ஆற்றிய உரையில், பொது மக்களும் ஓய்வு கால ஊதியம் பெறுதற்கு உதவும் "சமூகப் பொதுப் பாதுகாப்புத் திட்டம்" பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் !" என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வருவதுடன், பொது மக்கள்—குறிப்பாகக் குறைந்த வருவாய் பெறும் மக்களின்—நலனில் கண்ணுங் கருத்துமாய் உள்ள இன்றைய தமிழ் நாடு அரசு, பொது மக்களும் ஓய்வு ஊதியம் பெறுவதற்கான புதியதோர் திட்டத்தை, இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்துள்ளது!

இது வரை அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தனிப்பட்ட சில நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் மட்டுமே ஓய்வு ஊதியம் (Pension) கொடுக்கப்பட்டு வந்துள்ளது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டப்படி, சாமான்யப் பொ மக்களுக்கும் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு வழி பிறந்துள்ளது!

இப் புதிய திட்டத்தின் கீழ், திங்கள் தோறும் தங்கள் வசதிக்கு ஏற்ற ஒரு குறிப்பிட்டத் தொகையைச் செலுத்தி வந்தால், எல்லா பொது மக்களும் ஓய்வு ஊதியம் பெற இயலும்! எடுத்துக் காட்டாக, இத்திட்டத்தின் கீழ், 30 வயதான ஒருவர் திங்கள் தோறும் 10 ரூபாய் செலுத்தி வருவதாக வைத்துக் கொண்டால், அவருக்கு 55-வது வயதில் இருந்து உயிரோடிருக்கும் வரையில் திங்கள் தோறும் 100 ரூபாய் என்ற வீதத்தில் ஓய்வு ஊதியம் அளிக்கப்படும்.

இத் திட்டத்தின் கீழ் திங்கள் தோறும் ஒரு குறிப்பிட்டத் தொகையைச் செலுத்தி வரும் ஒருவர், இடையிலே இறந்துவிட்டால், அவர் செலுத்தியுள்ள தொகையும், அதற்குரிய வட்டித் தொகையும், அவரைச் சார்ந்தவருக்குக் கிடைத்துவிடும். மேலும், இத் திட்டத்தில் பங்கு பெறும் பொது மக்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவி செய்யலாம் என்பதும் அரசின் ஆய்வில் உள்ளது. இத் திட்டத்திற்கு விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

'இரண்டொரு திங்களில் இத் திட்டம் செயல் வடிவம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்றும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்துள்

விரிவான திட்டம் வெளியிடப்பட்டதும் அது பற்றிய விவரம் 'தமிழரசு' இதழில் வெளியிடப்படும். எனவே, விரிவான திட்டம் தயாரிக்கப்பட்ட பிறகே, தங்களுடைய வினாக்கள் அனைத்திற்கும் பதில் அளிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



வினா : சென்ற கார்பட்டத்தில் கரிகாலன் நெல் விளைவித்தோம். தண்ணீர் தட்டுப்பாட்டினால், நெல் திரட்சி இல்லாமல் சிறுத்து இருந்தது. அதையே விதையாகத் தயாரித்து வைத்திருக்கிறோம். அவ் விதையைப் பரிசோதித்துப்பார்த்ததில் 75 சத முளைப்புத் திறன் இருக்கிறது. அந்த விதையையே இந்தக் கார்ப்பட்டத்தில் நாற்று விட்டு நட்டால், திரட்சியான விதையில்காணும் மகசூல் போல் காணுமா? அல்லது தண்ணீர்த்தட்டுப்பாட்டினால் மணி சிறுத்து இருப்பதால், மகசூல் பாதிக்குமா?

'பிசானம்' பருவத்தில் 'ஐ. ஆர். 8', 'ஜெயா', 'ஐ. ஆர். 20' ஆகிய ரகங்களைச் சாகுபடி செய்து அறுவடை செய்ததில், கருஞ்சாவியாகி 15 சத வீதம் சாவியாகிவிட்டது. இலை நாவிலும் கரும்பொட்டு விழுந்து இருந்தது. நாங்கள் இரு தடவை பூச்சிக் கொல்லி

மருந்தும், நோய் மருந்தும் தெளித்து இருக்கிறேம். இந் நிலையில் கருஞ்சாவி விழுந்தது நோயினுலா அல்லது பூச்சியினுலா? இனி இவ்வாறு ஏற்பட்டால் என்ன மருந்தைப் பயன்படுத்தலாம்?

—அ.மு. அகமது முகிதீன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
ஆழ்வார் திருநகரி,
நெல்லை மாவட்டம்.

**விடை :** உயர்ந்த மகசூல் பெறுவதற்கு விதையே மூல ஆதாரமானது. சிறந்த நெல் விதை எனப்படுவது 97 சதம் தூய்மையானதாகவும், 95 சதம் வரை முளைப்புத் திறன் கொண்டதாகவும் இருக்க வேண்டும். தண்ணீர் தட்டுப்பாட்டினுல் நெல் மணி திரட்சி இல்லாமல் சிறுத்துக் காணப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளதால். தங்களிடம் உள்ள 'கரிகாலன்' நெல் ரக விதைகளை நாற்று விட பயன்படுத்துதல் சிறந்ததல்ல! ஏனெனில், திரண்டு முதிர்ச்சி பெருத விதைகள் முளைத்தாலும், பயிர் செழித்து வளராது; மகசூல் பெருகாது. நல்ல திரட்சியான விதையாக இருந்தால், 70 சத முளைப்புத் திறன் இருந்தாலும், விதைக்கலாம். எனவே, தங்களிடம் உள்ள 'கரிகாலன்' விதைகள் 75 சத முளைப்புத் திறன் பெற்றிருந்தாலும், திரட்சி இல்லாமல் சிறுத்துக் காணப்படுவதால், அவ் விதைகளைப் பயன்படுத்தி நாற்று விடுதல் பயனுடையதல்ல! அவ் விதைகளை நாற்று விட்டு நட்டால், மகசூல் கண்டிப்பாகக் குறைந்துவிடும்! எனவே, உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து தரமான 'கரிகாலன்' நெல் விதைகளை வாங்கி விதைப்பதே நல்லது.

தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, தாங்கள் பிசானம் பருவத்தில் பயிரிட்ட 'ஐ.ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'ஜெயா' முதலிய நெல் இரகங்களை 'இலைப் புள்ளி' (Helminthosporium leafspot) நோய் தாக்கியிருக்கும் என்று நம்புகின்றேம். இருப்பினும் நேரில் பார்க்காமல் அல்லது அறிகுறிகள் அனைத்தையும் அறியாமல் திட்ட வட்டமாக என்ன நோய் என்று குறிப்பிடுவது நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று நம்புவதற்கு இல்லை. இந்த ஆண்டில் தங்கள் நெற்பயிரில் இந்த நோய் காணப்படின் உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம், தாக்கப்பட்ட பயிரில் ஒரு சிலவற்றைக் கொண்டு போய் காட்டி என்ன நோய் என்பதை அறிந்து, அவர் கூறும் முறையில் மருந்து தெளிப்பதே சிறந்தது. நீங்களும், 'இலைப் புள்ளி' நோயைப் பற்றி முழு விவரத்தையும் அறிந்து கொள்வது அவசியமாதலின், கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்துள்ளோம் :

### இலைப்புள்ளி நோயின் அறிகுறிகள்

1. இலைகளில் மையம் கருமையாக உள்ள நீண்ட செங்கல் வடிவ பழுப்பு நிறப் புள்ளிகள் காணப்படும். சில சமயங்களில் இப் புள்ளிகள் முட்டை வடிவத்திலும் இருக்கும்.

2. ஆரம்பத்தில் சிறியதாக இருக்கும் புள்ளிகள் நாளடைவில் பெரியதாக ஆகிவரும்.

3. இலைக் காம்புகளிலும் மேற்கூறிய புள்ளிகள் காணப்படும். கதிர் வெளியே வர முடியாதபடி அமுங்கி இருக்கும்.

4. கதிரின் கழுத்துப் பாகம் பழுப்பு நிறமாய் மாறி இருக்கும்.

5. கதிரிலுள்ள மணிகளில் கருமை நிறப் புள்ளிகள் காணப்படும்.

6. மணிகள் கருப்பாகவும், சுருங்கியும், அரைகுறையாகவும், பதராகவும் காணப்படும்.

7. நாற்றங்காலில் திட்டுத் திட்டாக நாற்றுகள் காய்ந்து விடும்.

இந்நோய் 'ஹெல்மின்தோஸ்போரியம் ஒரைசே' என்னும் பூஞ்சாளத்தால் ஏற்படுகிறது. இந் நோய், விதைகளின் மூலம் பரவுகிறது. நட்ட பயிரிலிருந்து ஓரளவு காற்றின் மூலம் பரவுகிறது. சாம்பல் சத்து வயலில் குறைந்திருந்தாலும், நெற்பயிர் இந் நோயின் தாக்குதலுக்கு உட்படும். கதிர் விடும் சமயத்தில் இந் நோய் அதிகமாகப் பரவும்.

### இலைப்புள்ளி நோய்த் தடுப்பு

1. விதைகளின் மூலம் பரவுவதைத் தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் 'அக்ரசான்' போன்ற கரிம பாதரசக் கலவை மருந்தையோ அல்லது திராம் (டீ. எம். டீ. டி.) அல்லது 'கேப்டான்' போன்ற பூஞ்சாள மருந்தையோ கலந்து வைத்திருந்து, பிறகு முளை கட்டி விதைக்க வேண்டும்.

2. நடவு செய்த பிறகு 'ஐ. ஆர்.' இரகங்களுக்கு 'டைத்தேன் எம். 45' போன்ற 'டைத்தியோ கார்பமேட்' மருந்தில் 400 கிராமையும், மற்ற இரங்களுக்கு 500 கிராம் தாமிர பூசணக் கொல்லியையும், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து முன் தடுப்பாகத் தெளிக்க வேண்டும்.

3. 'ஹினோசான்' (Hinosan) என்ற மருந்தில் 300 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாதம் ஒரு முறையாக மூன்று முறை தெளிப்பது சிறந்தது.

மேற்கூறிய வகைகளில் இந்த ஆண்டில் முன் கூட்டியே நோய்த் தடுப்பு முறைகளை மேற்கொள்ளுங்கள்.



**வினு** : நான் எனது நிலத்தில் டி. எம். வி. 10 என்ற புது இரக மணிலா பயிர்செய்து உள்ளேன். 12—3—74 அன்று தான், இறைவைப் பயிராக ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது டி.எம்.வி. 10 மணிலா பயிர் செய்யப் பருவமா? காலந்தாழ்ந்து பயிர் செய்திருப்பதாக நான் கருதுகிறேன். அவ்வாறு காலந் தாழ்ந்து பயிர் செய்ததினுல் கேடு ஏதாகிலும் விளையுமா? விவரம் வேண்டும்? மேலும் தொடர்ந்து அனுசரிக்க வேண்டிய விதி முறைகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஜே. நாராயணசாமி,
12, வெங்கட்ரங்கையர் தெரு,
கடலூர்—607003.

**விடை** : 'டி.எம்.வி. 10' மணிலா இரகம், ஜுலை — ஆகஸ்ட் மாதங்களில் மானுவாரியாகப் பயிரிடுவதற்கே ஏற்றது. இந்த இரகம் இறைவைக்கு ஏற்றதல்ல! மானுவாரிக்கு மட்டுமே ஏற்ற இரகத்தை இறைவையில் பயிர் செய்தால் மகசூல் பெருமளவில் குறைந்துவிடும்! பருவம் தவறிப்பயிர் செய்தால், பயிர் செழிப்பாக வளராது; அப்படி வளர்ந்தாலும் தழை மிகுதியாக வளர்ந்து காய்ப்புத்திறன் குன்றிக் காணப்படும். தாங்கள் மார்ச்சு மாதத்தில் 'டி. எம். வி. 7' அல்லது 'டி. எம். வி. 2' என்ற இரகங்களையே இறைவையில் பயிரிட்டிருக்க வேண்டும். ஆனுல் தவருக 'டி. எம். வி. 10' ரகத்தைப் பயிரிட்டுள்ளீர்கள். தெரியாமல் செய்யும் தவறு, சில நேரங்களில் நன்மையையும் தரக்கூடும்! அந்த வகையில் 'டி. எம். வி. 10' இரகம் தங்களுக்கு நன்மையையும் தரக்கூடும்! தாங்கள், தங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அழைத்து சென்று பயிரைக் காட்டி, அறிவுரை பெறுவதே நல்லது.

இந்த இரகம் இறைவையில் தங்களுக்கு நல்ல பயன் தருமானுல், தயவு செய்து எங்களுக்கு தெரிவிக்கவும்.



**வினு**: நான் எங்கள் நன்செய் நிலத்தில் 'பொன்னி' என்ற நெல் இரகத்தைப் பயிர் செய்யலாம் என்று இருக்கிறேன். ஆதலால் பொன்னி பயிர் செய்வதற்குரிய பட்டம், வயது, விதை அளவு, உர அளவு, மகசூல் ஆகியவற்றைத் தெரியப் படுத்தவும். இது தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற ரகமா?

—ஆர். நாராயணன்,
ஆனந்தூர் (அஞ்சல்),
ஊத்தங்கரை வட்டம்,
தர்மபுரி மாவட்டம்.

**விடை** : தருமபுரி மாவட்டத்தில் 'பொன்னி' என்ற நெல் இரகத்தைச் சம்பா (ஜுலை—ஆகஸ்ட் முதல் டிசம்பர்—ஜனவரி வரை) பட்டத்தில் பயிரிடலாம். இதன்வயது 140 நாட்களாகும். ஒரு ஏக்கர் 'பொன்னி' பயிரிட 18 கிலோ விதையை 10 சென்ட் பரப்பில் நாற்று விட வேண்டும். நாற்றுகளை 24 முதல் 26 நாட்களில் நட்டு விட வேண்டும். 'பொன்னி' நெல் பயிரிட ஏக்கருக்கு 25 கிலோ தழைச் சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவற்றை அடியுரமாக இட வேண்டும். 25 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இட வேண்டும். நடவு செய்த 20-வது நாளில் பாதி தழை உரம், 50-வது நாளில் பாதி தழை உரம் ஆக இரு முறை மேலுரமாக இட வேண்டும். இந்த இரக நெல் ஏக்கருக்கு 2,250 கிலோ வரை மகசூல் தரவல்லது. இது தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற நெல் இரகமேயாகும்.




**வினு** : எங்கள் வட்டாரம் அதிகமாக மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் பகுதியாகும். மர வள்ளி இரகம், பத்து மாத வயது. பனிரெண்டு மாத வயது ஆகியவை. இவைகளில் ஆரம்பத்தில் முளைக்கும்போது இலைகள் சுருங்கி வெளிறிய நிறத்தில் இருக்கிறது. இதற்கு என்ன பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும்? இதைக் கட்டுப்படுத்த என்ன பயிர் பாதுகாப்பு முறையினைக் கையாளுவது என்பதை அறிய எங்கள் வட்டார விவசாயிகள் ஆவலாக உள்ளனர்.

—சி. பழனியப்பன்,
ஊர்நல உதவியாளர்,
பேளுக்குறிச்சி,
சேந்தாமங்கலம்வட்டாரம்,
சேலம் மாவட்டம்.

**விடை** : தாங்கள் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, தங்கள் பகுதியில் மரவள்ளிக் கிழங்கை 'மொசைக்' (Mossaic) என்னும் வைரஸ் நோய் தாக்குகிறது என்று நம்புகின்ருேம். இந் நோய் சேலம், தருமபுரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகம் காணப்படுகிறது. சமீபத்தில், சேந்தமங்கலம், நாமகிரி பேட்டை ஆகிய வட்டாரங்களில் இந் நோயினுல் சுமார் 74 சதம் அளவுக்கு மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி பாதிக்கபட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாக இந் நோயினுல் சுமார் 15 முதல் 20 சதம் மகசூல் குறையும். சேலம் மாவட்டத்தில் இந்நோய் அதிகம் தாக்கிய இடங்களில் அண்மையில் மேற்கொள்ளப் பெற்ற மாதிரி ஆய்விலிருந்து, இந் நோய் தாக்கப்பட்ட செடிகளில், தாக்கப்படாத செடிகளைவிட, 53 முதல் 75 சதவிகிதம் வரை விளைச்சல் குறைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளதுஎன்ருல் இந் நோயின் தீவிரத்தை நன்கு அறியலாம்.

வைரஸ் நோய் தாக்கப்பட்ட செடிகள் குட்டையாகவும், வளர்ச்சி குன்றியும் காணப்படும். முதலில் இலைகளில் உள்ள பச்சையம் மறைந்து இடையிடையே மஞ்சள் நிறமாகவும், சுருங்கியும் காணப்படும். அதிகமாக தாக்கப்பட்ட செடிகளின் இலைகள் மிகச் சிறியதாகவும், அளவில் மிகக் குறைந்தும் வடிவங்கள் மாறியும், வெளிறிய மஞ்சள் நிறமாகவும், இலைக் காம்பு

கள் குட்டையாகவும் காணப்படும். நோய் தாக்கப்பட்ட செடியின் கிழங்குகள் அளவில் மிகச் சிறியதாகவும், எண்ணிக்கையும் நிறையும் குறைந்தும், சரியாக முற்றாத நிலையிலும் இருக்கும். நோய் தாக்கப்பட்ட செடிகளின் கிழங்குகளில் மாவுச் (ஸ்டார்ச்) சத்து குறைவாகவும், நார் போன்ற சக்கைப் பொருள் மிகுந்தும், எடை குறைந்தும் காணப்படும்.

'மொசைக்' நோயானது கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய 'நச்சுண்ணிகள்' (வைரஸ்) என்ற கிருமிகளினால் உண்டாகிறது. இந் நோய் சாதாரணமாக விதைக் குச்சிகள் மூலம் பரவுகிறது. மேலும் 'பெமீசியா' என்ற சிறிய வெள்ளைத் தத்துப் பூச்சிகள் நோய் தாக்கப்பட்ட செடியின் இலையில் அமர்ந்து சாற்றை உறிஞ்சிப் பின், நோய் தாக்காத செடியில் அமருமாயின் அந் நோய் எளிதில் பரவும். நோய் தாக்கப்பட்ட செடியுடன் ஒட்டு செய்வதன் மூலமும் இந் நோய் பரவும். இந் நோயை, வந்த பின் காப்பதைவிட, வருமுன் காப்பதே சாலச்சிறந்ததாகும்.

நோய் தாக்கப்பட்ட செடிகளிலிருந்து விதைக குச்சிகள் எடுத்து உபயோகித்தல் கூடாது. இந் நோயே தாக்காத வயலில் உள்ள குச்சிகளை மட்டுமே விதைக்கு உபயோகித்தல் மிகவும் நல்லது. இதற்காக செடி அறுவடை செய்யு முன்பே—செடி வளர்ந்து கொண்டிருக்கும் பொழுது- நோய் தாக்காத நல்ல குச்சிகளாகப் பார்த்து குறித்து, அவைகளிலிருந்து விதைக் குச்சிகளை எடுத்தல் வேண்டும். இவ்வாறு நோய்த் தாக்காத குச்சிகளாகத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்தினால், இந் நோய் அதிகம் வராமல் தடுத்துவிடலாம்.

நோய் தாக்கப்பட்ட செடிகளை முதலிலேயே கவனித்து, உடனே வேருடன் எடுத்து மற்றச் செடிகளுடன் படாமல் அப்புறப்படுத்தி ஓர் குழியில் இட்டு எரித்துவிடல்வேண்டும்.

இந் நோயைப் பரவச் செய்யும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'டைமிதோயேட்' 0.03 சதம் (ரோகார்) அல்லது என்டிரின் 0.03 சதம் போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றில் 100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து மாதம் ஒரு முறையாக நட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்கள் வரை தெளித்து, இந் நோய்ப் பரவாமல் தடுக்கலாம். மேற்கூறிய வெள்ளைத் தத்துப் பூச்சிகள் இலையின் அடிப்பாகத்தில் காணப்படுவதால் பூச்சிக் கொல்லி மருந்தை இலைகளின் அடிப்பாகங்களில் நன்கு படும்படி காலை வேளைகளில் தெளித்தல் நல்ல பலனைக் கொடுக்கும். இந்நோய் தாக்காத இரகங்கள் பற்றி சேலம் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை செய்யப்பட்டுவருகின்றன. இவைகளில் எச். 165, எச். 226, எஸ். 2371 போன்ற இரகங்களில் இந் நோய் அதிகம் தாக்காது என்பதும், அதிக விளைச்சல் கொடுக்கக்கூடியது எனவும் தற்போது தெரிய வருகிறது.




வினா : எங்கள் சங்கச் சார்பில், 'பசுமைப் புரட்சி' சிறப்பு அடையும் பொருட்டு விவசாயிகளுக்குப் பல விளக்கங்கள் அளித்து வருகிறோம். அதற்கு மிக உதவியாக இருப்பது 'தமிழரசு'. அனைவர் சார்பிலும் மிக்க நன்றி. மேலும் விவசாய சாகுபடி விவரங்களும் இலவச விளம்பர ஏடுகளும், குறைந்த விலை விளக்கங்களும், பத்திரிகைகளும் பெற ஆசைப்படுகிறோம். தாங்களால் முடிந்த அளவு முழு விவரங்களும் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—ஆர். நல்லசாமி,
செயலாளர்,
கருவலூர் உப்பிலிபாளையம் கிராமம் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்,
க. உப்பிலிபாளையம் (அ. நி),
கோவை மாவட்டம்.

விடை : வேளாண்மை பற்றிய எல்லா விவரங்களையும் 'தமிழரசு' இதழில் வெளியிட ஆவன செய்துள்ளோம். 1—7—74 இதழ் வேளாண்மைச் சிறப்பிதழாக வெளியிட ஆவன செய்து வருகிறோம். அவ்விதழ் உங்களுக்கு மிகுந்த பயன் தரக் கூடும். மேலும் சாகுபடி விவரங்கள், இலவச ஏடுகள் முதலியன பெற பின் கண்ட முகவரிக்கு எழுதலாம்:

''மாவட்ட வேளாண்மை அலுவலர் (செய்தி),
வேளாண்மை இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம்,
சென்னை—600005.

'நிலவளம்', 'உரமும் பயிரும்', 'உரவழி', 'உழவர் துணை', 'வானொலிக் கதிர்', 'விவசாயச் செய்திக் கதிர்', 'மேழி', 'ஏர் உழவன்' முதலிய இதழ்களில் வேளாண்மை பற்றிய விவரங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்விதழ்களில் 'வானொலிக் கதிர்', 'விவசாயச் செய்திக் கதிர்', 'உழவர் துணை' ஆகியவைத் தவிர்த்து மற்றெல்லாவற்றிற்கும் சந்தா தொகை செலுத்தினால் மட்டுமே பெற முடியும். இவ்விதழ்களைப் பெற பின் கண்ட முகவரிக்கு எழுதலாம்:

'நிலவளம்'—மத்திய நில வள வங்கி, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600004

'உரமும் பயிரும்'—272/3, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை—600001.

'உரவழி'—'பாக்ட்' நிறுவன அலுவலகம், ஸ்ரீ ராகவம் சீதம்மாள் ரோடு, சென்னை—600018.

'உழவர் துணை'—மதுரை வேளாண்மைக் கல்லூரி, மதுரை.

'வானொலிக் கதிர்'—மக்கள் தொடர்பு அலுவலர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறை, கோட்டை, சென்னை—600009

'விவசாயச் செய்திக் கதிர்'—தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்—3.

'மேழி'—கடலூர்—1, தென் ஆர்க்காடு மாவட்டம்.

'ஏர் உழவன்' — கணபதி (அஞ்சல்), கோவை.

''இந்து'', ''மாலை முரசு'' முதலிய நாளேடுகளிலும் தொடர்ந்து வேளாண்மை பற்றிய விவரங்கள்வெளியிடப்படுகின்றன. அவைகளைப் படித்தும் பயன் பெறலாம்!

உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடமிருந்தும் சில இலவச வெளியீடுகளைப் பெறலாம்.

# நெருக்கி நட்டு நெல்லைப் பார்!

"நெருக்கி நட்டு நெல்லைப் பார்! கலக்க நட்டுக் கதிரைப் பார்!" என்ற சொல்லை மெய்ப்பிக்க நெருக்கி நட்டு, ஒரு ஏக்கரில் 65 கிலோ கொண்ட 75 மூட்டை 'காஞ்சி' நெல் விளைவித்து, ஒரு சாதனை புரிந்துள்ளார் மதுரை மாவட்ட, மதுரை கிழக்குப் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த கள்ளந்திரி கிராம, உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர், திரு. பு. சௌந்திரராஜன் அவர்கள்.

உழவர் பெருமக்களுக்குத் தக்க பயிற்சியளித்து விளைச்சலைப் பெருக்க உதவும் உழவர் பயிற்சி நிலையத்தாருடன் இவருக்கு முதல் தொடர்பு 1971-ஆம் ஆண்டு ஏற்பட்டது. அப்போது இவரது கிராமத்தில் திருமலைச்சாமி என்பவரின் வயலில் தேசிய நிருபணம் அமைத்து 'ஐ.ஆர். 8', ஐ.ஆர். 20', ஆகிய நெல் இரகங்களையும், 'எச்.பி. 3 கம்பு' இரகத்தையும் பயிர் செய்து, அப்போதைக்கப்போது! பண்ணைப் பயிற்சிகள் நடத்தி வந்தனர். அந்தப் பண்ணைப் பயிற்சிகளில் கலந்து கொண்டபோது உழவர் பயிற்சி நிலைய மாவட்ட வேளாண்மை அலுவலருடன் தொடர்பு ஏற்பட்டது. அவரிடம் வேளாண்மை சம்பந்தமாகப் பல சந்தேகங்களைக் கேட்டபோது, அதற்குத் தக்க விளக்கங்களைக் கூறியதுடன், வேளாண்மை நுணுக்கங்களை முறையோடு கற்றுக் கொள்ள உழவர் பயிற்சி நிலையத்தாரால் நடத்தப்படும் நிலையப் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு அறிவுரை கூறினார். அவ்விதமே, மதுரையில் நடந்த நிலையப் பயிற்சியில் இவர் கலந்து கொண்டார். அப்போதே அவர், உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளராக விரும்பிச் சேர்ந்து கொண்டார். அப்போது முதல், உயர் விளைச்சல் பயிர் செய்து, ஓர் அளவு வெற்றியைக் கண்டார். ஆயினும், இவர் மனத்திற்குத் திருப்தி ஏற்படவில்லை. உழவர் பயிற்சி நிலைய மாவட்ட அலுவலர் அவர்கள் இவரது வயலில் பண்ணைப் பயிற்சி வயல் அமைக்க ஒத்துழைப்புக்கேட்டபோது, அளவிலா மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்.

இவர் வயலில், இருபோகம் நெல் மட்டும் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மேலும் இவர் நீண்டகால ரகங்களைப் பயிர் செய்ததால், 2-ஆம் போக சாகுபடிப் பயிருக்குத் தண்ணீர் பற்றாமல் போய் விடும். இவ்வாண்டு குறுகிய காலப் பயிர்களான 'காஞ்சி', 'பொன்னி' ஆகிய நெல் இரகங்களையும், 'அஞ்சுகம்' பாசிப்பயறு ரகத்தையும் பயிரிடுவது எனத் திட்டமிடப் பட்டது. அத்திட்டப்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 'காஞ்சி' நெல் விதை தாங்கி 15-6-73-ஆம் நாளன்று 20 கிலோ விதையுடன் 40 கிராம் 'அக்ரசான்' மருந்து கலந்து, 8 மணி நேரம் வைத்திருந்து பிறகு 24 மணி நேரம் ஊற வைத்து, 12 சென்ட் நாற்றங்காலில் விதைக்கப்பட்டது. நாற்றங்காலுக்கு 3 வண்டி தொழு உரமும், சுமார் 300 கிலோ தழையுரமும் போடப்பட்டு, உழுது விடப்பட்டது. நாற்றுப் பிடுங்குவதற்கு 10 நாட்களுக்கு முன், 5 கிலோ யூரியா இடப்பட்டது. 1-7-73-ஆம் நாளன்று 10 மில்லி லிட்டர் 'பாரதால்' மருந்தும், 25 கிராம் 'டைத்தேன்' மருந்தும், 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கப்பட்டது.

நடவு வயலுக்கு 30 வண்டி தொழு உரமும், 100 வண்டி கரம்பையும் அடிக்கப்பட்டு 8 தடவை உழுதுவிடப்பட்டது. 7.7.73-ஆம் நாளன்று கடைசி உழவு செய்யப்பட்டது. கடைசி உழவில் 17:17:17 'காம்ப்ளெக்ஸ்' 100 கிலோ போட்டு, பரம்பு அடித்து, 8 அடிக்கு ஒருவாய்க்கால் 1 அடி அகலத்தில் அமைத்து, 6 × 4 அங்குல இடைவெளியில் இரண்டு இரண்டு நாற்றுகளாக நடவு செய்யப்பட்டது.

நடவு செய்யும்போது, ஒரு சதுர மீட்டரில் எத்தனை குத்துகள் உள்ளன என்பதை, ஒரு சதுர மீட்டர் சட்டத்தால் ஆராய்ந்தபோது, 66 முதல் 68 குத்துகள் வரை இருந்தன. நடவின்போது தண்ணீர் இலேசாக-1 அங்குல அளவிற்குக் கட்டப்பட்டிருந்தது. மற்றபடி நட்ட 15 நாட்கள் வரை மாவட்ட அலுவலரின் அறிவுரைப்படி, உருட்டுத் தண்ணீரே கட்டப்பட்டு வந்தது.

நடவு செய்த 15-ஆம் நாள் ஒரு களை எடுத்து மண் கிளறி விடப்பட்டது. மேலும் பாலிடாலும், டைத்தேன் மருந்தும் கலந்து தெளிக்கப்பட்டது. 31-7-73 தேதியன்று-அதாவது நட்ட 25-ஆம் நாள்-25 கிலோ யூரியா மேலுரமாகப் போடப்பட்டது. பிறகு, நட்ட 48-ஆம் நாள் 25 கிலோ யூரியா 2-ஆம் தடவையாகப் போடப்பட்டது.

நடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன், நாற்றங்காலில் 10 மில்லி 'பாரத்தால்' 25 கிராம் 'டைத்தேன்' தெளித்ததுடன், நடவு வயலில் கீழே கண்டபடி பயிர்ப் பாதுகாப்பு முறைகளைச் செய்தார்.

1. 22-7-73—பாலிடால் 200 மில்லி லிட்டர் + டைத்தேன் 500 கிராம்.

2. 7-8-73—'என்டோசல்பான்' 250 மில்லி லிட்டர் + 'தையோடான்' 250 மில்லி லிட்டர்.

3. 1-9-73—ஹிலியோடாக்ஸ் 1 லிட்டர்.

தண்ணீர் 3 முதல் 5 அங்குல அளவே கட்டப்பட்டு வந்தது. அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன்பு தண்ணீர் கட்டுவது நிறுத்தப்பட்டது. 3-10-73-ஆம் நாளன்று அறுவடை செய்ததில் 65 கிலோ மூட்டை 60-ம், சூட்டடி அடித்தபோது 15 மூட்டையும் ஆக மொத்தம் 75 மூட்டை நெல் மகசூல் கிடைத்தது.

மேற்கண்ட வெற்றிக்கு முக்கிய காரணம் "நெருக்கி நட்டு நெல்லைப் பார்! கலக்க நட்டுக் கதிரைப் பார்!" என்பதற்கேற்ப நெருக்கி நட்டதும், காலா காலத்தில் உரமிட்டு, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டதுமே யாகும். மேற்கூறியவாறு, 'காஞ்சி' நெல் சாகுபடி செய்ய செலவு ரூபாய் 836-00 ஆகியது. ஆனால் மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 46 வீதம் விற்றுக் கிடைத்த பணமோ ரூபாய் 3,450-00; வைக்கோல் விற்றது ரூபாய் 100-00 ஆகவே, திரு. பு. சௌத்திரராஜன் அவர்கள் 'காஞ்சி' நெல்பயிரிட்டு ஏக்கருக்கு நிகர லாபம் ரூபாய் 2,713-00 பெற்றுள்ளார்.

ஏக்கருக்கு 4,875 கிலோ நெல் விளைத்துள்ள அவர்,

"வயலெங்கும் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடுவோம்; வறுமை எனும் பிணியை ஒழித்திடுவோம்!" என்று மற்ற உழவர் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார்.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

# பசும்பொன்னார்க்கு ஒரு பாலம்

மதுரையில் மீனாட்சி நூற்பு ஆலை அருகே— மதுரை திருப்பரங்குன்றம் நெடுஞ்சாலையில் ரூ. 29 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 'பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மேம்பாலத்தை' 21—4—74 ஞாயிற்றுக்கிழமை முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தியாவில் உள்ள 7-வது முக்கியமான சாலையாக விளங்கும் இந்த நெடுஞ் சாலையில் கட்டப்பட்டுள்ள இந்த மேம்பாலம், மதுரைப் பெரு மக்களின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றினை — திருப்பரங்குன்றம் சென்று வரும் பயணிகளின் நீண்ட காலத் தேவையினை நிறைவேற்றுகிறது. இந்த மேம்பாலம் அமைவதற்கு முன், கடந்து செல்லும் —கடந்து வரும் பயணிகள் இரு புறமும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டும்; இந்தப் போக்குவரத்து இடைஞ்சல் இப்போது முற்றாக நீக்கப்பட்டு விட்டது; அது மட்டுமல்ல, இரயிலிலும், சாலை ஊர்திகளிலும் பயணம் செய்வோருக்கு அந்த இடத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் தவிர்க்கப்பட்டுப் பாதுகாப்பு ஏற்பட்டுள்ளது.




இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 1,574 அடிகளாகும். இப்பாலம் 29 கண்களைக் கொண்டது. 33 அடி இடைவெளியில் 26 கண்களும், 30 அடி 36 அடி இடைவெளியில் இரண்டு கண்களும் அமைக்கப்பட்டுள்ளன. 15-வது கண்ணாகிய ரெயில்வே கண் 132 அடி இடைவெளியில் கட்டப்பட்டுள்ளது. இதன் இடைவெளித் தூரம் அதிகமிருப்பதால், இரண்டு வளைவு உத்திரங்கள் பக்கத்திற்கு ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளன. வளைவின் மைய உயரம் இருபத்தொன்பதரை அடியாகும். வளைவையும் இணைப்பு உத்திரத்தையும் 12 தூண்கள் இணைக்கின்றன. இம் மாதிரி நீண்ட வளைவுகளைக் கொண்ட உத்திரம் இத் துறையினால் கட்டப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இப் பாலத்தின் பாதை அகலம் 40 அடிகளாகும். அதன் இரு பக்கத்திலும் இரண்டடி அளவுள்ள நடைபாதைகள் உள்ளன. உத்திரத்தின்மேல் அமைந்துள்ள பாலத் தளத்தின் கனம் 6 அங்குலமாகும். மேலும், மதுரைப் பக்கமுள்ள பகுதியில் 286 அடிகள் நீளத்திற்குத் தடுப்புச் சுவரும் விருதுநகர்ப் பக்கம் 232 அடி நீளத் தடுப்புச் சுவரும் கட்டப்பட்டுள்ளது.

பிரதான உத்திரங்கள் அனைத்தும் ''முன் தயாரிப்பு உத்திரங்களாகும்'' (Pre-caste concrete) இப் பாலத்தின் இரு பக்கங்களிலும், மெதுவாகச் செல்லும் வாகனங்களுக்காகத் துணை வழிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பாலத்தின் வாகனப் பாதை 12.19 மீட்டரும் (40 அடி) பாதசாரிகள் பாதை 1.4 மீட்டரும் (ஐந்தரை அடி) அமைக்கப்பட்டுள்ளது. சராசரி

இரயில் பாதையை 35 டிகிரி கோணத்தில் கடக்கிறது.

இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 32.3 இலட்சம் என்றாலும், பொதுப் பணித் துறையினரின் சிக்கன நடவடிக்கைகளால் மதிப்பீட்டுத் தொகைக்கு 3 இலட்சம் ரூபாய் குறைவாகவே, அதாவது 29 இலட்சம் ரூபாய் செலவிலேயே இப் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியதாகும்.



இதில் ரூபாய் 10·96 இலட்சத்தை இரயில்வே நிர்வாகமும் 10·67 இலட்சத்தை மதுரை மாநகராட்சியும், மீதியை நெடுஞ்சாலைத் துறையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

தற்போது, ஒற்றை மீட்டர் கேஜ் பாதையின் மீது அமைக்கப்பட்டிருக்கும் இம் மேம் பாலம், எதிர் காலத்தில் இரயில் பாதை அகலப் பாதையாக மாற்றப்படுவதற்கும் அதிகப்படியாக ஒரு அகலப் பாதை பொருந்தும் படியாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்துணைச் சிறப்புக்களையும் கொண்ட இப் பாலம், இந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதோடு அல்லாது, காசியிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லும் பயணிகள் தடையறுத போக்குவரத்தை மேற்கொள்ளப் பெரிதும் துணை புரிகின்றது. இப் பாலத்தினால் இப் பகுதி மக்கள் பயனடைவது மட்டும் இன்றிப் பயணம் மேற்கொள்ளும் நாட்டின் பல்வேறு பகுதி மக்களும் பயனடைகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இந்தப் பாலத்தின் திறப்பு விழாவிற்குப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் தலைமை வகித்தார்; மதுரை மாநகரத் தந்தை திரு எஸ். முத்து அனைவரையும் வரவேற்றார்; உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் மற்றும் திரு கு. திருப்பதி, திரு இராமகிருட்டிணன் ஆகியோரும் உரையாற்றினர்.

முதல்வர் கலைஞர் அவர்கள், பாலத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பாலம் கட்டப்பட்டிருப்பதால் மகிழ்ச்சி உண்டாகிறது; பாலம் கட்டப்படாமல் இடைவெளி அதிகமாக ஆகிக் கொண்டே போயிருந்தால் மகிழ்ச்சிக்குப் பதிலாக வேதனை அதிகமாகி இருக்கும். அந்த வேதனைகளைப் போக்குவதற்காக--மக்களுக்குத் தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு இடைஞ்சல்களைப் போக்குவதற்காக—மதுரை மாநகரத்திலே கடந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாக இரண்டு பெரிய பாலங்களை நாம் கட்டி முடித்திருக்கின்றோம்.

''இரண்டாவதாகக் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைப்பதற்கு மிகப் பொருத்தமான காரணம் இருக்கின்றது. 36 ஆண்டுகளுக்கு முன்பு, இதே இடத்தில்தான் பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், ராஜாஜியின் ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியை நாம் எண்ணிப் பார்த்தால் அவருடைய பெயரால் இந்த இடத்திலே இந்தப் பாலம் அமைவது எவ்வளவு சாலப் பொருத்தமுடையது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணரலாம்.

''இதற்கு முன்பு இந்த மாநகரிலே தேவர் அவர்களுடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைத்த வைபவம் மிகச் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டிருக்கிறது. இன்று அவர் பெயரில் ஒரு மேம்பாலத்தைக் கட்டி முடித்து அதன் திறப்பு விழாவை நடத்தியிருக்கின்றோம்''.

1971-ஆம் ஆண்டு நவம்பர் 8-ல் துவக்கமாகிய பாலப் பணிகள் முடிவுற்று, 21—4—1974 அன்று திறந்துவிடப்பட்டுள்ளது.

# 'சேமிப்பு'

## சிறந்த பழக்கம்!
## திறம் மிகுந்த கலை!

# சேமித்து வைப்பதால் வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது உறுதி!

*சிறுசேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.*

| மாதம் செலுத்தும் தொகை | | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | 360 | — |
| | ரூ. 10 | 720 | — |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | — | 785 |
| | ரூ. 10 | — | 1,570 |

தற்போது 1—7—72-க்குப் பிறகு துவக்கப்பட்ட ரெக்கரிங் டிபாசிட் திட்டத்திற்கு சிறு சேமிப்பு நிறுவனம் புதிய சலுகை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் கணக்கு துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச் சலுகை கிட்டும். சிறுசேமிப்பாளர்களின் நலத்திற்காக இந்த பாதுகாப்புடைய சேமிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

*இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.*

**இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறுசேமிப்புத் துறை, தமிழ்நாடு அரசு.**